புதூஹுல் கைப்

(அகமியங்களின் திறவுகோல்)

புதூஹுல் கைப்

(அகமியங்களின் திறவுகோல்)

ஆண்டகை அவர்களின் முன்னுரை

ஹஜ்ரத் முஹியித்தீன் அப்துல் காதிர் ஜீலானி ஆண்டகை அவர்களின் புத்திரர் ஷைகு ஈஸா அபூ அப்துர் ரஹ்மான் அவர்கள், 'புதூஹுல் கைப்' என்ற இந்த நூலுக்குத் தமது மாண்பு மிக்க தந்தையார் அவர்கள் கூறிய முன்னுரையை உதவியுள்ளார்கள். ஆண்டகை அவர்கள் சொன்ன அந்த முன்னுரையாவது:

முதலாவதாகவும் முடிவானதாகவும் புறமானதாகவும், அகமான தாகவும் உள்ள சகல புகழும் சர்வலோக ரக்ஷகனான அல்லாஹ்வுக்கே உரியதாகும். அவன் சிருஷ்டிகளின் எண்ணிக்கை அளவும் அவன் வார்த்தைகளின் வரம்பளவும் அவன் ஸ்தானத்தின் கனமளவும், அவன் இடத்தின் எல்லையளவும், ஜோடியாகவும், தனியாகவும் உள்ள சகலவற்றின் எண்ணிக்கையளவும், உலர்ந்த, காய்ந்த வஸ்துக்களின் அளவும், நம் ரட்க்ஷகன் படைத்துப் பரப்பியுள்ள சகலவற்றின் அளவும் சகல புகழும் அவனுக்கே உரியதாகும். படைத்துப் பின்னர் சம்பூரணமாக்கிய, வஸ்துக்களை அவற்றின் அளவுக் கேற்பப் படைத்துப் பின் அவற்றுக்கு வழிகாட்டிய, கருணையும் பரிவும் காட்டுகின்ற, உண்ணவும் குடிக்கவும் தருகின்ற, நல்ல கெட்ட அதிர்ஷ்டத்தை உண்டாக்குகின்ற, நன்கொடைகளை நிறுத்திவைக்கின்ற பின்னர் கொடுக்கின்ற அந்த ரட்க்ஷகனுக்கே சகல புகழும், யாருடைய கட்டளையால் ஏழு பலமான வானங்களும் இருக்கின்றனவோ மலைகள் தமது இடத்தோடு பிணையப்பட்டனவாயும், பூமி தன் யதா ஸ்தானத்தினதாயும் உள்ளனவோ, யாருடைய கருணையால் ஒருவரும் ஏமாற்றமடைய நேராதோ, யாருடைய திட்டத்திலும், அமைதியை நிலைநாட்டலிலும், கண்ணியத்திலும் கட்டளையிலும் இருந்து ஒருவரும் தப்ப முடியாதோ, யாருடைய சேவையில் எவரும் வெறுப்படைய நேராதோ, யாருடைய பாக்கிய அனுக்கிரஹத்தை எவரும் அடைவதற்கில்லை என்ற நிலைமையில்லையோ அந்த ரக்ஷகனுக்கே சகல புகழும்! அவன் பரிவு காரணமாக அவனைப் புகழ்கிறோம்; அவன் தரும் பாதுகாவல் காரணமாக அவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

அடுத்து அவனது அன்பர் முஹம்மது (ஸல்) அவர்கள் மீது, அவர்கள் கொண்டுவந்ததைப் பின்பற்றுவோர் வழிகாட்டப்படவும், அதைப் புறக்கணிப்போர் வழிதவறிக் கெட்டழியவுமாக உள்ள சத்தியத்தின் சத்திய நபியின் மீது, இம்மையை விலக்கி, உன்னதமான அவன் நேசத்தை நாடிய அவர்கள் மீது, அவனுடைய சகல ஜீவராசிகளிலுமிருந்து, அவன் சிருஷ்டி முழுமையிலுமிருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட, தான் தோன்றியதுடன் சத்தியம் வரவும் அசத்தியம் மறையவும், தம் ஒளியால் உலகமே பிரகாசமடையவும் செய்த அந்த நபிபெருமான்(ஸல்) அவர்கள் மீது சாந்தியும், அமைதியும் உண்டாவதாக!

அவர்கள் மீது மீண்டும் நாம் நல் ஆசி கூறுவோமாக! அவர்கள் வமிசத்தினரிலும், நற்றோழர்களிலும், அவர்களைப் பின்பற்றியவர் களிலும் உள்ள பரிசுத்தவான்கள்மீது, தம் செயலின் மூலம் தம் இறைவனுக்கு மிகச் சிறந்தவர்களாக உள்ள, தம் சொல்லில் மிகவும் நேர்மையான, அவன் பாதையைப் பின்பற்றுவதில் மிகமிகச் சரியான அவர்கள் மீது அல்லாஹ்வின் அனுக்கிரஹங்களும், பாக்கியமும் இறங்குவதாக! அடுத்து, நமக்கு உணவும் குடிப்பும் தந்துதவி, நன்மைகளை அருளி, பாதுகாத்துக் காப்பாற்றி, ஜீவன் தந்து, நமக்குத் தொல்லை தருவனவற்றை நம்மை விட்டகற்றி–இவை யாவையும் நம்மீது கொண்ட கருணையாலும் அளவற்ற பரிவாலும், அருளனுக்கிரஹத்தாலும் மட்டுமே செய்யும்–சிருஷ்டித்துப் பரிபக்குவப்படுத்துபவனான ரக்ஷகனுக்கு நம் வேண்டுதல்களும் முறையீடுகளும் உரியனவாகட்டும்! நமக்கு நம் சொல்லிலும், பகிரங்க, அந்தரங்கச் செயல்களிலும் நம் அடக்கத்திலும், கஷ்ட நிலையிலும் சுகமான வசதியான சந்தர்ப்பத்திலும் அவன் நிரந்தரமான பாதுகாவல் அளிப் பது அவன் திருச்சித்தப்படியேயாம். தான் விரும்பிய எதையும் முற்றும் செய்பவன் நிச்சயமாக அவனே; தான் எண்ணிய எதையும் நடக்கும்படி அவன் உத்தரவிடுகிறான்; மறைவானவை யாவையும் அவன் அறிவான்; பாவங்கள் பிழைகள் யாவையும் பணிவான செயல்கள், தன் அருகிலாகும் நிலைகள் சகலவற்றையும் அவன் அறிவான்; சகல கூச்சல்களையும் அவன் கேட்கிறான்; தான் விரும்பியவர்களின் பிரார்த்தனைகளைத் தயக்கம் இன்றி அவன் ஏற்கிறான்.

"அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்க்கத் துணிந்தால், உங்களால் அவற்றை எண்ணிமுடிக்க இயலாது" என்று அல்லாஹு ஸுப்ஹானஹு கூறியுள்ளது போல–இப்போது அல்லும், பகலும் சகல நேரத்திலும், ஓய்வின்றி அல்லாஹ்வின் அனுக் கிரஹங்கள் அவன் அடியார்கள் மீது இறக்கிக் கொண்டே இருக்கின்றன. பாக்கியங்களில் நின்றும் உங்களிடம் உள்ள அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவையே" என்று அவன் வேறோர் இடத்தில் கூறியுள்ளானன்றோ! எனவே, இப்பாக்கியங்களை எண்ணி விவரிக்க எனக்குச் சக்தியோ, நாவோ, இதயமோ போதாது. எண்ணிக்கைகள் அவற்றை எட்டிப் பிடிக்க முடியாது. மானிட சிந்தனைகளாலோ உள்ளங்களாலோ அவற்றைப் பற்றிப் பிடிக்க இயலாது; இதயங்களோ. நாவோ அவற்றை வருணிக்க முடியாது. ஆகவே அவன் பாக்கியத்தால் நாவு வருணிக்க இயன்ற, பேச்சு வன்மை வெளியிட அனுமதித்த, விரல்கள் எழுத முடிந்த, வருணனா சக்தி வருணிக்க இடம் தந்த சில வார்த்தைகளே இந்நூலில் உள்ளன. மறைவான உலகத்தின் உணர்ச்சி ஊட்டலால் எனக்கு வெளியிடப்பட்ட வார்த்தைகள் என் இதயத்துள் இறங்கி அதை நிறைத்தன. சகஜமான நிலைமை மீண்டும் அவை இதயத்தின் மேல் பரப்புக்கு வந்தன. சத்தியத்தை தேடுவோர்க்கு இவ்வார்த்தைகள் வழிகாட்டியாக உதவுமாறு, இவற்றைச் சரியான வடிவில் வெளியிட ஜனங்களின் ரக்ஷகனான அல்லாஹ்வின் நல்லருளும் கருணையும் உதவியுள்ளன.

அவ்விதம் வெளியிடப்பட்டவையே இங்குத் தரப்பட்டுள்ளன.

உபதேசம் ஒன்று

மெய் விஸ்வாசம் கொண்டவனுக்கு வாழ்க்கையின் சகல நிலைமைகளிலும் மூன்று விஷயங்கள் இன்றியமையாதவை. அவை அல்லாஹ்வின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதும், விலக்கப்பட்டவற்றை விலக்கலும், இறைவன் திருச்சித்தத்தை மன முவந்து ஏற்பதும் ஆகும். குறைந்த பட்சம் மெய் விஸ்வாசி இம்மூன்று அனுஷ்டானங்களிலுமாவது ஒழுங்காய் இருந்து வரவேண்டும்.

ஆகையால், அவன் இவற்றுக்காகவே மனத்தைத் தயாராக்கி, இவைபற்றியே தன்னுள் பேசி, தன் அங்கங்களை இவற்றிலேயே ஈடுபடுத்தியவனாய் இருப்பதே பொருத்தமாகும். (முதலாம் மகாலா)

உபதேசம் இரண்டு

உண்மை விசுவாசத்துடன் (நபி பெருமான் (ஸல்) அவர்களின் பாதச்சுவட்டைப் பின்பற்றி நடவுங்கள்! மார்க்கத்தில் புதுமை பித்அத்) ஆனவைகளை உண்டாக்க வேண்டாம்! (இறைவனுக்கும் அவன் தூதருக்கும்) கீழ்ப்படியுங்கள்! வழி தவறிவிட வேண்டாம்! ஏகத்துவத்தைப் பாதுகாத்து, இறைவன் எத்தீமையையும் உண்டாக்கிவிட்டான் என்று கூறாதபடி உங்களைப் பேணிக் கொள்ளுங்கள். அவன் சத்தியத்தை நிலைநாட்டி, ஐயத்துக்கு இடம் தராதிருங்கள்! பொறுமையுடன், நிதானந் தவறாதிருங்கள்!" உறுதி உள்ளவர்களாய், ஓடிப்போகாதிருங்கள்! உங்கள் தேவைகளுக்கு அவனிடமே முறையிடுங்கள்; அம் முறையீடு கேட்கப்படுவதற்குப் பொறுமையுடன் காத்திருங்கள்! அவனுக்கு அடிபணிவதில் ஐக்கியப்படுங்கள்; ஒற்றுமைக்குலைவுக்கு இடந்தர வேண்டாம்! பரஸ்பரம் அன்பு காட்டுங்கள்; ஒருவரை ஒருவர் துவேஷிக்க வேண்டாம்! தீய பழக்கங்களிலிருந்து விலகுங்கள்; அவற்றால் மாசடைந்து விடாதீர்கள்! உங்கள் ரக்ஷகனுக்கு அடிபணிவதன் மூலம் உங்களை அழகு படுத்துங்கள்! அவனிடம் கவனங்காட்டத் தவற வேண்டாம்! நீங்கள் (செய்த தவறுகள் குறித்து) பச்சாதாபப்படத் தாமதம் வேண்டாம்! அல்லும் பகலும் உங்களைச் சிருஷ்டித்தவனை நினைவு கூராது, சாக்குப் போக்குச் சொல்ல வேண்டாம்! இவ்விதம் சதா அவன் தியானத்திலேயே இருந்தால் உங்களிடம் கருணை காட்டப்படலாம்; உங்களுக்கு நல்லதிர்ஷ்டம் உண்டாகலாம்; நரகாக்கினியிலிருந்து விமோசனமும், சொர்க்க வாழ்வு பெற்றுச் சாந்தியின் உறைவிடத்திலே ஹூரிகளின் குழாத்திடையில் இறைவனின் ஆசியோடு தரிபட்டிருக்கலாம். அதே நிலையில் என்றும் இருக்கலாம். நல்ல குதிரைகள் மீது சவாரி செய்யலாம்; கண்ணழகிகளின் நேசத்தில் மகிழலாம்; பலவித வாசனைகளும், பெண்களின் இன்னிசையும் மற்றும் பல பாக்கியங்களும் அங்கே கிட்டும் உயரிய வானுலகில்

நபிமார்கள், சத்திய நேயர்கள், வீரத்தியாகிகள், நேர் வழியாளர்களின் கூட்டத்திற்கு உயர்த்தப்பட்டவர்கள் ஆகுங்கள்! (இரண்டாம் மகாலா)

உபதேசம் மூன்று

அல்லாஹ்வின் அடியான் ஒரு சோதனைக்கு ஆளாகும்போது முதலில் தன் முயற்சிகளால் அதிலிருந்து தப்பிக்க முயல்கிறான். அவன் தோல்வியுற்றால், மானிடரிடையேயுள்ள அரசர், அதிகாரிகள் போன்றவர்களின் உதவியை நாடுகிறான். நோய், நொடியாக இருப்பின் வைத்தியனுடைய உதவியை நாடுகிறான். இதன்மூலம் சோதனையிலிருந்து விடுபட இயலாது போய்விடின், அதன்பின் அவன் சர்வலோக ரட்சகனான அல்லாஹ்வின் பக்கம் திரும்புகிறான். தொழுகையாலும் பிரார்த்தனையாலும் பணிவோடு அவனிடம் விண்ணப்பம் செய்கிறான். தன்னாலேயே நிவர்த்தி காண முடியும்வரை அவன் பிறர் உதவியையோ, தன் சிருஷ்டியாளன் உதவியையோ நாட மாட்டான்.

அல்லாஹ்விடமிருந்து அவனுக்கு உதவி கிடைக்காவிட்டால், அவன் சந்நிதானத்தில் வீழ்ந்து, இரந்தும், மன்றாடியும், பணிவோடு வேண்டியும், பயபக்தியோடும், நம்பிக்கையோடும் தன் தேவையைச் சமர்ப்பித்தும் முறையிட்டவாறே கிடப்பான். சர்வ வல்லமையாளனான அல்லாஹ் அவனை அதிகம் சோதிப்பான்; உலகிலுள்ள சகல வழிவகைகளும் அவனுக்கு இல்லாது போய்விட்டன என்றாகும் வரை அவனுடைய பிரார்த்தனையை ஏற்கமாட்டான். அதன்பின் அல்லாஹ் வின் கட்டளையும், செயலும் அவனிடம் வெளியாகும்; அல்லாஹ்வின் இந்த அடியான் சகல உலகப் பார்தைகளையும், உலகின் நடவடிக்கை களையும், முயற்சிகளையும் விட்டு அப்பாலாகி விடுவான்; தன் ஆத்மாவை மட்டும் தன்னகத்தே கொண்டவனாய் இருப்பான்.

இவ்வித நிலையில் அவன் சர்வ வல்லமையாளனான இறைவனின் வேலையையன்றி வேறு எதையும் காணான். அவசியமாக, நிச்சய பூர்வமான அளவுக்கு ஏகத்துவத்தில் அவன் நம்பிக்கை கொண்டவனாகிறான். எதையும் செய்பவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை; எதையும் அசைப்பவனும், நிறுத்துபவனும் அவனன்றி யாருமில்லை; எந்த நன்மை தீமையும், எந்தலாப நஷ்டமும், எந்த

இன்பதுன்பமும், எந்த எடுத்தலும் கொடுத்தலும், எந்ததிறப்பும் அடைப்பும் எந்த ஜீவமரணமும், எந்த கௌரவ அகௌரவமும், எந்தச் செல்வமும் வறுமையும் அவனாலன்றி வருவதில்லை என்பதை இந்நிலையில் அவன் உணர்வான்.

இதன்பின், தன்னைப் பாலூட்டி வளர்க்கும் தாதியின் கையிலுள்ள குழந்தையைப்போல, தன்னைக் குளிப்பாட்டுபவர்கள் கையில் கிடக்கும் மையித்தைப் போல, பூமியில் வைக்கப்பட்டுத் தன்னை மட்டையால் அடிக்கப்போகிறவர் முன் கிடக்கும் பந்தைப்போல அவன் அல்லாஹ்வின் திருச்சமுகத்தில் சரணடைந்து சுழன்று கொண்டும், உருண்டு கொண்டும், இருப்பான். தன்னிடமோ தன் அருகில் உள்ளோர்களிடமோ அசைவதற்குக் கூடப் பலம் இல்லாதிருப்பதைக் காண்பான். இவ்விதமாக அவன் தன் எஜமானனின் வேலையுள் மூழ்கித் தன்னகத்தில் இருந்தே மறைந்தவனாகி விடுவான்.

எனவே, அவன் தன் எஜமானனையும் அவன் திறனையுமன்றி வேறு எதையும் காணான்; அவனையன்றி வேறு யார் பேசுவதையும் கேளான்; புரிந்துகொள்ளான். அவன் எதையாவது கண்டால் அஃது அல்லாஹ் வுடைய வேலையையேயாகும்; அவன் எதையாவது கேட்டு அறிந்தால் அஃது அல்லாஹ்வின் வார்த்தையேயேயாகும்; அவன் எதையாவது புரிந்து கொண்டால் அஃது அல்லாஹ்வுடைய ஞானத் தினுடையவனாகிறான். அவனை அண்டியிருப்பதாலேயே அதிர்ஷ்ட வானாய் இருக்கிறான்; அவனை அண்டியிருப்பதன் மூலமே அவன் மதிப்பும் மரியாதையும் பெறுகிறான்; திருப்தியும் ஆறுதலுமடைகிறான். அல்லாஹ்வின் வாக்குறுதியால் தன் மனம் நிறைந்து அவன் வார்த்தையின் பக்கல் இழுக்கப்படுகிறான். அவனுக்குப் புறம் பானவர்களை அவன் வெறுத்து ஒதுங்கிக் கொள்கிறான். அவன் நினைவு கூர்தலை விரும்பி, அதில் நம்பிக்கை கொள்கிறான்; அந்த மகா வலுப்பகமானவனிடம் ஸ்தாபிதம் பெற்றவனாகிவிடுகிறான். அவ னிடமிருந்து ஒளிபெற்று உடுத்துக் கொள்கிறான்; அவன் ஞானத்தின், அவன் சக்தியின் இரகசியத்தின் அபூர்வமான விஷயங்களை விளங்கிக் கொள்கிறான். அந்த மகா சக்தியினிடமிருந்து கேட்டு நினைவால் அவனைப் புகழ்ந்து, துதித்து

சக்தியினிடமிருந்து கேட்டு நினைவால் அவனைப் புகழ்ந்து, துதித்து தொழுகையில் ஈடு படுகிறான். (மூன்றாம் மகாலா)

உபதேசம் நான்கு

சிருஷ்டிகளுக்கு நீ மரணித்தவன் ஆகிவிட்டால், "அல்லாஹ் உன்னிடம் கருணை காட்டட்டும்!" என்று சொல்லப்படும். அப்போது ஊனுடம்பின் ஆசைகளில் இருந்தும் அல்லாஹ் உன்னை மரணித்தவனாக்குவான். ஊனுடம்பின் ஆசரபாவங்களிலிருந்து நீ மரணித்ததும், "அல்லாஹ் உன்னிடம் கருணை காட்டட்டும்!" என்று கூறப்படும், அப்போது அவன் உன் சித்தத்துக்கும் ஆசைக்கும் மரணம் தருவான். உன் சித்தத்திலும் ஆசையிலும் நீ மரணித்தவனானதும், "அல்லாஹ் உன்னிடம் கருணை காட்டட்டும்!" என்று சொல்லப்படும். அப்போது அல்லாஹ் உன்னைப்(புதிய) வாழ்க்கையில் நடத்தாட்டுவான்.

இப்போது உனக்குத் தரப்படும் வாழ்வுக்குப் பிறகு மரணம் இல்லை; உனக்குத் தரப்படும் செல்வத்துக்குப் பிறகு வறுமை இல்லை; உனக்குத் தரப்படும் வெகுமதிக்கு அப்பால் எந்தத் தடையுமில்லை; உனக்கு அளிக்கப்படும் மகிழ்ச்சிக்குப் பிறகு எந்தத் துக்கமோ துயரமோ தொடரா; உனக்கு உண்டாகும் பாக்கியத்துக்கு பிறகு சோதனை எதுவுமில்லை; உனக்கு அருளப்படும் ஞானத்துக்குப் பிறகு அறியாமை எதுவுமே இருக்காது. உனக்குத் தரப்படும் பாதுகாப்பின் தன்மையால் பயப்படத் தேவை இராது. நீ அகௌரவம் அடைய இட மின்றி வளர்ந்தோங்கி வருவாய். (இறைவனுக்கு) நீ அருகிலிருப் பனாக்கப்பட்டு, அப்பாலாகாதபடி செய்யப்படுவாய். நீ இகழப்பட இடமில்லாதபடி கௌரவப்படுத்தப்படுவாய். நீ பிறகு அசுத்தமடைய இடமில்லாதபடி பரிசுத்தமாக்கப்படுவாய். அப்போது உன் சகல நம்பிக்கைகளும் நிறைவேறும்; ஜனங்கள் வெறும் வாய்ப்பேச்சுக்காகப் புகழ்வதெல்லாம் உன் வரையில் உண்மையாகிவிடும். அதன்பின் நீ காணற்கரிய ரத்தனமாகிவிடுவாய். இணையற்ற முறையில் உயர்த்தப்பட்டவனாவாய். உனக்கு ஒப்பாரும் மிக்காரும் இரார். அந்த அளவு மிகவும் மறைவானவனாகவும், இரகசியமானவனாகவும் ஆகி விடுவாய்.

அப்போதுதான் நீ சகல நபிமார்களுடையவும் சத்திய நேயர் களுடையவும் வாரிஸாவாய்; தெய்வத் தோழமையின் முடிவிட முமாவாய்; ஜீவ ஒலிமார்கள் உன்னைச் சுற்றிக் குழுமுவர். உன் மூலமே சங்கடங்கள் நீரும். உன் பிரார்த்தனையின் மூலம் மேகம் மழை பொழியும்; வயல்களில் கதிர் முற்றும். உன் பிரார்த்தனையின் மூலமே நாட்டு மக்களின், எல்லையில் வாழ்வோரின், ஆளுவோரின், ஆளப்படு வோரின், தலைவர்களின், அவர்களைப் பின்பற்றுவோரின், மற்றும் சகல ஜந்துக்களின் துன்பமும் துயரமும் அகலும். எனவே நீயே மக்களினதும் நகர்களினதும் கண்காணிப்பு அதிகாரியாய் இருப்பாய்.

உன்னைக் காண மக்கள் நெடுந்தொலை கடந்து வருவார்கள்; அவர்கள் சம்மானங்களையும், காணிக்கைகளையும் கொண்டு வருவார்கள். எவ்வித நிலையிலும் இறைவன் உத்தரவு கொண்டு உனக்குச் சேவை செய்யக் காத்திருப்பார்கள். (அதே சமயம்) வேற்றிடங்களிலுள்ளோரின் நாவுகள் உன்னை புகழ்வதிலேயே ஈடுபட்டிருக்கும். மெய் விஸ்வாசம் கொண்ட எந்த இருவரும் உன்னைப் பற்றி அபிப்பிராய பேதம் கொள்ள மாட்டார்கள். ஹே, மக்கள் நிறைந்த நகர்புறங்களில் வதிவோரே, ஹே, பிரயாணஞ் செய் வோரே, இஃது அல்லாஹ்வின் கருணையாகும். அல்லாஹ் மகத்தான காருண்யமுள்ளவன்.

உபதேசம் ஐந்து

இவ்வுலகுக்கு உரியவர்கள் கையில் இவ்வுலகை நீ காணும்போது, அதன் அலங்காரங்களையும் படாடோபங்களையும் அதன் ஏமாற்றங்களையும் படுகுழிகளையும், புறத்தே மெத்தென இருந்து, அகத்தே கொடிய தீங்கு விளைவிப்பதாய், தன்னைத் தொடுபவர்களை அந்த விணாடியே கொன்றழிப்பதாய் விளங்கும் அதன் ஆலகால விஷயங்களையும், தன் வயமாவோரை ஏமாற்றி தன் தீமைகளையும் துரோகத்தையும், வாக்குறுதி மீறுவதையும் சகஜமாக்கிவிடும் அதன் மயக்கையும்–இவற்றை எல்லாம் நீ காணும் போது, தன் வெட்க ஸ்தலத்தை வெளியில் காட்டிக்கொண்டு, துர்நாற்றமடிக்க மலம் கழிக்கும் ஒருவனைக் காண்பவன் போல் ஆகிவிடு. மலம் கழிக்கும் அவன் நிர்வாணத்தை நீ

பார்க்காதிருக்கிறாய்; தீய நாற்றம் மூக்கில் ஏறாதபடி மூக்கை அடைத்துக் கொள்கிறாய். இதுபோலவே இவ்வுலகிடமும் நடந்துகொள்ள வேண்டும். நீ அதைக் காணும்போது அதன் போலிப் பளபளப்பில் இருந்து உன் பார்வையை அப்பாலாக்கு; அதன் விகாரங்களிலிருந்தும், படுமோசமான அனுபோகங்களிலிருந்தும் அடிக்கும் கெட்ட நாற்றம் நாசியினுள் புகாத படி மூடிக்கொள். அதன் மூலம் நீ அதிலிருந்தும் அதன் சோதனைகளி லிருந்து தப்பிவிடலாம் அப்போது உனக்கு விதிக்கப்பட்டது கிடைக்கும்; நீ அதை நன்கு அனுபவிக்கலாம். "அவர்களில் சில வகுப்பினருக்கு, இவ்வுலகச் சுக வாழ்வுக்கான பெருஞ் செல்வத்தைக் கொடுத்து, அவர்கள் அதை அனுபவிக்கும்படி செய்வதை உம் கண்கொண்டு நோக்க வேண்டாம்! அதன் மூலம் நாம் அவர்களைச் சோதனை செய்கிறோம். உமது ரக்ஷகனால் (உமக்குத்) தரப்படும் உணவு அவற்றைவிடச் சிறந்தது; அதிகம் நிரந்தரமானது." (திருகுர்ஆன்.20 : 131)

உபதேசம் ஆறு

அல்லாஹ்வின் கட்டளையால் ஜனங்களை விட்டு மறைந்துபோ! அவன் உத்தரவால் உன் இச்சையை விட்டும் விலகு! அவன் செயலால் உன் சித்தத்தை விட்டும் அப்பாலாகு! அதன் மூலம் அல்லாஹ்வின் ஞானம் ஊற்றி வைக்கத்தகும் பாத்திரமாகு! ஜனங்களை விட்டு நீ மறைவானவன் ஆவதன் அடையாளம், நீ அவர்களை விட்டும் முற்றும் துண்டிக்கப்பட்டவனாகவும், அவர்களுடைய எந்தக் கேளிக்கைக ளிலும் கலந்து கொள்ளாதவனாகவும், அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள வற்றிலிருந்து எதையும் எதிர்பாராதவனாகவும் ஆகிவிடுவதுதான்.

நீ உன் ஆசைகளை விட்டும் விலகுவதாவது: உலக சுகபோகங் களைத் தேடும் முயற்சியையும், எண்ணத்தையும் முற்றும் ஒதுக்குவது; உன் நலன் கருதி நீ எம் முயற்சியிலும் ஈடுபடாதவனாகி, உன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் உன்னை நம்பாதவனாகவும், சகலவற்றையும் அல்லாஹ்வின் பொறுப்பில் விட்டு, ஆரம்பத்தில் அவனி டமிருந்த அப்பொறுப்பு முடிவுவரை அவனிடமே இருக்கும்படி, (உன் தாயின்) கர்ப்பப்பையில் நீ இருந்தபோதும், தாய்ப்பால் அருந்தும் பருவத்தில் நீ தூளியில் தூங்கியபோதும் பொறுப்பு முழுவதையும் நீ அவனிடமே

ஒப்படைத்திருந்ததுபோல் இப்போதும் அவனிடமே விட்டுவிட்டு விலகுவதுமாகும்.

இறைவன் செயலால் நீ உன் சித்தத்தை விட்டும் விலகுதலாவது; நீயாக எந்த முடிவையும் செய்யக்கூடாது; நீயாக எந்த நோக்கத்தையும் உண்டாக்கிக் கொள்ளக்கூடாது; எந்தத் தேவையுணர்வும் உன்னகத்தில் இருக்கக்கூடாது. உன்னிடம் அல்லாஹ்வின் நோக்கமே முற்றும் நிறைந்திருக்க வேண்டும். அந் நிலையில் அல்லாஹ்வின் திருச்சித்தம் உன்னில் வெளிப்படும். அதனால் அல்லாஹ்வின் செயலும் சித்தமும் செயல்படுகையில், உன் உடலிலுள்ள சகல அங்கங்களும் செயலற்றும், இதயம் அமைதியுற்றும் மனம் விரிந்தும் அகத்தே இன்பம் பொங்கும்; நீ அவனுடன் தொடர்புள்ளவனாக ஆவதால் எப்பொருளின் தேவையும் இல்லாதவனாக ஆவாய். சக்தியின் கரம் உன்னை அசையச் செய்யும்; சாஸ்வதத்தின் நாவு உன்னை அழைக்கும்; சர்வலோக ரக்ஷகன் உனக்குப் போதனை புரிவான். தன்னிடமுள்ள வெளிச்சத்தாலும் ஆத்ம உடையாலும் உன்னை உடுத்தாட்டுவான்; கடந்த கால ஞானவான்களின் வரிசையில் உன்னையும் சேர்ப்பான்.

இதற்குப் பிறகு எந்தப் புலனாசையும், போக இச்சையும், சித்தமும் தங்காத ஒருவனாக தண்ணீரோ வேறு திரவமோ தங்காத உடைந்த பாண்டம்போல் நீ ஆகிவிடுவாய். சகல மானிடச் செயல் முறைகளும் உன்னை விட்டகலும்; உன் அந்தராத்மா அல்லாஹ்வின் சித்தமின்றி வேறு எதையும் ஏற்காது. இந்நிலையில் அற்புதங்கள் நிகழ்த்தலும், மானிட சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களைச் செய்தலும் உனக்கு இயல்வனவாகிவிடும். இவை உன்னிடமிருந்து வெளிப் படும்வையாகத் தோன்றும்; ஆனால் உண்மையில் இவை அல்லாஹ்வின் செயல்களாயும் அவன் திருவுளச் சித்தமாயும் இருக்கும்.

இவ்விதம் தங்கள் இதயங்கள் நொறுக்கப்பட்டுச் சகல மிருக இச்சைகளும் அகற்றப்பட்டுத் தெய்வ சித்தத்தால் உணர்ச்சி ஊட்டப்பட்டோரின் கூட்டத்தில் நீயும் அனுமதிக்கப்படுவாய். இந்தப் 'படித்தரம்' பற்றித்தான் நபி பெருமான் (ஸல்) அவர்கள் சொன்னார் கள், "உங்கள் உலகிலிருந்து மூன்று விஷயங்கள் எனக்கு அருமை

யானவையாக்கப்பட்டுள்ளன. அவை நறுமணம், பெண்கள், என் கண்களைக் குளுமையாக்கும் தொழுகை ஆகும்" என்று, இவை முதலில் அவர்கள் கையை விட்டுப் போய் நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியபடி, மறைந்த பின்னர் அவர்களுக்கு 'அருளப்பட்டன. அல்லாஹ் சொல்கிறான், 'எனக்காக மனமுடைந்தவர்கள் ஆனாரோடு நான் இருக்கிறேன்' என்று.

எனவே, உன் ஆசைகளும் சித்தமும் உடைந்து நொறுக்கப்பட்டா லன்றி, அல்லாஹ்த் தஆலா உன்னோடிருக்கமாட்டான். அவை உடைத்து நொறுக்கப்பட்டு, உன்னிடம் எதுவுமில்லாதானதும், அவனுக்கேயன்றி வேறு எதற்கும் தகுதியற்றவன் ஆனதும், அல்லாஹ் உன்னை மீண்டும் சிருஷ்டிப்பான்; ஒரு புதிய சித்த சக்தியைத் தருவான். அது கொண்டு நீ உன் சித்தங்களை வெளியிடலாம். இவ்விதம் புதிதாகச் சிருஷ்டிக்கப்பட்ட சித்தத்திலும் மீண்டும் உன் அகத் தின் சிறு நிழலாவது படுமானாலும், அல்லாஹ்த் தஆலா அதை உடைத்தெறிவான். அதன் மூலம் நீ உடைந்த இதயத்தினனாய் இருக்கும்படி செய்வான். இவ்விதம் அவன் உன் அகத்தில் புதிய சித்தத்தை உண்டாக்கிக் கொண்டே இருப்பான். நீ அதில் தென்படும்போது அதை உடைத்துக் கொண்டிருப்பான். கடைசியில் விதிவசம் தன் முடிவை எய்தும்; (அவனுடைய) சந்திப்பு நிகழும், "எனக்காக மனம் உடைந்தவர்களோடு நான் இருக்கிறேன்" என் ற தெய்வ வாக்கின் பொருள் இதுதான். "உன் அகத்தை அதில் காண்!" என்ற நம் வார்த்தையின் அர்த்தமும் உன் புதிய ஆசைகளில் கலந்து திருப்தியடை என்பதுதான்.

அல்லாஹ், நம்பெருமானார் (ஸல்) அவர்களிடம் சொல்லியிருப்ப தாக ஹதீஸ் குதுஸியில் வருவதாவது : "நபில் போன்ற இஷ்டப் பூர்வமான தொழுகைகள் மூலம் என் நல்லடியான், நான் அவனை என் நேசன் ஆக்கிக்கொள்ளும்வரை, என் அருகிலாதலை கேட்கிறான். நான் அவனை என் நேசனாக்கியதுமோ, அவன் கேட்கும் காதுகளா கவும், அவன் பார்க்கும் கண்களாகவும், அவன் பற்றும் கரங்களாகவும், அவன் நடக்கும் கால்களாகவும் நான் ஆகிவிடுகிறேன். அதாவது அவன் என் மூலம் கேட்கிறான்' என் மூலம் பார்க்கிறான்; என் மூலம் பற்றுகிறான்; என் மூலம் புரிந்து கொள்கிறான்." இது நிச்சயமாக 'பனா' எனும் நாஸ்தி

நிலையேயாகும். உன் அகம் சம்பந்தப்பட்ட வரையும்–சிருஷ்டி சக்தி சம்பந்தப்பட்ட வரையும் நீ நல்லவனாகவோ கெட்டவனாகவோ இருப்பதுபோல்; சிருஷ்டி சக்தியும் நல்லதாகவோ கெட்டதாகவோ இருப்பினும், நீ அழிக்கப்பட்ட பின்னர் அவற்றில் இருந்து எதையும் எதிர் பார்ப்பவனாக இருக்க மாட்டாய்; அவற்றின் தீமைகளுக்கும் அஞ்சாய். இப்போது மிஞ்சுவதோ--ஆரம்பத்தில் அவன் சிருஷ்டிக்கத் தொடங்கு முன் இருந்தது போன்ற நிலையில் உள்ள அல்லாஹ்தான், அவன் உத்தரவுப்படி நன்மையோ தீமையோ விளையும்.

இவ்விதம் அவன் தன் சிருஷ்டிகளின் தீமையில் இருந்து உனக்கு பாதுகாப்பருள்வான்; அவன் நன்மைக் கடலிலே உன்னை மூழ்கடிப்பான். இவ்விதம் நன்மை அனைத்தின் நிலைக்களனாகவும், சகல பாக்கியங்கள், மகிழ்ச்சி, இன்பம் ஒளி அமைதி சாந்தம் ஆகியவற்றின் ஊற்றுக்காலாகவும் ஆகிவிடுவாய். எனவே, ஒலிமார்களின் பிரயாணத்தின் நோக்கமும், இறுதி லட்சியமும், அடிப்படையும் 'பனா' வாகவே இருக்கின்றன. முன்னர் வாழ்ந்த சகல நாதாக்களும், தங்கள் சித்தம் இறைவன் திருவுளச் சித்தமாக மாறுவதற்காகவே தமது பல்வேறு நிலைகளில் இருந்து கொண்டும் துஆக் கேட்டு வந்தார்கள். தங்கள் வாழ்க்கையின் ஜீவிய பரியந்தம் தமது சித்தத்தை அழித்தொழித்து அல்லாஹ்வின் சித்தமாக அதை மாற்றி வந்தார்கள். இதனாலேயே அவர்கள் 'அப்தால்' (மாறியவர்கள்) என்று அழைக்கப்பட்டார்கள். இப் பெரியார்களின் கருத்தில் தமது சித்தத்தை இறைவன் சித்தத்தோடு தொடர்புகொள்ளச் செய்வதே ஒரு பாவமாய் இருந்தது.

அவர்களுக்கு நினைவு மறதியோ, தாங்க முடியாத உணர்ச்சியோ, பயமோ உண்டானால், அல்லாஹ்த் தஆலா தன் கருணையால் அவர்கள் உதவிக்கு விரைகிறான்; அவர்களுக்கு நினைவூட்டி, எழுப்பி, தம் ஞாபக மறதியிலிருந்து அவர்கள் மீட்சி பெற்றுத் தமது ரட்சகனின் பாதுகாவலைத் தேடுமாறு செய்கிறான். ஏனெனில், சித்தத்தின் கோளாறு முற்றும் இல்லாதவர்கள், அமரர்களைத் தவிர வேறு யாருமில்லை. அமரர்கள் தமது சித்தத்தின் பரிசுத்தத்தோடு வைக்கப்பட்டுப் பாதுகாக்கப்படுகின்றனர்; நபிமார்கள் சதைப்பற்றின் ஆசைகளிலிருந்து

விடுபட்ட சுதந்திரத்தில் பாதுகாக்கப்படுகின்றனர். நீதியொழுக்கத்தோடு நடக்கும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ள ஜின்னுகளும் மானிடரிலுள்ள மற்றச் சிருஷ்டிகள் யாவும் இவ்விரண்டு வழிகளிலும் பாதுகாக்கப்படவில்லை, நாதாக்கள் உடல் இச்சைகளிலிருந்தும், அப்தால்கள் சித்தத்தின் சுத்தமற்ற தன்மையிலிருந்தும் பாதுகாக்கப்படுகின்றனர். ஆயினும், இவர்களுங்கூட இத்தீமைகளிலிருந்து முற்றும் விடுபட்டவர்களல்லர். காரணம் சிற்சில சமயம் இத்தீமைகளின் பால் இவர்கள் திரும்பிவிடுதல் கூடும். ஆனால், அல்லாஹ் தன் கருணையால் இவர்களைப் பற்றிப்பிடித்து மீண்டும் ஞானம் பெற்றவர்களாக ஆக்குவான்.

உபதேசம் ஏழு

உன் கீழான மனத்தை விட்டும் விலகு; அதிலிருந்து தூரப் பட்டவனாகு; அதற்கு அன்னியனாய் இரு; சகலவற்றையும் அல்லாஹ்விடம் ஒப்படைத்துவிடு; உன் இதயவாயிலிலே அவனுடைய வாயில் காப்போனாய் இரு! அவன் உள்ளே விடலாம் என்று அனுமதித்துள்ளவைகளை மட்டும் உள்ளே செல்ல அனுமதித்து, அவன் தடுத்துள்ளவை உட்புகாதபடி பாதுகாத்து அவன் கட்டளைகளைப் பேணிவா! உன் உடல் இச்சை, உன் இதயத்துள் புக இடமளியாது இருந்துவா! அவ்விதம் உடலின் உட்புகாதபடி கவனிக்கப் பெரும் போராட்டம் தேவைதான்; சகலவித நிலைகளிலும் அதற்குப் பணியாதிருக்க அதிகமும் கஷ்டப்பட வேண்டியதுதான். ஆனால், அதை உள்ளே விடுவது என்பதோ அதற்குப் பணிவதும், அதனுடன் உடன் பட்டிருப்பதுமாகிவிடும். எனவே, அல்லாஹ்வின் சித்தத்தில் இல்லாத எதுவும் நடக்க வேண்டும் என்று எண்ணாதே! அல்லாஹ்வின் சித்தமல்லாத உன் சித்தம் எதுவும் உடல் இச்சையால் உண்டாவது தான்; அது மூடர்கள் உலவ வேண்டிய வனாந்தரமாகும்; அவ்வனாந் தரத்தில் நீயும் உலவத் துணிந்தால் அஃது உனக்கு மரணத்தை உண்டாக்குவதாயும், அல்லாஹ்வின் பார்வையிலிருந்து உன்னை, அப்பாலாக்குவதாயும் அவனுக்கும் உனக்குமிடையில் திரையிடு வதாயும் ஆகிவிடும். சதாவும் அவன் ஏவல்களின்படி நடந்தும் அவன் விலக்கல்களை ஒதுக்கியும், முற்றும் சரண்

அடைந்தும், அவன் சிருஷ்டிகளில் எதையும் அவனுடன் சம்பந்தப்படுத்தாமலும் இருந்து வா! உன் சித்தமும் உன் ஆசையும் உன் இச்சைகளும் அவன் சிருஷ்டிகளே. எனவே, நீ இணை வைப்பவன் ஆகும் விதம் எதையும் சித்தத்தில் கொள்வதோ, எதிலும் ஆசை வைப்பதோ, இச்சித்து அனுபவிப்பதோ கூடாது. "தன் ரக்ஷகனைச் சந்திக்கும் நம்பிக்கை வைக்கும் யாரும் நற்செயல்கள் புரியவேண்டும்; தன் ரக்ஷகனுக்குச் செய்யும் சேவையில் வேறு யாருக்கும் பங்கு உண்டாகும்படியாக இடம் கொடுக்கக் கூடாது" (18 : 110) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

இணைவைப்பது என்பது விக்ரஹ வணக்கம் மட்டுமன்று; உடல் இச்சையின்படி நடப்பது, இம்மைக்குரிய எதையும் அல்லாஹுவோடு சேர்த்துப் பேசுதலும் கூட இணைவைப்பது தான். ஏனெனில், அல்லாஹ்வை அன்றி வேறு எதுவும் அல்லாஹ் ஆகாது. அவனை அல்லாத எதிலும் நீ ஈடுபட்டிருக்கும்போது, நீ அந்தப் பொருளை அவனோடு இணைவைப்பவனாகிறாய் என்பதில் ஐயமில்லை. எனவே, எச்சரிக்கையாய் இரு; அயர்ந்து விடாதே! அஞ்சு; பாதுகாப்பு உணர்ச்சியுடன் இருந்து விடாதே! தேடு! அலட்சிய பாவத்தோடு இருந்து விடாதே! அப்படியானால்தான் நீ பாதுகாப்புப்பெற முடியும். உனது எந்த நிலையும் அந்தஸ்தும் உன் கீழான மனத்தின் காரணமாக உண்டானது என்று கூறாதே! இதில் எதையும் உன் கீழான மனத்துக்காகத் தேட வேண்டாம்! நீ எந்த நிலையிலோ, அந்தஸ்திலோ வைக்கப்படின் அதுபற்றிப் பிறரிடம் கூற வேண்டாம். நாள்தோறும் மாறிவரும் சந்தர்ப்பங்களிடையில் அல்லாஹ்வின் நல்லருள் நவதவமான வழிகளின் வெளிவருவதாய் இருக்கிறது. தன் அடியார்களுக்கும் அவர்கள் இதயங்களுக்கும் இடையில் அல்லாஹ் குறுக்கிடுகிறான். நீ பேசும் விஷயம் உன்னைவிட்டு அகற்றப் பட்டதாயும் நீ நிரந்தரமானது சாஸ்வதமானது என்று எண்ணிக் கொண்டுள்ளது மாறுதல் அடைந்து, நீ அவற்றைப் பற்றி யாரிடம் பெருமை பாராட்டிக் கொண்டாயோ அவர்கள் முன்பே நீ தலைகவிழவும் நேரலாம் இந்த ஞானத்தை நீ உன் அகத்திலேயே வைத்திருந்து, பிறரிடம் இதைக் கூறாது இருப்பது நலமாகும். இப்படி இருக்கையில் நீ எண்ணியுள்ளபடி

சக்தியைக் கேள்; இறைவனிடமிருந்து அதிகமான அருள் மாரியைக் கேட்டுப் பிரார்த்தனை செய். அப்படியின்றிப் பிரஸ்தாப விஷயம் நீடியாது மாறிவிடின் உன் ஞானத்தில் அதனால் முன்னேற்றம் உண்டாகும்; மனத்தினில் ஒளியுண்டாகும்; உஷாரான நிலை ஏற்படும். அல்லாஹ் சொல்கிறான்; "(முந்திய வேதங்களில்) நாம் எம் வசனங்களை எடுத்துவிடவோ, மறக்கப்பட்டுப் போகவோ விரும்பினோமோ, (அவற்றுக்குப் பதிலாக) அவை போன்ற அல்லது அவற்றை விடச் சிறந்தவற்றை (இவ் வேதத்தின் மூலம்) தருகிறோம் நிச்சயமாக, அல்லாஹ் சகல பொருட் களின் மீதும் அதிகாரம் உடையவன் என்பதை நீர் அறிவீரோ?" (2 : 106) என்று.

எனவே, எந்த ஒரு விஷயத்திலும் அல்லாஹ் சக்தி அற்றவன் என்று கருதாதே! அவன் கட்டளைகளிலோ, நடைமுறைகளிலோ குறை காண முயலாதே! அவன் வாக்குறுதியில் ஐயமடையாதே! இவ் விஷயத்தில் நபி பெருமான் (ஸல்) அவர்களிடம் அழகான முன் மாதிரியுள்ளது. அவர்களுக்கு வெளியாக்கித் தரப்பட்ட (திரு குர்ஆன்) ஆயத்துகளும் அத்தியாயங்களும் அனுஷ்டானத்தில் அமலாக்கப்பட்டன.

நபிபெருமான் (ஸல்) அவர்களுக்கும் இறைவனுக்கும் இடையிலிருந்த அக விஷயங்கள், ஞானம், மகாம்கள் சம்பந்தப்பட்டவரை, அவர்கள் தங்கள் இதயம் குழப்பமாய் இருப்பதாகக் கூறுவதும், தினமும் எழுபது தடவை–சில சமயங்களில் நூறு தடவை அல்லாஹ்வின் பாதுகாவலைத் தேடுவதும் உண்டு; அதன் பயனாய் அவர்கள் ஒரு நிலையிலிருந்து மற்றொன்று என்று பல நிலைகளுக்குக் கொண்டு செல்லப்படுவதும் உண்டு. அல்லாஹ்வின் சமீபத்தை எய்துவதிலும் அவர்கள் ஒரு நிலைமையை விட்டு இன்னொன்று, அதைவிட்டு மற்றொன்று என்று நிலை மாறுவது உண்டு. அவர்கள் நிலைகள் மாறுவது வெளியில் தெரியாது. அதற்கேற்ப ஒவ்வொரு படி முன்னேறுதலும் முந்திய படியை இருண்டதாக்கும்: அவன் கட்டளைகளுக்கு அடிபணிவதில் முந்திய படியில் அத்தனை தூரம் ஒழுங்காய் இருக்கவில்லை என்றும் தோன்றும். இதனால் அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாவலை எப்படித் தேடுவது என்பது பற்றியும் அல்லாஹ்வின் வழிகாட்டுதலை

அடைவதுண்டு. ஓர் அடியானுக்குச் சகல நிலைமைகளிலும் உயர்வானது. பாதுகாப்புத் தேடி, அல்லாஹ்வின் பக்கமே திரும்பியிருப்பதுதான். இப்படிப் பாதுகாவல் தேடுவதில் தன் பாவத்தையும் குற்றத்தையும் ஒப்புக் கொள்கின்ற நிலைமை உண்டாகிவிடுகிறது. தன் வாழ்வின் சகல நிலைகளிலும் ஓர் அடியானிடம் இவ்விரண்டு குறைகளும் இருந்தே வரும்; ஏனெனில், ஆதி பிதாவான ஆதம் (அலை) இடமிருந்து யாவரும் பெறும் பிதுரார்ஜிதமாக இவை விளங்குகின்றன. வாக்குறுதியையும் ஒப்பந்தத்தையும் பற்றிய நினைவை மறதி இருள் கௌவியதால், ஆதம் (அலை) அவர்களின் ஆத்மீக நிலையின் தெளிவும் மறைவுண்டது; சாந்தி நிலையத்திலேயே வாழ்ந்து ரஹ்மானும் ரஹீமுமான நேசனின் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற ஆசை அவர்களிடம் மிகைப்பட்டது. சாந்தியுடையவும், பாக்கியத்துடையவும் செய்தியுடன் கண்ணியமிக்க அமரர்கள் தங்களிடம் வரவேண்டும் என்றும் அவர்கள் விரும்பினார்கள். அதனால் அவர்கள் சித்தம் இறைவனின் சித்தத்தோடு மோதிற்று; அவர்கள் சித்தம் உடைந்து நொறுங்கிற்று; அதுவரை அவர்கள் இருந்த முதல்தரமான ஸ்தானம் மறைந்தது. அதுவரை இருந்த, அல்லாஹ்வுக்கு அருகியிருப்பதும் போய் விட்டது. அதுவரை அவர்களிடமிருந்த மெய் விஸ்வாச ஒளி இருளாக மாற்றப்பட்டு, அவர்கள் ஆத்மாவின் பரிசுத்தமும் இருண்டதாக் கப்பட்டது. பின்னர் ஆதம் (அலை) அவர்களின் தவறு அவர்களுக்கு நினைவூட்டப்பட்டது; தங்கள் பாவத்தையும் தவற்றையும் அவர்கள் உணருமாறு செய்யப்பட்டுத் தங்கள் குற்றத்தையும், பரிபூரணமற்ற நிலையையும் ஒப்புக்கொள்ளுமாறும் போதிக்கப்பட்டது. அப்போது ஆதம் (அலை) அவர்கள் கேட்டார்கள்: "எங்கள் ரட்சகா, நாங்கள் எங்கள் ஆத்மாவுக்கே அநியாயம் செய்துவிட்டோம். நீ எங்களை மன்னித்து எங்களிடம் கருணை காட்டாவிட்டால் நிச்சயமாக நாங்கள் நஷ்டவாளிகள் ஆகிவிடுவோம்" என்று, அதன்பின் அவர்களுக்கு வழி காட்டும் ஒளியும், பச்சாத்தாப ஞானமும், அதன் பயனாய் உண்டாகும் சத்தியத்துவ ஞானமும் உண்டாயின. அல்லாஹ் கருணைக் கண்கொண்டு நோக்கியதால் அவர்கள் பச்சாத்தாபப்பட முடிந்தது. அதன்பின் ஆதம் (அலை) அவர்களின் நோக்கம் வேறு ஒன்றாக மாற்றப்பட்டது!

அவர்களுக்கு தெய்வத் தோழமையின் உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பட்டது. இம்மையிலும் மறுமையிலும் அவர்களுக்கு உயர்ந்தஸ்தானம் நல்கப்பட்டது. இவ்விதமாக இவ்வுலகம் அவர்களுக்கும் அவர்களின் வழித் தோன்றல்களுக்கும் வசிக்கும் இடமாகவும், மறுஉலகம் அவர்கள் திரும்பிப் போய் நிரந்தரமாகத் தங்குமிடமாகவும் ஆகிவிட்டன.

இதுபோல் அல்லாஹ்வின் அன்பரான முஹம்மது நபி (ஸல்) அவர்களையும், அவர்களின் மாபெரும் மூதாதையான ஆதம் (அலை) அவர்களையும்–அல்லாஹ்வின் நேசர்களான இவ்விருவரையும்–நீயும் உன் குற்றத்தை ஒப்புக்கொள்ளுவதற்கும், பாவங்களில் இருந்து அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடுவதற்கும், வாழ்க்கையின் சகல நிலைகளிலும் பணிவைக் கைக்கொள்வதற்கும், உன்னால் எதுவும் இயலாது என்பதை உணர்வதற்கும் உன் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டும்.

உபதேசம் எட்டு

நீ குறிப்பிட்ட நிலையிலிருக்கையில் அதைவிட உயர்ந்த, தாழ்ந்த எந்த நிலையையும் அடைய ஆசைப்படாதே! இவ்விதம் நீ அரசனின் அரண்மனை வாயிலில் நிற்கையிலே உன்னை வற்புறுத்தி உள்ளே அழைத்துச் சென்றாலன்றி, நீயாக உன் இஷ்டத்துக்கு உள்ளே போகாதே! வற்புறுத்தல் என்று நான் குறிப்பிடுவது மீண்டும் மீண்டும் கூப்பிடப்படும் ஒரு கண்டிப்பான உத்தரவைத்தான், உள்ளே நுழைய அனுமதி மட்டும் கிடைத்துவிட்டால் போதும் என்றெண் ணாதே! காரணம் அஃது அரசனின் ஒரு தந்திரோபாயமாகவும் இருந்து விடலாம். அரசனின் செயல் முறையாலும், கட்டளை வேகத் தாலும் உள் நுழையும்படி ஏற்படும் வரை நீ பொறுமையை கைக் கொண்டிருக்க வேண்டும். உனக்கு ஏதாவது தண்டனை தரப்பட்டால், அஃது உன் இச்சையாலும், பேராசையாலும், பொறுமை இல்லாமை யாலும், நாசூக்கற்ற தன்மையாலும், நீ இருக்கும் நிலையில் திருப்தி யடையாமையாலும் உண்டான தீங்கிற்காகத் தரப்படுவதுதான். ஆகவே இத்தகைய வற்புறுத்தல் வந்தபின்னரே நீ உள்ளே நுழைய வேண்டும். அப்போது நிசப்தமாகப் போ. உன் பார்வையைக் கீழே தாழ்த்தி, ஒழுங்கான மரியாதையுடன் நட. உனக்கிடப்படும் எக்கட்டளையையும் உன் வாழ்க்கைத்தரம் உயர்வதற்கு

ஓர் மார்க்கமாக எண்ணாது ஏற்று அடிபணி, நபிபெருமான் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ் சொன்னான்: "அவர்களில் சில வகுப்பினருக்கு இவ்வுலகச் சுகவாழ்வுக்கான பெருஞ் செல்வத்தைக் கொடுத்து அவர்கள் அதை அனுபவிக்கும்படி செய்வதை உம் கண் கொண்டு நோக்க வேண்டாம். அதன் மூலம் அவர்களைச் சோதனை செய்கிறோம். உமது இறைவனால்(உமக்குத்) தரப்படும் உணவு அவற்றைவிடச் சிறந்தது; நிரந்தரமானது." (20 : 131)

'உம் இறைவன் உமக்குத் தரும் உணவு அவற்றைவிடச் சிறந்தது: அதிகம் நிரந்தரமானது" என்ற தன் வார்த்தைகளின் மூலம் அல்லாஹ் தன் திருத்தூதருக்கு அவர்களுடைய நிகழ்கால நிலைமையை பதித்து, அல்லாஹ்வின் அருட்கொடைகளைக் கண்டு திருப்தியுறும்படி எச்சரிக்கை விடுகிறான். இதே உத்தரவை இன்னும் தெளிவாக்க வேண்டுமெனின், "உமக்கு நாம் தந்த நல்லவையும், நபித்துவமும், ஞானமும், திருப்தியும், பொறுமையும், மார்க்க சாம்ராஜ்ஜியமும், மார்க்கத்துக்காகப் போராடுதலும்–இவை யாவும் மற்றோர்க்கு நாம் கொடுத்துள்ளவைகளை விட சிறந்தவை; மதிப்பு மிக்கவை" என்பதே இதன் தாத்பரியமாகும்.

எனவே, இப்போதுள்ள நிலையை மதிப்பதாலும், அதில் திருப்தி யடைவதாலும், அதற்குப் புறம்பான எதிலும் உண்டாகும் ஆசையை அகற்றிக்கொள்வதாலும் தான் சகல நலமும் உண்டாகின்றன என்பது தெளிவு. உன் நிலைக்குப் புறம்பான ஒரு நிலையில் நீ ஆசை வைக்கக் கூடாது என்பது இதனால்தான். அஃது உனக்கே கிடைப்பதாய் இருக்கலாம்; அல்லது வேரொருவருக்கு கிடைப்பதாய் இருக்கலாம் அல்லது யாருக்காகவுமின்றி ஒரு சோதனைக்காக அல்லாஹ் அதை உண்டாக்கியிருக்கலாம். இந்நிலையில் அஃது உனக்குக் கிடைப்பதற்குரியதாயின் நீ விரும்பினாலும் விரும்பா விடினும் அஃது உன்னை வந்தடையும். எனவே, அது குறித்து நீ ஒழுங்கீனமாக நடப்பதோ, பேராசை கொள்வதோ முறையல்ல; அவ்விதம் நடப்பது அறிவுக்கும் ஞானத்துக்கும் ஒவ்வாதது. அது வேறொருவருக்காக விதிக்கப் பட்டிருப்பின், உனக்கு கிட்டாத, உன் கைக்கு எட்டாத ஒன்றுக்காக நீ ஏன் கஷ்டப்படவேண்டும்? அது யாருக்காகவும் விதிக்கப்படாது ஒரு

சோதனைக்காக உண்டாக்கப்பட்டிருப்பின், எந்த அறிவுள்ளவன்தான் ஒரு சோதனையுள் சிக்கிக்கொண்டு பயமின்றிக் கஷ்டப்பட விரும்புவான்? எனவே, இப்போதைய உன் நிலையில் திருப்தியுறுவதுதான் உசிதமும் நலமுமாகும்.

இதன்பின் நீ அரசன் அரண்மனையின் மாடிக்கு ஏறும்படி செய்யப்படுவாய்; அங்கிருந்து உச்சிக்கு ஏறும்படி செய்யப்படுவாய்; அச்சமயங்களிலும் நாம் முன்னரே குறிப்பிட்ட பயபக்தி காட்ட வேண்டும். ஏன், அதை விடவும் அதிகமாக நீ மரியாதை காட்டவேண்டும். நீ அரசனுக்கு மிகவும் அருகில் ஆகிவிடுகிறாய்; அதனால் அதிக அபாயத்துக்கும் இடமுண்டாகிவிடுகிறது. இதனால் நீ உன் தற்சமய நிலையிலிருந்து கூடுதலானதையோ, குறைவானதையோ கேட்காதே! அதுவே நிரந்தரமாகவோ, தொடர்ந்தோ இருந்து வரவேண்டும் என்றும் ஆசை கொள்ளாதே! இந்த விஷயத்தில் உன் இஷ்டப்படி நடக்க கொஞ்சமும் இடமே இல்லை. அப்படி நடக்கத் துணிந்தால் இன்றுள்ள நன்மைகள் விஷயத்தில் நீ நன்றி கெட்டவன் ஆகிவிடுவாய்! அவ்விதம் நன்றி கொட்டவன் இவ்வுலகிலும் மறுஉலகிலும் தாழ்ந்தவனாகவே இருப்பான். இதனால் நாம் கூறியபடியே நடந்து வா! அதன் பின் ஒரு குறித்த அந்தஸ்தையுடைய ஸ்தானத்துக்கு உயர்த்தப்படுவாய்; அங்கிருந்து அகற்றப்பட மாட்டாய். அஃது அல்லாஹ்வின் சம்மானம் என்பதையும் அதன் அறிகுறிகளின் வெளிப்பாட்டோடு அது கிடைத்துள்ளது என்பதையும் அப்போதுதான் நீ உணரவேண்டும். அந்நிலையைப் பற்றிப்பிடித்துக் கொள்ள வேண்டும். அதை விட்டு அகற்றப்பட இடம் அளித்து விடாதே! 'அஹ்வால்' (ஆத்மஞான நிலைகள்) அவ்லியாக்களுக்கு (சாதாரண ஞானியருக்கு) உரியன. ஆனால், மக்காமாத்துகளோ (ஆத்மீக ஸ்தாபிதமான இடங்களோ) அப்தால்களுக்கே (முன்னேறிய ஞானிகளுக்கே) உரியன.

உபதேசம் ஒன்பது

மனிதனின் பகுத்தறிவையும் பழக்க வழக்கங்களையும் உடைத் தெறியக் கூடிய அல்லாஹ்வின் செயல்களெல்லாம் அவ்லியாக்களுக்கும் அப்தால்களுக்கும் 'கஷ்ஃப்' (ஆத்மீகப் பார்வை) மூலமும் முஷாஹிதா

(ஆத்மீக அனுபவம்) மூலமும் வெளியாகின்றன. இவற்றைக்கண்டுதான் பகுத்தறிவும், பழக்க வழக்கங்களுமே சதம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள் செயலற்றுப்போகின்றனர். இவ்விதம் வெளிப்படுவது இரண்டு வகைகளிலாகும்; ஜலால் (என்ற தீவிர சக்தி) கொண்டு வெளிப்படுவது ஒன்று; ஜமால் (என்ற சாத்வீக சக்தி) கொண்டு வெளிப்படுவது மற்றொன்று. ஜலாலின் சக்தியால் உண்டாகும் தீவிரம் பூத உடலிலும் தன் எதிரொலிகளை உண்டாக்கும் அளவுக்கு இதயத்தைத் தாக்குகிறது; அமைதியற்ற அச்சத்தையும் கொந்தளிப்பையும் உண்டாக்குகிறது. நம் பெருமான் முஹம்மது (ஸல்) அவர்கள் தொழுகையில் நிற்குங்கால் அவர்கள் இதயத்துள் இருந்து ஓர் அண்டாவில் தண்ணீர் கொதிக்கும் சப்தம் போன்ற தடதட என்ற ஓசை எழுவது உண்டு. இதற்குக் காரணம் அல்லாஹ்வின் ஜலால் இறங்கியது தான்; அச்சமயம் அச்சத்தால் அவர்கள் உடல் வெல வெலப்பதும் உண்டு. இதே போல் இப்ராஹீம் கலீலுல்லாஹ் (அலைஹி) அவர்களுக்கும், அமீருல் மூமீனின் உமர் (ரலி) அவர்களுக்கும் அனுபவங்கள் ஏற்பட்ட தாகச் சொல்லப்பட்டுள்ளது.

"ஆனால், அல்லாஹ்வின் ஜமால் என்னும் சக்தி மனித இதயத் தில் இறங்குவதாலோ இன்பமும், ஒளியும், இனியமொழிகளும், அன்பான பேச்சும் உண்டாகும்; உயர்ந்த நன்கொடைகள், உன்னதப் பதவி, அவனுக்கு அருகிலாதல் போன்ற நற்செய்திகளும் எட்டும்; அதனால் சகல விஷயங்களும் திரும்பும்; அதனால் காலத்தில் தொடக்கத்திலேயே விதிவசத்தின் பேனா மை உலர்ந்துபோகும். நிர்ணயிக் கப்பட்ட காலம்வரை இவ்வுலகில் அவர்களுக்கு அருளப்பட்ட கருணையாகவும், அருட்கொடை யாகவும் ஊர்ஜிதமாகவும் இது விளங்கும். இவ்விதம் அவர்களுக்கு அருளப்படுவதற்குக் காரணம் அவர்கள் கொண்டுள்ள பெருங்காதலின் அளவு மிக அதிகரிக்க வேண்டும் என்ற ஆவலில் அவர்கள் அத்துமீறி, அவர்கள் இதயம் வெடித்து விடாமலும், அழிவுக்கு ஆளாகாமலும், சேவையில் தளர்ச்சி அடையும் அளவுக்கு மரணம் வரும் வரை மனோபலம் குன்றிவிடாமலும் இருப்பதற்காகத் தான். அவர்களிடம் அவன் காட்டும் அன்பினாலும், கருணையாலும், அவர்கள் இதயங்களுக்குப் பயிற்சி அளிக்கும் எண்ணத்தாலும் அவன் இவ்விதம் செய்கிறான். அவன்யாவும்

அறிந்தவன்; சர்வசக்தன்; அவர்களிடம் அன்பாகவும் பரிவாகவும் நடந்துகொள்பவன். இதனால் தான் நபி பெருமான் (ஸல்) அவர்கள் தொழுகை அழைப்பு எழுப்பும் ஹஜ்ரத் பிலால் (ரலி) அவர்களை நோக்கி, "பிலாலே எமது உள்ளம் பரவசம் அடையச் செய்யும்" என்று சொல்வதுண்டு. அதாவது, அவர் தொழுகை அழைப்புக்கான 'பாங்கு' ஒலி எழுப்பி விட்டால் நபி பெருமானார் தொழுகையிலாகி நான் மேலே சொன்ன அனுபவங்களைப் பெறும் பரவச நிலையை அடைய முடியும் என்றுதான் பெருமானார் அவர்கள் இவ்விதம் சொல்வார்கள். அதனாலேயே, தொழுகையில் என் கண்களின் குளுமை தரிபட்டுள்ளது" என்று அவர்கள் சொல்லு வதுண்டு.

உபதேசம் பத்து

நிச்சயமாக அல்லாஹ்வும் உன் கீழான மனமும் தவிர வேறு எதுவும் இல்லை. நீ அல்லாஹ்விடம் முறையிடுபவன்; உன் கீழான மனமோ அவனுக்கு எதிராக நிற்பது. ஆனால் சகலமுமே அவனுக்குக் கீழ்ப்பட்டவையானபடியால், அவனால் சிருஷ்டிக்கப்பட்ட அந்த கீழான மனமும் அவனுக்குக் கீழ்ப்பட்டதுதான், மனிதனின் மனமோ தானே முடிவுகளை உண்டாக்கிக் கொள்கிறது; அதனால் தவறான நம்பிக்கைகளும், உணர்ச்சிகளும், போக இச்சையும் கிளர்ந்தெழு கின்றன. இந்தக் கீழான மனத்தை நீ எதிர்த்துப் போராடி சத்தியத்தின் பக்கம் சேர்ந்தால் நீ அல்லாஹ்வுக்கு உரியவனாவாய்; 'தன்னை' விட்டும் தப்பியவனாவாய். தாவூது நபி (அலை) அவர்களிடம் அல்லாஹ் சொன்னான்: "தாவூதே, நான் தடுக்க இயலாத உமது புகலிடமாவேன்; எனக்காக உம் கீழான மனதுக்கு அகப்படாதவராக நீர் ஆவதன் மூலம் தான் நீர் உண்மையான சேவைக்கு உரியவர் ஆவீர்" என்று. அப்படியானால்தான் அல்லாஹ்விடம் காட்டும் நட்புரிமையும், அவனுக்குச் சேவை செய்வதும் உண்மையானவை ஆகும். அப்படியானால்தான் புனிதமானவற்றில், இன்பம்பயப்பவற்றில் உனக்குரிய பங்கு கிடைக்கும், அப்படியானால் தான் நீ அருமையானவனாகவும், கௌரவமானவனாகவும் ஆவாய்: யாவும் உன் சேவகர்களாகவும்; உனக்குப் பணிவிடை புரியும்; உன்னைக் கண்டு அஞ்சும். ஏனெனில் அவையாவும் அல்லாஹ்வுக்குக்

கட்டுப்பட்டவை; அவன் சித்தப்படி நடப்பவை; அவன்தான் அவற்றைச் சிருஷ்டித்து வெளியாக்கியவன்! அவனுக்கு கட்டுப்பாடுடைய தன்மையை அவை இவ்விதம் காட்டிக் கொள்ளும், அல்லாஹ் சொல்கிறான்: "அவன் பெருமைகளால் அவனைப் போற்றாதது எதுவுமில்லை, ஆனால், நீ அவற்றின் பிரார்த்தனையை அறியாது இருக்கிறாய்" என்று. அதாவது இப்பிரபஞ்சத்தில் உள்ள சகல பொருள்களும் அவன் சாந்தித்தியத்தை உணர்ந்து அவன் உத்த ரவுக்குப் பணிகின்றன. அல்லாஹ் ஸுப்ஹான ஹுவத் தஆலாவும் சொல்கிறான்: அப்போது அதனிடமும், உலகினிடமும் அவன் கேட்டான்: "நீங்கள் இஷ்டப்பட்டு வருகிறீர்களா, இஷ்டப்படாமல் வருகிறீர்களா" என்று; அவை கூறின: "நாங்கள் இஷ்டப்பட்டே வருகிறோம்' என்று.

இவ்விதம் சகல சேவையுமே கீழான மனத்தையும் அவன் இச்சைகளையும் எதிர்த்துப் போராடுவதில் இருந்தே தொடங்குகின்றன. அல்லாஹ் சொல்கிறான்: "உங்கள் கீழான இச்சைகளுக்கு இணக்க மாகாதீர்கள்; ஏனெனில், அவை உங்களை அல்லாஹ்வின் பாதையில் இருந்தும் வழி தவற வைத்துவிடும் தன்மையன" என்று. மேலும் அவன் சொல்கிறான்: "உங்கள் கீழான இச்சைகளை வெறுத்து ஒதுக்குங்கள்; ஏனெனில், என் ராஜ்ஜியத்தில் எனக்கு இணக்க மற்றவை காமக் குரோதாதிகளையன்றி வேறு எவையுமன்று" என்று.

அபூ எஸீது பிஸ்தாமியைப் பற்றிய பிரஸித்தி வாய்ந்த ஒரு சம்பவ முண்டு. அவர்கள் தங்கள் கனவில் அல்லாஹ்வைக் கண்டார்கள். அப்போது; "உன்னை அடைவது எப்படி?" என்று கேட்டார்கள். "உன் கீழான மனத்தின் ஆதிக்கத்தை உதறிவிட்டு என்னிடம் வா" என்று அல்லாஹ் பதில் சொன்னான். அதன்பின் அப்பெரியார் பாம்பு தன் சட்டையைக் கழற்றிவிட்டு வெளியாவது போல, 'தான்' என்பதை விட்டும் வெளியானதாகச் சொல்கிறார்கள். எனவே, சகல விஷயங்களிலும், சகல நிலைகளிலும் நீ உன் கீழான மனத்தை எதிர்த்துப் போராடவேண்டும். அதனால் நீ பக்தியான நிலையிலிருப்பின், மக்களிடமுள்ள விலக்கப்பட்டவற்றில் இருந்தும், அவர்களிடமிருந்து உதவி பெறுவதில் இருந்தும், அவர்களை நம்பியிருப்பதிலிருந்தும், அவர்களுக்கு

அஞ்சுவதிலிருந்தும், இவ்வுலகப் படாடோபங்களில் அவர்களிட முள்ளவற்றை கேட்பதிலிருந்தும் உன் கீழான மனத்தை எதிர்த்துப்போராடு இவ்விதமாக நீ ஜனங்களிடமிருந்து எந்தச் சன்மானத்தையோ வெகுமதியையோ, தருமத்தையோ கடனையோ எதிர்பார்க்காதிரு. இவ்வுலக வசதிக்குரிய சகல வஸ்துக்களின் தேவையையும் விட்டும் நீ விடுபட்டவனாய் இரு. உனக்கு பணக்கார உறவினன் ஒருவன் இருந்து அவன் இறந்தால் அவன் சொத்து உனக்குக் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பின், அவன் மரணம் அடையவேண்டும் என்று நீ விரும்பக்கூடாது. எனவே, நீ பெரும் முயற்சி செய்து சிருஷ்டிகளை விட்டு அப்பாலாகி, திறக்கவும் மூடவுமாக இருக்கும் ஒரு வாயிலாகவும், சில சமயம் கனி தந்து, சில சமயம் காய்க்காத ஒரு தருவாகவும் அவர்களை நீ கருதவேண்டும். இவ்விதமாகும் நிலைமை ஒருவனால் திட்டமிடப்பட்டு நடத்தாட்டி வைக்கப்படுகிறது. அவன் தான் அல்லாஹ் ஆகும். உன் ரட்சகனின் ஏகத்துவத்தில் நீ பூரண மெய்விஸ்வாசம் கொள்வதற்காகவே அவன் இவ்விதம் ஆக்கியுள்ளான்.

அதே சமயம் மனித முயற்சியின் அந்தஸ்தையும் மறந்து விடாதே! எல்லாம் விதிவசம் என்று மூலையில் குந்திக்கிடக்கும் கூட்டத்தாரில் ஒருவனாக ஆகி விடாதே! எச்செயலும், அல்லாஹ்வின் அளவிலன்றிப் பூர்த்தி ஆவதில்லை என்பதையும் மறந்து விடாதே! அவற்றைப் போற்றிக் கொண்டாடிக் கொண்டு அல்லாஹ்வை மறந்துவிடவோ, சகல மானிடசெயல்முறைகளும், அல்லாஹ்வைத் தவிர வேறு எதனாலும் வருகின்றன என்று சொல்லவோ செய்யாதே! அப்படிச் சொன்னால் எல்லாம் மனிதன் கைக்குள் அடங்கியவைதான் என்று கூறும் நிராகரிப்போர் கூட்டத்தில் சேர்ந்தவனாகி விடுவாய். சகல செயலாற்றல்களும் சிருஷ்டியில் அல்லாஹ்வுக்கு உரியவை; முயற்சியில் மனிதனுக்கு உரியவை என்று வேண்டுமானால் நீ கூறலாம். நன்கொடைகளையும் தண்டனைகளையும் பற்றிய பெரியார்கள் பேச்சுகளில் இத்தகைய அபிப்பிராயமே காணப்பட்டுள்ளது.

அவர்கள் (ஜனங்கள்) சம்பந்தப்பட்ட அல்லாஹ்வின் கட்டளைகளையும் நிறைவேற்றி வா! அவன் ஏவலால் அவர்களிடமிருந்து

உனக்குரிய பங்கை ஒதுக்கிக்கொள். இவ்வரம்பை மீற வேண்டாம். ஏனெனில் அல்லாஹ்வின் உத்தரவு நீடித்து நிற்பது; உன்னையும் அவர்களையும் அது சீர் தூக்கி நீதி வழங்குவது. நீயே உனக்குத் தீர்ப்புத் தந்துகொள்ளாதே! நீ அவர்களோடு (ஜனங்களோடு) இருப்பது அல்லாஹ்வின் உத்தரவால்தான். இவ்வுத்தரவு இருளிலுள்ளது; அந்த இருளில் ஒரு விளக்கோடு புகு! அந்த விளக்கே நீதிபதியுமாகும். அது தான் அல்லாஹ் அருளிய குர்ஆன் ஷரீபும், நபிபெருமானின் திருவாக்கியங்களையும் நடைமுறைகளையும் காட்டும் ஹதீஸ் ஷரீபுமாகும். இவை இரண்டுக்கும் புறம்பான விஷயங்களில் இறங்காதே! உன் உள்ளத்தில் ஏதாவது எண்ணம் அல்லது உதிப்பு உண்டானால், அதைத்திரு குர்ஆன் ஹதீஸ்களின் முன் நிறுத்தி ஆராய்ந்து பார். உனக்கு உண்டான எண்ணமோ, உதிப்போ அவற்றால் விலக்கப்பட்டதாய் இருப்பில் (அதாவது வட்டி வாங்கலாம். விபசாரம் புரியலாம். நேரிய ஒழுக்கமற்றவர்களோடு நட்பும் பூணலாம் என்பன போன்ற பாவகரமான விஷயம் உன் சிந்தையிலோ உதிப்பிலோ தோன்றியிருப்பின்) அந்த எண்ணத்தையோ உதிப்பையோ அகற்றி அதை விட்டு விலகிக்கொள். அதை ஏற்காதே! அதன்படி நடவாதே! அது இப்லீஸின் தூண்டுதலால் உண்டானது என்ற நம்பிக்கையில் உறுதியாய் இரு. இவ்விரண்டு மூலங்களிலும் உனக்குத் தோன்றிய எண்ணம் அல்லது உதிப்புக்கு வெறும் அனுமதி மட்டும் இருப்பின் (அதாவது உண்ணுவது, அருந்துவது, உடுப்பது, மணமுடிப்பது போன்ற ஆகுமான காரியங்களைச் செய்வதற்கான எண்ணமாகவோ உதிப்பாகவோ இருப்பின்) இதையும் ஏற்காது ஒதுக்கிவிடு! இந்த எண்ணம் அல்லது உதிப்பு உன் கீழான மனத்தின் வேட்கையால் உண்டாகியுள்ளது என்பதை அறிந்து, அதை நீ எதிர்த்து ஒதுக்க வேண்டிய அவசியத்தை உணர்.

இப்படியும் இன்றி உன் எண்ணத்திலோ உதிப்பிலோ கண்ட விஷயத்துக்குக் குர்ஆன் ஷரீபிலும், ஹதீஸிலும் விலக்கவோ, அனுமதியோ இன்றிச் சந்தேகாஸ்பதமான நிலைமை உண்டானால், அது நீ புரிந்து கொள்ள இயலாத ஒன்றாய் இருக்குமாயின் (உதார ணமாக ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு நீ செல்லவேண்டும் என்றோ, ஒரு குறிப்பிட்ட

பெரியாரை நீ போய்க் காண வேண்டும் என்றோ உன் எண்ணத்திலோ உதிப்பிலோ தோன்றியிருந்து, அல்லாஹ் உனக்குத் தந்த அறிவைக் கொண்டு யோசிக்குங்கால் அப்படிப் போவதற்கோ, சந்திப்பதற்கோ அவசியம் இல்லாதிருந்தால்) அவ்விஷயத்தில் நீ பொறுமையுடன் இரு; அவசரப் படாதே! 'அஃது அல்லாஹ்விடமிருந்து நமக்குக் கிடைத்த உத்தரவா, நாம் அதன்படி நடக்கத்தான் வேண்டுமா?' என்று நிதானமாகச் சிந்தனை செய். இவ்விஷயத்தில் எம்முடிவுக்கும் வருமுன் காத்திரு. அதே எண்ணம் அல்லது உதிப்பை மீண்டும் ஏற்படும்படி செய்வது அல்லாஹ்வின் வழக்கம். அல்லது ஞானவான்களுக்குக் காட்டுவது போல அவன் ஓர் அடையாளத்தைக் காட்டுவான், அந்த அடையாளம் ஒளலியாக்களிலும், அப்தால்களிலும் மிகுந்த ஞானவான்களாக உள்ளவர்களுக்கே புரியக் கூடியதாய் இருக்கும். இவ்விஷயம் பற்றி நீ கொஞ்சமும் அவசரப்படவே கூடாது. ஏனெனில், அதன் பலாபலன்களைப் பற்றி நீ ஏதும் அறியாய். அதில் சோதனை ஏதும் உள்ளதா, அழிவுப் பாதை உள்ளதா, உன்னைச் சோதிக்க ஏதாவது மறைவானதை அல்லாஹ் அதில் வைத்திருக்கிறானோ என்பது ஒன்றும் உனக்குத் தெரியாது.

எனவே, அல்லாஹ்வே உன்னுள் அதைச் செய்பவனாகும் வரை நீ பொறுமையாய் இருக்க வேண்டும். இவ்விதம் அச்செயல் தெளிவாக அல்லாஹ்வின் உடையதாக ஆனதும், அதன்பின் உனக்கு ஏதாவது சோதனை எதிர்ப்பட்டாலும்கூட நீ அதிலிருந்தும் பாதுகாப்பாக மேலே கொண்டு செல்லப்படுவாய். காரணம், அல்லாஹுத் தஆலா தன் செயலான ஒன்றுக்கு உன்னைத் தண்டிக்க மாட்டான். ஒரு விஷயம் நடப்பதில் நீயாகவே பங்கெடுத்துக் கொண்டால் தண்டனை இருப்பின் நிச்சயமாக அது கிடைக்கும்.

நீ சத்தியத்துவ நிலையை, தெய்வத்தோழமை உடைய நிலையை எய்தி விட்டால், உன் இச்சைகளை எதிர்த்துப் போராடு; அவன் கட்டளைகளுக்கும் பூரணமாகக் கீழ்ப்படிந்து நட. அப்படிக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது இரண்டு வகைப்படும்: முதலாவதாக, உன் உலக ஜீவியத்துக்குத் தேவையான அளவு மட்டும் இவ் வுலகிலிருந்து நீ உணவு எடுத்துக் கொள்ளலாம்; புலனுக்குரிய இன்பங்களில் திளைக்க நீ

துணியக்கூடாது; உன் கடமைகளைச் சரிவரச் செய்து வெளிப்படையான, மறைவான பாவங்களை விட்டு ஒதுங்கிக் கொள்ள வேண்டும்; இரண்டாவதாக வகை மறைவான கட்டளைக்குக் கீழ்ப்படிவது சம்பந்தமானது. இதன் மூலம் அல்லாஹ் தன் அடியான் ஒன்றைச் செய்யவோ செய்யாமலிருக்கவோ ஏவல் விலக்கலை அருளுகிறான். இக்கட்டளை சன்மார்க்க நெறிமுறையில் இப்படி அப்படி என்று எவ்வுத் தரவும் இல்லாத ஹராம் என்றோ, ஹலால் என்றோ எதுவும் சொல்லப்படாத விஷயங்கள் சம்பந்தப்பட்டதாய் இருக்கலாம். இதில் அடியான் தன் இஷ்டப்படி நடக்கப் பூரண சுதந்திரமுண்டு. இதற்கு 'முபாஹ்' என்று பெயர். இத்தகைய நிலையில் அடியான் தானாகவே எதுவும் செய்துவிடக்கூடாது. இது சம்பந்தப்பட்ட உத்தரவுக்காகக் காத்திருக்க வேண்டும். ஓர் உத்தரவு வந்ததும் அடியான் அதற்கு அடிபணிந்து நடப்பான். இவ்விதம் அவன் செயலும், ஒய்வும்கூட அல்லாஹ்வுக்கு அர்ப்பணிக்கப்பட்டமையாகி ஆகிவிடும். ஒரு விஷயம் பற்றி சன்மார்க்க நெறி முறையில் ஓர் உத்தரவு இருப்பின் அவன் அவ்வுத்தரவுப்படியே நடப்பான். சன்மார்க்க நெறிமுறையில் அவ்வித உத்தரவு இல்லாமலிருப்பின் மறைவான உத்தரவின் படி நடப்பான். இவற்றின் மூலமே அவன் சத்தியத்துவத்தை எய்தபவனாக உறுதிப்படுத்தப்படுவான்.

இந்த மறைவான உத்தரவுமின்றி அல்லாஹ்வின் செயல் மட்டுமே இருப்பின் தன்னை விட்டுக்கொடுத்த நிலையிலிருக்க வேண்டும். சத்தியத்தின் சத்தியமான நிலையை, அதாவது முற்றும் மூழ்கிவிட்ட நிலையை ('பனா' என்ற நிலையை) நீ அடைந்துவிட்டால் அதுதான் அப்தாலின் நிலை என்பதை உணர். அப்தால்கள் அவனுக்காக உடைந்த இதயம் உடையவர்களாய் இருப்பார்கள். இந்நிலை மெய்ஞ்ஞானத்தின் முற்றிய ஞானமடைந்தவர்களுக்கு, ஸாலிஹீன் களுக்கு, குதுபுகளுக்கு, ஜனங்களின் பாதுகாவலர்களாகவும், மேல் பார்வையாளர்களாகவும் உள்ளவர்களுக்கு, கருணையாளரின் பிரதிநிதிகளுக்கு, அவன் நேசர்களுக்கு உரியதாகும். இத்தகைய விஷயங்களில் உத்தரவுக்கு கீழ்படிதல் என்பது உன் கீழான மனத்துக்கே விரோதமாகப் போகவேண்டியதாகவும், எந்தத் திறனிலும், சக்தியிலும் நம்பிக்கை

வைக்காதிருப்பதாகவும், இவ்வுலகையோ மறு உலகையோ பற்றிய எவ்விஷயத்துக்கும் ராஜ்ஜியத்தின் உடையவனன்றி ராஜாவின் அடியானாவாய் ஊனுடம் பின் ஆசைக்கன்றித் தெய்வ உத்தரவுகளுக்கு அடிமை ஆவாய். அதாவது தாதியின் கைக் குழந்தை போலும், குளிப்பாட்டுபவர் கை மைய்யித் போலும், வைத்தியன் முன் படுத்திருக்கும் நோயாளி போலும்–ஏவல் விலக்கல்களுக்குப் புறம்பான சகல விஷயங்களிலும்–ஆகிவிடுவாய்.

உபதேசம் பதினொன்று

நீ வறுமையில் கஷ்டப்படுகையில், உனக்கு மணம் செய்து கொள்ளும் ஆசை உண்டாகிறது; ஆனால், உனக்கு அதற்கான வசதி இல்லை; எனவே, அந்த ஆசையை உன்னுள் உண்டாக்கிய சக்திக்கு உரியவனான அல்லாஹ்விடமிருந்து உதவியை எதிர்பார்த்தவனாகப் பொறுமையுடன் காத்திரு; அப்போது (அந்த ஆசையை உன்னை விட்டு அகற்றுவதன் மூலமோ அல்லது) அதற்கான வாய்ப்பையும் வருவாயையும் நன்கொடையாகத் தந்து, போதுமான அளவுக்கு உனக்கு உணவு முதலியன கிடைக்க உதவி, இம்மையிலும் மறுமையிலும் அந்தப் பாரத்தை நீ எளிதாகச் சுமக்கும்படி செய்வதன் மூலமோ அவனே உனக்கு உதவுவான். அதுவரை நீ கொண்டிருந்த பொறுமைக்காகவும், அவன் நல்லருளில் திருப்தி காட்டியதற்காகவும், அல்லாஹ் அவனைப் பொறுமையாளன் நன்றி விஸ்வாசம் உடையவன் என்று அழைப்பான்; அதனால் அவன் உன் பரிசுத்தத்தையும் சக்தியையும் அதிகரிப்பான்; நீ மனத்திருப்தி கொள்ளும்படி, அவன் செய்த அருளனுக்கிரஹத்தின்படி விதிப்பில் இருப்பின் 'உன் பொறுமை நன்றியறிதலாக மாறும்; இறைவன் தன்னிடம் நன்றிவிஸ்வாசம் உடையவர்களுக்குத் தன் நன்கொடைகளை அதிகரிப்பதாக வாக்களித்துள்ளான். அவன் சொல்கிறான்: "நீங்கள் நன்றி விஸ்வாசம் உள்ளவர்களாயின், நிச்சயமாக நான் அதிகமும் அருள்வேன்; நீங்கள் நன்றி விஸ்வாசமற்றவர்களாயின் என் தண்டனை கடுமையானதாகவே இருக்கும், என்று.

அது (மணம் அல்லது செல்வம்) உனக்கு ஆதி ஏற்பாட்டில் விதிக்கப்படாதிருப்பின், நீ அதைப்பற்றி அக்கறையற்றவனாகி, உன்

கீழான மனம் அதை விரும்பினாலும் விரும்பாவிடினும், உன் எண்ணத்தில் இருந்தே அதை விரட்டிவிடவேண்டும். இதில் நீ உன் பொறுமையைப் பற்றி பிடித்தவனாக. உன் இச்சையை எதிர்த்து சன்மார்க்க நெறிமுறையின் கட்டளையைப் பற்றிப்பிடித்தவனாக நிற்க வேண்டும். இறைவனின் திருவுளச்சித்தத்தில் திருப்தியுற்றவனாய், அதே நிலையில் அல்லாஹ்வின் அருளினாலும் கொடையினாலும், நம்பிக்கை வைத்தவனாய் இருந்து வரவேண்டும். "பொறுமையாளர்களுக்கு மட்டுமே அளவின்றிப் பரிபூரணமாக அவர்களின் சம்மானம் திருப்பியளிக்கப்படும்" என்று அல்லாஹ்வே கூறி உள்ளான்.

உபதேசம் பன்னிரண்டு

அல்லாஹு ஸுப்ஹானஹு வத் தஆலா உனக்குச் செல்வத்தைத் தந்ததும், நீ அதனால் அவனுக்குப் பணிவதிலிருந்தும் கவனம் திருப்பப்பட்டவனானால், அது காரணமாக இம்மை மறுமை இரண்டினாலுமே அவனை நீ காண முடியாதவாறு உன்முன் திரையை இட்டு விடுகிறான். உனக்குச் சன்மானம் தந்தவனிடம் நன்றி காட்டாது. தரப்பட்ட பொருளின் கவனத்திலேயே நீ மூழ்கிக் கிடப்பதற்குத் தண்டனையாக, அவன் உனக்குத் தந்த சம்மானங்களையே பறித்து, உன் நிலையையே மாற்றி, உன்னைத் தரித்திரனாக்குவதும் அவன் செய்யக்கூடிய காரியந்தான். ஆனால், நீ அவனுக்குப் பணிவதில் ஈடுபட்டு அச்செல்வத்தைப் பற்றிய அக்கறையற்றவனாய் இருப்பின், அதை அல்லாஹ் உனக்கு ஏகபோகமாக விட்டு விடுவதுடன், ஓர் அணுக்கூட அதில் குறைவு வரவும் இடந்தர மாட்டான் செல்வம் உன் அடிமை; நீ உன் ரட்சகனின் அடிமை, எனவே, இவ்வுலகில் அவனுடைய அன்புப் பாதுகாவலிலும், மறுமையில் கவுரவத்தோடும், சுகத்தோடும், நிரந்தரமான சொர்க்கத்திலும், ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்களுடைய கூட்டத்தில் நீ வாழ வேண்டும்.

உபதேசம் பதின்மூன்று

எந்தப் பாக்கியத்தையும் நீயாகக் கைப்பற்றிக் கொள்ளவோ, எந்தத் துயரையும் ஒதுக்கிக் கொள்ளவோ எம்முயற்சியும் செய்ய வேண்டாம். பாக்கியம் உனக்கு விதிப்பில் இருப்பின், நீ அதைத் தேடினாலும்

தேடாவிட்டாலும் அஃது உன்னை வந்தடையும். நீ விரும் பினாலும் விரும்பாவிடினும் துயரம் விதிக்கப்பட்டிருப்பின், அதுவும் உன்னை வந்தடையவே செய்யும், உன் தொழுகை மூலமோ உன் சகிப்புத்தன்மை, பொறுமை ஆகியவற்றாலோ அதை ஏற்று, உன் ராட்சகனின் அருளை அடையப் பெறு.

நீ சகல விஷயங்களிலும் அவனுக்குப் பணிந்தவனாகி அவன் தன் வேலையை உன் மூலம் செய்யும் நிலைமை உண்டாக வேண்டும். உனக்கு ஒரு பாக்கியம் உண்டானால் நன்றி செலுத்துவதில் ஈடுபடு! உனக்கு ஒரு துயரம் உண்டானால் பொறுமையுடன் இரு; அல்லது அதை வருவிக்கவும், அல்லாஹ்வின் உறவைத் தேடவும், அவன் மகிழ்ச்சியை அடையவும் பழகிக் கொள்; அல்லது அவன் பாக்கியத்தை இதில் உணர முயல்; அல்லது இதன் மூலம் உன்னால் சாத்தியமான அளவுக்கு, உனக்குத் தரப்பட்டுள்ள ஆத்மீக நிலைகளின் உதவியால், அவனோடு இணைந்தவனாகி நிலைமையிலிருந்து நிலைமைக்குப் புரட்டி எடுக்கப்பட்டவனாய்ப் பணிந்து பிரயாணம் செய்து நீ உத்தரவிடப்பட்டுள்ளபடி தோழமை கொள்ள முயன்றால் அந்த மாபெரும் நேசனை அடையலாம்.

அப்போது நீ உனக்கு முன்பு ஸித்தீகீன்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோரால் அடையப்பெற்றுள்ள ஸ்தானத்தில் நிறுத்தப்படுவாய். அதாவது நீ அல்லாஹ்வுக்கு மிகவும் அருகிலுள்ளவன் ஆவாய். அங்கிருந்துகொண்டு உனக்கு முன்பு அங்கே, அல்லாஹ் ஜல்ல ஜலாலுஹுவிடம் சென்று அவனுக்கு அருகிலாகி, அவனிடமிருந்து சகலவிதப் பாதுகாவல்களையும், வசதிகளையும் கண்ணியங்களையும், பாக்கியங்களையும் அடைந்துள்ள நல்லடியார்களின் நிலைமையைக் காண முடியும். இந்நிலையில் எந்தத் துயரமும் ஏற்படினும் நீ அதன் வழியைத் தடை செய்வதோ உன் பிரார்த்தனையால் அதை மடக்குவதோ, அது வருவது பற்றிச் சங்கடப்படுவதோ அவசியம் இல்லாமல் ஆகிவிடும்; ஏனெனில், நரக நெருப்பை விட அதன் நெருப்பு ஒன்றும் கடுமையானதாய் இருக்கப் போவது இல்லை. "நிச்சயமாக நரக நெருப்பு. மெய் விஸ்வாசியே, "விரைவில் அப்பால் செல்; உன் ஒலி என் தணலை அவிக்கிறது' என்று அவனிடம் கூறும்" என்பதாக மானிடருள் மகாசிரேஷ்டர், இம்மாநிலம்

கமப்பவர்களி லெல்லாம், வானம் கவிந்துள்ளவர்கள் யாவரிலும் உன்னதமானவர்களான நம் பெருமான் (ஸல்) அவர்கள் கூறியதாகக் காணப்படுகிறது.

எனவே, நரகாக்கினியை அவிக்கும் மெய்விஸ்வாசியின் ஒளியன்றோ இவ்வுலகிலும் அவனிடம் மிளிர்வாய் விளங்குகிறது! இந்த ஒளியன்றோ அல்லாஹ்வுக்கு அடிபணிபவர்களை அவ்விதம் பணியாதவர்களில் இருந்தும் பிரித்துக் காட்டுகிறது! அதே ஒளி துயரத் தீ அணுகுவதை அணைக்கட்டும்; உனக்கு நேரவிருக்கும் தீங்கு நெருப்பை உன் சகிப்புத்தன்மையினுடையவும் அல்லாஹ்வுடன் இணைந்திருப்பதுடையவும் தன்மை அணைக்கட்டும்

அத்துயரம் உன்னை நசுக்குவதற்காக வருவதன்று; உன்னைச் சோதித்து, உன் மெய்விஸ்வாசத்தின் உறுதியை ஊர்ஜிதஞ் செய்து, உன் நம்பிக்கைகளின் அடிப்படையை உறுதியாக்கி, உன்னைப் பற்றி உன் இறைவன் கொண்டுள்ள அன்பான எண்ணங்கள் பற்றிய நற் செய்தியை உன் அந்தரங்கத்தில் புகுத்துவதற்காகவே அது வருகிறது என்பதை நீ உணர்வாய். "மிக மிக நிச்சயமாக உங்களில் தம்மை மிகவும் கடுமையான முயற்சியில் ஈடுபடுத்துபவர்களையும், சகிப்புத் தன்மை உடையவர்களையும் அறிந்து அதை வெளிப்படுத்தும் வரை சோதிப்போம்" (47 : 31) என்று அல்லாஹ் கூறியுள்ளான். இவ்விதம் அல்லாஹ்விடம் நீ கொண்டுள்ள நம்பிக்கை நிரூபணமாகி, அவன் வேலையுடன் நீ பூரணமாக இணைந்தவனாகிய நிச்சயத்துவம் உண்டானதும்–இது அவன் தந்த சக்தியின் துணையாலும் அவனுடைய தயாளமான உதவியாலும் சாத்தியமானதும்–நீ சதா பொறுமையுடனும், அவனுடன் முற்றும் இணைந்தவனாயும், அவனுக்குப் பூரணமாக கீழ்ப்படி பவனாகவும் இருந்து வரவேண்டும். அல்லாஹ்வின் ஏவல் விலக்கல்களுக்கு முரணாக உள்ள எதுவும் உன்னிடமோ பிறரிடமோ உண்டாக இடம் கொடாதே! அவன் கட்டளை எதுவும் வந்தால் கவனத்தோடு அதைச் செவிசாய்த்துக்கேள்; அதன்படி உடனே நட; ஒய்ந்திருக்காது செயலாற்று; அல்லாஹ்வின் கட்டளை வந்த பின் செயலற்றுக் கிடக்காதே அதை நிறைவேற்று வதில் உன் சக்தியையும் முயற்சியையும் ஈடுபடுத்து.

உன்னால் அக்கட்டளையை நிறைவேற்ற முடியாது இருப்பின் அல்லாஹ்வின் உதவியை நாடு; அவனிடம் புகலிடந்தேடு! அவன் முன் பணிவுடன் கிடந்து, அவன் மன்னிப்பை வேண்டு! அவன் கட்டளையை உன்னால் நிறைவேற்ற இயலாது அவனுக்குப் பணிவதன் மூலம் கிடைக்கும் கண்ணியத்தை எய்த விடாது தடுக்கப்படுவதன் காரணம் யாது என்று கண்டு பிடிக்க முயற்சிசெய். அவனுக்குப் பணிவதில் நீ முறைதவறி நடந்து கொண்டமையாலோ, நீயாகக் கற்பித்துக் கொண்டவற்றின் தீமையாலோ, ஒருக்கால் இந்நிலை உண்டாகி இருக்கலாம். அல்லது அகந்தையோ, உன்னால் எதுவும் முடியும் என்ற எண்ணமோ, எல்லாம் உன்னால் தான் நடக்கிறது என்ற உணர்வோ, உன் கீழான மனத்தையோ, சிருஷ்டியையோ அவனுடன் இணைவைத் ததோ இந்நிலை உண்டாகக் காரணமாகி இருக்கலாம். அதனால் அவன் தன் வாயிலிலிருந்து உன்னை அப்பாலாக்கி, அவனுக்குப் பணிவிடை செய்வதிலிருந்தும் விரட்டி அடித்துத் தன் பலத்தின் உதவியை உனக்குக் கிடைக்காது செய்து, தன் அருள் நோக்கை உன்னை விட்டுத் திருப்பிக்கொண்டு, உன்னிடம் கோபமடைந்த வனாய், உனது இவ்வுலகப் போராட்டங்களிலும் இச்சைகளிலும் நீ ஈடுபட்டு உழல்பவனாய்க் கிடக்கச் செய்து விடுவான். இத்தகைய ஒழுக்கம் அவனை நீ மறக்கும்படி செய்வதையும் உன்னைப் படைத்து ஊட்டி பற்பல அருட்கொடைகளை அருளியவனிடமிருந்து அப்பால் ஆகும்படி செய்வதையும் நீ உணரவில்லையா? அல்லாஹ்வைத் தவிர உள்ள இத்தகையவை உன்னை அவனிடமிருந்து பிரித்துவிடாதபடி விருப்புடன் இரு! அல்லாஹ் அல்லாத சகலமுமே அவனுக்குப் புறம்பானவைதாம். எனவே வேறு எதையும் அவனுக்கு பிரதியாக ஏற்காதே! அப்படிச் செவி சாய்த்து உன் ஆன்மாவுக்கு அநியாயம் இழைத்தவனாகாதே; நரக நெருப்புக்குப் பலியாகாதே! அப்போது நீ பச்சாத்தாபப்படுவதால் பயனிருக்காது. அப்போது உதவி கேட்டுக் கதறினாலும் உதவி வராது, அல்லாஹ்வை நீ திருப்திப்படுத்த நினைப்பாய்; ஆனால், நடைபெறாது. நீ மீண்டும் உலகத்துக்கு வந்து திருத்திக்கொள்ள விரும்புவாய்; ஆனால் அதற்கு வாய்ப்பிருக்காது.

உன் ஆத்மாவின்மீது கருணைகொள்; அதனிடம் அன்பாய் இரு உன் இறைவனுக்குச் சேவை செய்யக் சகல திறன்களையும் – உன் அறிவையும், ஆற்றலையும், மெய் விஸ்வாசத்தையும், ஆத்ம ஒளியையும், ஞானத்தையும் உபயோகப்படுத்த; விதிவசத்தில் இருளின் இடையில் உள்ள உன் சுற்றுப்புறத்தை இவற்றால் எழும் வெளிச்சத்தால் ஒளி பெறச்செய். அல்லாஹ்வின் ஏவல் விலக்கல் பற்றிய கட்டளைகளைப் பற்றிப் பிடித்துக்கொள்; இவற்றால் வழி நடத்தாட் டப்பட்டு உன் இறைவனை நோக்கிச் செல்லும் வழியில் முன்னேறு. இவையல்லாத சகலவற்றையும் அவனிடம் ஒப்படைத்துவிடு. உன்னைச் சிருஷ்டித்து, வளரச்செய்த அவனிடம் நன்றிக்குறைவாய் நடந்துகொள்ளாதே! அவன் கட்டளைக்கு அப்பாற்பட்ட எதற்கும் ஆசைப்படாதே! அவன் தடுக்காத எதையும் கெட்டதாகவும் கருதாதே! முந்திய நோக்கத்தை மனதில் கொண்டு ாருலகிலும் திருப்தி யுடையவனாய் இருந்து வா! இவ்விதம் நீ விரும்பும் சகலமும் முந்திய லட்சியத்துக்கும், நீ வெறுக்கும்யாவும் பிந்திய லட்சியத்துக்கும் இணைந்தனவாய் இருக்க வேண்டும். அவன் கட்டளைகளுக்கு நீ இணக்கமானவனானதும், இப்பிரபஞ்சம் முழுவதுமே உனக்குத் தலை சாய்க்கும்; அவன் தடுத்துள்ளவற்றை நீ உதறித் தள்ளியதும் வேண்டாத சகலமும் நீ எங்கிருப்பினும் உன்னைக் கண்டோடும். அல்லாஹ் தன் வேதங்கள் பலவற்றில் இவ்விதம் கூறி உள்ளான். 'ஆதமுடைய மக்களே, நான்தான் அல்லாஹ். என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவுமில்லை. நான் எந்த ஒரு வஸ்துவையும் ஆகுக என்றதும் அது உண்டாகிவிடுகிறது. எனக்குக் கீழ்ப்படியுங்கள். அதன் மூலம் ஒரு வஸ்துவை ஆகுக என்றதும் ஆகிவிடும்படியான சக்தி உடையவர்களாக உங்களை நான் ஆக்கிவிடுவேன்." மேலும் அவன் சொல்லியுள்ளான்: "ஹே பூமியே எனக்குச் சேவை செய்பவர்கள் யாரோ அவர்களுக்கு நீ சேவை செய்! உனக்குச் சேவை செய்பவர்கள் யாரோ அவர்களைக் கவலையுள் ஆழ்த்திவிடு!" என்று.

எனவே அவனுடைய விலக்கல்கள் உன்னிடம் வருகையில் நீ உன் அங்கங்கள் தளர்ந்த, களைப்படைந்த உடலால் ஏதும் செய்ய இயலாத நிலையை அடைந்த, இதயம் வெந்துவிட்ட, உயிரற்ற உடலுடைய,

ஒருவனைப்போல, ஜீவனற்றவனைப் போல இவ்வுலக இச்சைகளற்றவனாய். சகலவற்றிலிருந்தும் துண்டிக்கப்பட்டவனாய், மிருக இச்சைகள், மிருக ஜீவன் எதுவுமே இருக்கிறது என்று கூறத் தக்க அறிகுறி அற்றவனாய் இருண்ட மண்டபம் போலும் பாழடைந்து மேல்தளம் இடிந்து கிடக்கும் கட்டடம் போன்றும் ஆகிவிடவேண்டும். உன் செவிகள் பிறவிச் செவிடன் உடையவை போல் செவிடாகவும், உன் உதடுகள் முற்றும் அழுகி வீங்கியவை போலும், உன் பற்கள் அடித்தூரில் சீழ்பிடித்துச் கெட்டுப்போனவை போலும், உன்கரங்கள் வாதம் அடித்து எதையும் எடுக்க சக்தியற்றவை போலும் உன் கால்கள் முடங்கி நடுக்கமெடுத்து புண்கள் நிறைந்தவை போலும், உன் ஆண்குறி எந்த வீரியமும் அற்றது போலும், உன் வயிறு சதாவும் நிரம்பியதால்–உணவின் தேவையே இல்லாததாய் இருப்பது போலும், உன் சித்தம் கலங்கியது போலும், உன்உடல் மரணித்து அடக்கஸ்தலத்துக்கு எடுத்துச் செல்ல ஆயத்தமாய்க் கிடப்பது போலுமான நிலைமையில் நீ இருந்து வரவேண்டும்.

அல்லாஹூத் தஆலாவின் ஏவல்கள் வருகையில் நீ எப்படி மரணித்தவன் போல் உடலை அசைக்க சக்தி அற்றவன் போல் கிடக்கி றாயோ அப்படியே அவன் ஏவல்கள் வருகையில் நீ அதைக் கேட்டு உடனுக்குடன் அதை நிறைவேற்ற வேண்டும். எனவே, இந்த ஷர்பத்தைக் குடித்து இந்த நிவர்த்தியைப் பெறு! அதன் மூலம் நீ உடல் சதையின் இச்சைகளிலிருந்தும், பாவங்கள் எனும் வியாதிகளிலி ருந்தும் விடுபட்டுப் பரிபூரண ஆத்மீக சுகம் பெறுவாய்.

உபதேசம் பதினான்கு

ஹே, புலன் நுகர்ச்சியின் அடிமையே, அல்லாஹ்வின் அடியார் களின் ஸ்தானத்தை நீ வேட்காதே; நீ உன் புலன் நுகர்ச்சிக்குச் சேவை செய்கிறாய்; அவர்களோ அல்லாஹ்வைத் தொழுதேத்து பவர்கள்; உன் ஆசையோ இவ்வுலகின்மீது; அவர்கள் ஆசையோ வரப்போகிற உலகின்மீதுதான். நீ இவ்வுலகைக் காண்கிறாய்; அவர்கள் காண்பதோ இப்பூமிக்கும் வானத்துக்கும் உரிய இறை வனையாகும். உன் சுகம் சிருஷ்டிகளிடம் இருக்கிறது; அவர்கள் சுகமோ அல்லாஹ்விடமுள்ளது.

உன் இதயம் இப்பூமியில் உள்ள பொருள்களால் பந்தப்பட்டுள்ளது; அவர்கள் உள்ளங்களோ அல்லாஹ்வின் ஆட்சி பீடத்தே பந்தப்பட்டுள்ளன. நீ கண்டதை காட்சி என்றெண்ணி அதற்குப் பலியாகிறாய்; அவர்களோ நீ காண்பவற்றைக் காணார்கள்; ஆனால், (இக்கண்களால்) காணமுடியாத ரட்சகனையே காண்கிறார்கள்! நீ இவ்வுலக இச்சைகளுக்கு இரையாகிக் கிடந்து உழல்கிறாய்; அவர்களோ தம் வாழ்க்கை லட்சியத்தை எய்துகிறார்கள்; தங்களுக்கு ஈடேற்றத்தைத் தேடிக் கொள்கிறார்கள்.

இவ்வடியார்கள் சிருஷ்டியிலிருந்தும், இவ்வுலக இச்சைகளிலி ருந்தும், தம் ஆசைகளிலிருந்தும் மறைந்தவர்களாகித் தமது எஜமானனின் முன் ஓர் இடத்தைத் தேடிக்கொள்கின்றனர். இவர்கள் தங்கள் ரட்சகனுக்கு கீழ்ப்படியவும், அவனைத் துதிக்கவும் செய்வது போன்ற தங்கள் வாழ்க்கை லட்சியத்தை எய்துவதற்கான பலத்தை அவன் இவர்களுக்கு அருளுகிறான். இது அவன் காட்டும் சலுகையாகும். அவன் விரும்புவோர்க்கு இதை அருளுகிறான். இந்த அடிபணிதலையும் துதித்தலையும் தம்மீது கண்டிப்பான கடமையாக அவர்கள் ஆக்கிக் கொண்டுள்ளனர். அவன் அருளிய பலத்தாலும் வசதியாலும் அவர்கள் விடாது முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். ஆனால், இதில் அவர்களுக்குக் கஷ்டம் ஒன்றும் உண்டாவதில்லை. ஆகவே, பணிவு அவர்கள் ஆத்மாவாகவும் உணவாகவும் ஆகிவிட்டது எனலாம்.

இவ்விதம் உலகம் சொர்க்கத்தைப் போலவே அவர்களுக்குப் பாக்கியமானதாகவும் அனுபவிப்பதற்கு உரியதாகவும் ஆகி விடுகிறது. எப்படியெனின், இவர்கள் ஏதேனும் ஒரு வஸ்துவைப் பார்ப் பார்களாயின், அதைப் பார்க்குமுன்பே, அதைச் சிருஷ்டித்தவனின் செயலை அதில் காண்கிறார்கள். இவ்விதம் இவர்கள் பூமிக்கும் வானத்துக்கும் நிலையான சக்தியைத் தருகிறார்கள். இருப்போர்க்கும் இறந்தோருக்கும் ஆறுதல் அருளுகிறார்கள். இவர்களின் ரட்சகன் தான் பரப்பியுள்ள இப்பூமியில் இவர்களை நிலையாணிகளாக ஆக்கியுள்ளான். இவர்கள் ஒவ்வொருவரும் நிலை குலையாது நிற்கும் ஒரு மலையைப் போன்றுள்ளனர். ஆகையால், இவர்கள் பாதையை விட்டு விலகி நில்!

தங்கள் பெற்றோராலும் பிள்ளைகளாலும் தமது நோக்கத்திலிருந்து திருப்ப முடியாத இந்த அடியார்களின் பாதையில் குறுக்கிட வேண்டாம். அல்லாஹ்வால் சிருஷ்டித்து இவ்வுலகில் பரப்பப்பட்டவர்களில் இவர்கள் உத்தமமானவர்கள், உலகமும் வானங்களும் உள்ளளவும் அல்லாஹ்வின் நல்லாசியும், அருட்பேறுகளும், கருணையும் இவர்கள் மீது இறங்கிக் கொண்டிருக்குமாக!

உபதேசம் பதினைந்து

ஒரு மஸ்ஜித் போன்ற இடத்தில் நான் நின்றுகொண்டிருந்த தாகக் கனவு கண்டேன். அங்கே மானிட வர்க்கத்திலிருந்து விலகிய சிலர் இருக்கக் கண்டேன். அப்போது நான் எனக்குள்ளாகவே எண்ணிக்கொண்டேன், 'இன்ன மனிதர் மட்டும் இப்போது இங்கிருந்தால், இவர்களை அவர் ஒழுங்குபடுத்தி, இவர்களுக்கு நேர்வழி காட்டியிருப்பாரே!, என்று. நான் ஒரு பெரியாரைக் குறித்தே இவ்விதம் எண்ணினேன். அங்கிருந்தவர்களோ என்னைச் சூழ்ந்து கொண்டனர். "என்ன நேர்ந்தது? ஏன் நீர் பேசக்கூடாது" என்று அவர்களில் ஒருவர் வினவினார். "நீங்கள் விரும்பினால் பேசுகிறேன்" என்று நானும் ஒப்புக்கொண்டேன்.

நான் சொன்னேன்: "சத்தியத்துக்காக ஜனங்களை விட்டு விலகி ஒதுங்கி நிற்கும்போது, உங்கள் வாயால் ஜனங்களிடம் எதையும் கேட்காதீர்கள். நீங்கள் அப்படி (வாயால்)க் கேட்பதை நிறுத்திய பிறகு, உங்கள் மனத்தாலும் அவ்வாறு கேட்காமல் இருக்கப் பழகுங்கள். ஏனெனில், மனத்தால் கேட்பதும் வாயால் கேட்பதையே ஒக்கும். அவ்விதம் பழகியதும் அல்லாஹ் ஒவ்வொரு நாளும் புதுப்புது மாட்சியில் விளங்குவதை, (மக்களை) மாற்றுவதும், மாறச் செய்வதும் ஏற்றுவதும், இறக்குவதுமாக இருப்பதை உணர்வீர்கள். சிலரை அவன் சொர்க்கத்தின் உயர்வுக்கு உயர்த்துகிறான். சிலரை இழி நிலையிலும் இழிய நிலைக்குத் தள்ளி விடுகிறான். அதன் பின் சொர்க்கத்தளவில் உயர்ந்தவர்களை, இழிய நிலைக்கு இறக்கிவிடுவதாக பயமுறுத்துகிறான். அதே சமயம் உயரிய நிலையிலேயே அவர்கள் இருக்கவிடும் நம்பிக்கையையும் ஊட்டுகிறான். அவன் இழி நிலையிலும் இழிந்த நிலைக்குத்

தள்ளியவர்களிடமோ, அவர்களை அந்நிலையிலேயே விட்டு வைப்பதாகப் பயமுறுத்துகிறான்; அதே சமயம் உயரிய வானத்துக்கு உயர்த்தும் நம்பிக்கையும் தருகிறான்," இதன்பின் நான் விழித்து விட்டேன்.

உபதேசம் பதினாறு

ஜனங்களிடத்தில் நீ சதமென நம்பிக்கை வைப்பதும், பிறரின் திறனிலும், வழிவகைகளிலும், வருவாயிலும் அக்கறை காட்டுவதும் போல் வேறு எதுவும் உன்னை அல்லாஹ்வின் அருளையும் ஆசியையும் பெறாது தடுப்பதில்லை. ஜனங்களை நம்பி வாழத்துணிவது நபி பெருமான் (ஸல்) அவர்களால் அனுஷ்டிக்கப்பட்ட ஜீவித முறைப்படி நடக்கத் தடையாய் வந்து சேர்கிறது. நீ ஜனங்களுடன் இருக்கும் வரை, அவர்கள் வெகுமதிகளையும், உதவிகளையும் எதிர்பார்த்து, அவர்கள் வாயிலில் ஆவலுடன் காத்துக் கிடக்கும் வரை, அல்லாஹ்வின் சிருஷ்டிகளை அவனுக்கு இணைவைப்பவனாகி விடுகிறாய், அதற்காக நபி பெருமான் (ஸல்) அவர்களின் குண ஒழுக்கப்படியான ஜீவியம் நடத்த வகையற்றவனாய் அதாவது இம்மையின் ஆகுமான சம்பாத்தியத்துக்கு மார்க்கமற்றவனாய்த் தண்டிக்கப்படுவாய்.

ஜனங்களை நம்பி வாழ்வதையும், அவர்களை இறைவனுடன் இணை வைப்பதையும் விட்டொழித்த பின் நீயாகப் பொருளீட்ட முயன்று, உன் சொந்த உழைப்பில் வாழ்பவனாய், உழைப்பையே நம்பியவனாய் அதிலேயே திருப்தியுற்றவனாய் ஆன பின்னும், உன் இறைவனின் அருளை மறந்தவனாய் இருந்தால், நீ இறைவனுக்கு இணைவைப்பவனாகவே இருக்கிறாய்; உன்னுடைய இந்த இணைவைத்தல் முந்திய இணைவைத்தலை விட மிகவும் நாசூக்கானது, அதற்கும் அல்லாஹ் உன்னை தண்டிப்பான். தன் அருட்கொடைகளிலிருந்து உன்னை அப்பாலாக்குவான்; உன்னோடு நேரடித் தொடர்பு எதுவும் வைக்க மாட்டான்.

இந்நிலையை விட்டு விலகி உன்னகத்திலிருந்து இணைவைத் தலை அகற்றியதும், உன் சம்பாத்தியத்தையும், திறமையையும், சக்தியையும் நீ நம்பி இருந்ததை விடுத்து அல்லாஹ்வே ஜீவனம் அருளுபவன்,

சுகத்தின் காரணங்கள் உண்டாக்குபவனும், சம்பாதிக்கப் பலமளிப்பவனும் சகல நல்லவற்றின் மீதும் சக்தியை அளிப்பவனும் அவன் தான்; ஜீவிதம் அவன் வசமே யுள்ளது என்பதை நீ உணர்ந்ததும், சில சமயம் ஜனங்களிடம் சோதனையான நேரத்தில் நீ கேட்பதன் மூலம் உனக்குத் தேவையான தைக் கிடைக்கச் செய்கிறான். சில வேளைகளில் நீ அவனிடம் நேரடியாகக் கேட்ட தற்காகக் கிடைக்கச் செய்கிறான்; மற்றும் சில சமயம் உன் உழைப்புக்கு ஊதியமாக அதைக் கிடைக்க வைக்கிறான்; வேறு சில சந்தர்ப்பங்களில் காரண காரியங்களை நீ உணரா வண்ணம் தானாகவே அவன் அருட்கொடைகளாக நீ அடையும்படி செய்கிறான்.

உனக்கும் அந்த அல்லாஹ்த் தஆலாவின் அருட்கொடைக்கும் இடையிலுள்ள திரையை அவன் அகற்றி, உனக்குத் தேவையான சமயம், உன் தேவைக்கேற்ற அளவில் தன் நல்லருளால் உனக்கு உதவி, நோயாளிக்கு உற்ற நண்பனான வைத்தியன்போல் அவன் நடந்து கொள்கையில் நீ அவன் முன் விழுந்து, அவன் பாதுகாவலில் ஆகி, அவனையன்றி வேறு எதனிடமும் மனம் திரும்பாதபடி காவல் தேடியதும், அவனும் தன் அருட்கொடைகளால் உனக்குத் திருப்தி அளிக்கிறான்.

இவ்விதமாக உன் இதயத்திலிருந்து சகல நோக்கங்களையும், சகல ஆசைகளையும், சகல இன்பங்களையும், சகல லட்சியங்களையும் அவன் அகற்றியதும் அவன் நோக்கமின்றி வேறு எதுவும் உன் இதயத்தில் இருப்பதில்லை. இதனால் அவன் உனக்காக ஒதுக்கி உள்ள பங்கு– உன்னை விட்டுத்தப்ப முடியாத அப்பங்கு–வேறு யாருக்காகவுமின்றி உனக்காகவென்றே இருக்கும் பங்கு–உன்னை வந்தடைய வேண்டுமென்று அவன் நாடினால், உன்னால் அதற்கான பற்றுதலை உண்டாக்குகிறவன் அதையும் உன்னை நோக்கி முடுக்கு கிறான்; அதன் பயனாய் உனக்கு தேவையுள்ள சமயம் அது உன்னை வந்தடையும். அப்போது அதற்காக நன்றி அளிக்க உனக்கு அவன் பலமளிக்கிறான். அவ்வுதவி அவனிடமிருந்தே வருகிறது என்று தெரியக்கூடிய ஞானத்தையும் உனக்குத் தருகிறான்; நீ அவனிடம் நன்றி காட்டுவதற்காகவே அது உனக்குத் தரப்பட்டது என்ற ஞானத்தையும் அருளுகிறான். இதன் மூலம் ஜனங்களை விட்டு அதிகம்

விலகியிருக்கவும், அவனை அன்றி மற்றவை உன் உள்ளத்தில் புகாதபடி தடுத்துக் கொள்ளவும் நீ கொள்ளும் எண்ணத்தைப் பலப்படுத்துவான்.

உன் ஞானம் வலுப்படுத்தப்பட்டு, யதார்த்தம் உறுதியாகி உன் இதயம் விரிவடைந்து, ஒளி பெற்று அதன் மூலம் அவனுக்கு நீ அருகிலிருப்பதும், அவன் முன் உனக்குள்ள அந்தஸ்தும், உன் நம்பிக்கையும் அவன் இரகசியங்களைப் பாதுகாக்கும் உன் தகுதியும் அதிகமானதும், உனக்கு ஒரு நற்சமிக்ஞையாகவும், உன் கண்ணிய உயர்வின் அறிகுறியாகவும் அருளப் படப் போகும் அருட்கொடைகள் எப்போது உன்னை வந்து அடையும் என்ற ஞானம் உனக்குக் கிட்டி விடும். இது அவனிடமிருந்து வரும் ஒரு கருணையின் செயலாகவும், அன்பான காரியமாகவும், வழிகாட்டுதலாகவும் இருக்கலாம். அல்லாஹ் சொல்கிறான். "இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு நாம் அதை ஒரு வழிகாட்டியாக்கினோம். நாம் கட்டளைகளைப் பொறுமையுடனும், நமது அறிவிப்புகள் வெளியாகுமென்று நிச்சயமான உறுதியுடனும் இருந்த ஒரு கூட்டத்தாரை அவர்களுக்கு வழிகாட்டும் தலைவர்களாக ஆக்கினோம்."(32 : 23, 24) என்று.

மேலும், "நம்முடைய வழியில் நடக்கச் சிரமப்பட்டு முயற்சி செய்ப வர்களைப் பொறுத்தவரை, நம் வழிகளில் அவர்கள் செல்வதற்காக நாம் நிச்சயம் அவர்களுக்கு வழிகாட்டுவோம்" (24 : 69) என்றும் அல்லாஹ் கூறியுள்ளான்.

அல்லாஹ்ஸுப்ஹானஹுவத் தஆலா மேலும் சொல்லியுள்ளான். மேலும் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; அவன் கற்றுத் தருவான்; பிரபஞ்சத்தையே அடக்கியாளும் சக்தியைத் தந்தருள்வான்; இதற்குக் குழப்பமற்ற தெளிவான அனுமதியையும், சூரியன் போன்று பிரகாசமான அறிகுறிகளையும், சகல இனியவற்றையும்விட இனிமையான வார்த்தைகளையும், கொஞ்சமும் ஐயத்துக்கு இடமற்ற தெளிவான உண்மையான வெளியீட்டையும் மிருக இச்சையின் தூண்டுதல்களிலிருந்தும், சபிக்கப்பட்ட ஷைத்தானுடைய ஊசாட் டகங்களிலிருந்து விடுபட்ட பாதுகாவலையும் தந்தருள்வாய்."

மேலும் அல்லாஹ் தன் வேதமொன்றில் கூறி உள்ளதாவது: "ஆதமின் மக்களே, நான் தான் அல்லாஹ். என்னையன்றி வணக்கத்துக்குரியது வேறு எதுவுமில்லை; நான் எந்த ஒரு பொருளையும் 'ஆகும்' என்றதும் அது உண்டாகிவிடுகிறது. எனக்குக் கீழ்ப் படியுங்கள்; அதன் மூலம் நீங்களும் ஒரு பொருளை 'ஆகுக' என்றதும் அது உண்டாகிவிடும்படியான சக்தி உடையவர்களாக உங்களை நான் ஆக்கிவிடுவேன்" ஆதமின் மக்களில் பல நபிமார்களுக்கு, வலிமார்களுக்கு, விசேஷ அருள்பெற்ற நல்லடியார்களுக்கு அவன் இவ்விதச் சக்தியைக் கொடுத்திருக்கிறான்.

உபதேசம் பதினேழு

அல்லாஹ்வை நெருங்கி, அவன் கவர்ச்சியாலும் உதவியாலும் அவனுக்கு அருகில் ஆகும்போது–அதாவது நீ சிருஷ்டியையும், உன் ஆசையையும், நோக்கத்தையும் விட்டு அப்பாலாகி அவன் செயலிலும் நோக்கத்திலும் இணைந்தவனாகி, அதில் அவன் உத்தரவோ, செயலோ கட்டளையோ இன்றி உன்னிடமோ உன் மூலமோ எந்த அசைவுமே இல்லாது ஆகும் அந்த சந்நிதான நிலை எய்தியதும், ('பனா') என்ற நாஸ்தி நிலையை நீ அடைந்துவிடுகிறாய். ஆனால், அவனோடு ஐக்கியப்பட்டிருப்பது என்பது, அவன் சிருஷ்டிகள் எதனுடனும் ஒரு குறிப்பிட்ட, ஆனால் புரிந்துகொள்ளாத முறையில் ஐக்கியப்பட்டு இருப்பதைப் போன்றன்று. எதுவும் அவனுக்கு இணையானதாய் இல்லை; அவன் யாவையும் கேட்பவன்; பார்ப்பவன்."

சிருஷ்டியாளனான இறைவன், தன் சிருஷ்டியால் உண்டான எதற்கும் உவமையானவனாகவோ, ஜாடை உடையவனாகவோ இல்லாது சகலவற்றிற்கும் மேற்பட்டவனாய் இருப்பதால் அவனோடு ஐக்கியப்பட்ட அனுபவமுடையவர்கள் தாம் அதை உணர்ந்த காரணத்தால், அவனோடு ஐக்கியமாவது என்ன என்பதையும் அறிவார்கள். இவர்களிலுள்ள ஒவ்வொருவரும்கூடத் தமக்கேயுரிய, மற்றவர் கண்டிராத முறையில் வேறுபட்ட அனுபவத்தையே இதில் கண்டு இருப்பார்கள்.

நபிமார்களிலும், ரஸூல்மார்களிலும், ஔலியாக்களிலும் ஒவ்வொருவருக்கும் மற்ற யாவருக்கும் தெரியாத ரகசியம் தெரிந்திருந்தது. இதனால் சிற்சில சமயங்களில் சீடனான முரீதுக்குத் தெரிந்து

இருந்த ஓர் அந்தரங்கள் குருவான ஷைகுக்குத் தெரியாதிருந்தது. முரீது தன் ஷைகு அடைந்த ஆத்மஞான உயர்வை எய்தியவரான நிலையிலுங்கூடத் தன் ஷைகுக்குத் தெரிந்த ஓர் இரகசியம் அவருக்குத் தெரியாதிருக்கும். ஷைகின் ஆத்மஞான நிலையை முரீது அடைந்ததும், அவர் ஷைகிடமிருந்து துண்டிக்கப்பட்டதும் அல்லாஹ் அவருடைய மேற்பார்வையாளனாகிறான். அவன் அவரைச் சிருஷ்டிகளிலிருந்தே முற்றும் துண்டித்து விடுகிறான்.

இரண்டு ஆண்டுகள் குழந்தைக்குப் பாலூட்டி விட்டுப் பிறகு நிறுத்திவிடும் தாதியைப் போன்று இருக்கிறார் ஷைகு. கீழான ஆசைகளும் மனித நோக்கங்களும் மறைந்த பின்னர் சிருஷ்டிகளோடு எந்தத் தொடர்பும் இருப்பதில்லை. கீழான ஆசைகளும், நசுக்கப்பட வேண்டிய நோக்கங்களும் தன்னை ஆட் கொண்டிருக்கும் வரை தான் முரீதுக்கு ஷைகின் உதவி தேவையாய் இருக்கிறது. இந்த ஊனுடம்பின் பலஹீனங்கள் போனபின், முரீதிடம் எந்த அப்பழுக்கும், குறைபாடும் இருக்காதாகையால், அவருக்கு ஷைகு தேவையற்ற வராகி விடுகிறார்.

இவ்விதம் நாம் விவரித்தபடி நீ அல்லாஹ்வுக்கு நெருக்கமானதும், அவனுக்குப் புறம்பான யாவற்றின் இடமிருந்தும் பாதுகாப்புப் பெற்றவன் ஆகிவிடுவாய். அவனிடமின்றி வேறு ஜீவிதத்தையே காணமாட்டாய். உனக்கு ஏற்படும் லாபத்திலோ; நஷ்டத்திலோ, வெகுமதியிலோ, அது கிட்டாமையிலோ, அச்சத்திலோ, நம்பிக்கையிலோ, பாதுகாப்புத் தேடுவதற்குரியவனான, அச்சப்படுவதற்குரியவனான அல்லாஹ்வையே காண்பாய். ஆகவே, சதா அவன் செயல்களையே நோக்கிக் கொண்டிரு! இவ்வுலக, மறுவுலக அவன் சிருஷ்டிகள் சகலவற்றிலும் இருந்து துண்டிக்கப்பட்டவனாக அவனுக்குக் கீழ்ப்படிதலிலேயே சதா அவன் உத்தரவுகளை எதிர்பார்த்துக் கொண்டிரு. அவன் சிருஷ்டிகள் எதினிலும் உன் இதயம் ஈடுபட இடம் கொடாதே!

சிருஷ்டிகள் அனைத்தும் ஒரு மனிதன் என்று வைத்துக் கொள்; அம்மனிதனை மாபெரும் ராஜ்ஜியும் உள்ள, பலமிக்க பராக்கிரமம் பொருந்திய, சர்வசக்தி வாய்ந்த ஓர் அரசன் கைது செய்கிறான் என்றும் வைத்துக்கொள். அதே அரசன் அம்மனிதனின் கழுத்திலும், கால்களிலும்

விலங்கிட்டு, வேகமும், ஆழமும் பொருந்திய அகன்ற ஓர் ஆற்றின்கரையிலே ஒரு விருட்சத்தோடு சேர்த்து அவனைக் கட்டிப்போட்டு, யாரும் நெருங்க முடியாத ஒரு சிம்மாசனத்தில் அந்த அரசன் அமர்ந்து கொண்டு தன்னைச் சுற்றிலும் அம்புகளும், வில்களும், ஈட்டிகளும், மற்றும் விவரிக்க முடியாத பற்பல ஆயுதங்களும் குவிந்து கிடக்க அவற்றிலிருந்து அவன் விரும்பிய ஆயுதத்தை எடுத்துக் கட்டிப் போடப்பட்டுள்ள அந்த மனிதன் மீது வீசிக் கொண்டே இருக்கிறான் என்றும் வைத்துக்கொள். இவற்றை எல்லாம் கண்ட பின்னும் ஒருவன் தன் கவனத்தை அரியாசனத்துள்ள அரசனிடம் செலுத்தாது, அவனிடம் அச்சம் காட்டாது, நம்பிக்கை கொள்ளாது, கட்டிப்போடப்பட்ட மனிதனுக்குப் பயப்படவும், அவனிடம் நம்பிக்கை வைக்கவும் செய்வானாயின் அத்தகையவனை யாராவது பாராட்டுவார்களா? அவனை மூடன், அறிவற்றவன், கிறுக்கன், மிருகம் என்று அறிவுடையார் இகழார்களா?

எனவே, கண்ணிருந்தும் குருடனாகாமல், அல்லாஹ்வின் பாது காவலைத் தேடு, சேர்ந்த பின்னும் பிரிக்கப்படுவது போலும், அருகிலி ருந்த பின்னும் அப்பால் அகற்றப்பட்டது போலும், நம்பிக்கை கொண்ட பின்னும், நம்பிக்கை அற்றுப்போனது போலும் ஆகிவிடாதே!

உலகம் நாம் குறிப்பிட்ட ஆற்றைப் போன்று ஓடிக்கொண்டே இருக்கிறது. நாளுக்கு நாள் அதன் பிரவாகம் அதிகரிக்கிறது. மனித இனத்தின் மிருக இச்சைகளும், மோகங்களும் அதில் வந்து சேர்ந்து அதை மேலும் மேலும் பிரவாகம் எடுத்தோடச் செய்கின்றன. அம்புகளும் மற்ற ஆயுதங்களுமோ வெனின், அவை தாம் மனித இனத்துக்கு (தக்தீர் எனும்) விதிவசம் கொண்டுவரும் சோதனை களாகும். இவ்வுலக வாழ்வின் தலையாய அம்சம் மனிதனுக்குச் சோதனைகளும், கஷ்டங்களும், துயரங்களும், போராட்டங்களும் ஏற்படுவதாகவே இருக்கிறது. அவர்கள் பாக்கியமாகவும், போகமாகவும் கருதுபவைகூடத் துயரங்களால் சூழப்பட்டே இருக்கின்றன.

இவ்விஷயத்தை எந்த அறிவாளியும் கூர்ந்து கவனிக்கும் போது, சத்தியத்துவத்தின் ஞானம் ஒரு சிறிதேனும் அவனுக்கு இருக்குமாயின்,

மறுமையில் வரப்போவதை அன்றி வேறு உண்மையான வாழ்க்கையே இல்லை என்பதைப் புரிந்து கொள்வான். "மறுமையின் வாழ்க்கையை அன்றி வேறு வாழ்க்கை இல்லை" என்றுதான் நபி பெருமானார் (ஸல்) அவர்களும் அருளியுள்ளார்கள்.

குறிப்பாக, இது ஒரு மெய்விஸ்வாசியின் விஷயத்தில் முற்றும் உண்மையாகும். அதனால்தான் நபி பெருமான் (ஸல்) அவர்கள் திருவுளமானார்கள்; "இவ்வுலகம் மெய்விஸ்வாசிக்குச் சிறைச் சாலையாகவும் நிராகரிப்பவனுக்குச் சொர்க்கமாகவும் இருக்கிறது" என்று. "நன்மையாளன் தடைகளுக்கு உட்பட்டவன்" என்றும் அவர்கள் கூறியுள்ளார்கள்.

இந்நிலையில் இவ்வுலகில் சுக வாழ்க்கை வாழ்வது என்பது எப்படிச் சாத்தியமானது? எப்படித்தான் அதை விரும்ப முடியும்? எனவே உண்மையான இன்பம் அல்லாஹுஸுப்ஹானஹுவத் தஆலாவுடன் முற்றும் தொடர்பு கொண்டவனாக ஆவதன் மூலமே, அவனோடு இணைந்து நடப்பதன் மூலமே, அவன் முன் பூரணமாகச் சரணாகதி அடைந்து விடுவதன் மூலமே சாத்தியமானதாகும். நீ இதைச் செய்கையில் இவ்வுலகிலிருந்து விடுபட்டவன் ஆவாய். அப்போது உன் மீது அல்லாஹ் கருணையையும் சுகத்தையும், அன்பையும் வளத்தையும், நன்மைகளையும் சொரிவான்.

உபதேசம் பதினேட்டு

எனது பிரிவு அறிவுரை இது; உனக்கு நேரும் சங்கடம் எதைப் பற்றியும், நீ நண்பனோ பகைவனோ எவனிடமும் முறையிடாதே! இச்சோதனையை உண்டாக்கியதற்காக உன் இறைவனைக் குறை கூறாதே! உனக்கு நேரும் தன்மையை நீ தெரியப்படுத்தலாம்; அதற்காக நீ காட்டக்கூடிய நன்றியை வெளியிடலாம். அதிலும் உன் நன்றியை வெளியிடுவதற்காக ஒரு பொய்யைச் சொல்வதைவிட, உன் வெளிரங்க நிலைமை பற்றிய குறைபாட்டை விளம்பரப்படுத்துவதை விட உண்மையானதைச் சொல்லிவிடுவது நல்லது. அல்லாஹ்வின் அருட்கொடைகளைப் பெறாதவன் யார்? சர்வ சக்தனான அல்லா ஹுத்

தஆலா சொல்கிறான்: "அல்லாஹ்வின் அருட்கொடைகளை எண்ணிப் பார்க்கத் துணிந்தால் உங்களால் அவற்றை எண்ணி முடிக்க முடியாது" (14 : 34) என்று. உன்னிடம் அவன் அருட்கொடைகள் எத்தனை இருக்கின்றன! ஆனால், நீ அவற்றை உணர்வதில்லை. சிருஷ்டிகளிலுள்ள எதனாலும் நீ ஆறுதல் பெற்றவனாக ஆகி விடாதே; அவற்றில் பற்றுதல் வையாதே! உன் நிலையை யாரிடமும் சொல்லவும் வேண்டாம்! சர்வ புகழுக்கும் சக்திக்கும் உரிமையா ளனான அல்லாஹ்விடமே நீ பற்றுதல் கொள்ள வேண்டும்; அவனிடமே ஆறுதல் தேட வேண்டும்; அவன் மீது நீ கொண்டுள்ள குறை பாடுகளை அவனிடமே தெரிவி.

வேறு யாரையும் நீ எதிர்பார்க்க வேண்டாம். ஏனெனில், வேறு எதிலும் நல்லது–கெட்டது கைப்பற்றல்–கைவிடல், கௌரவம்–அகௌரவம், ஏற்றம்–இறக்கம், வறுமை–வளம், அசைவு–ஸ்தம்பிதம் ஆகியவை இல்லை. யாவுமே அல்லாஹ்வால் சிருஷ்டிக்கப்பட்டவை; இவற்றின் இயக்கம், அவன் உத்தரவையும் அனுமதியையும் கொண்டு நடப்பதாய், அவன் கைக்குள் அடங்கியதுதான். அவன் குறித்துள்ள காலம்வரை அவை இயங்கும். அவன் நிர்ணயித்து உள்ள கால அளவு வரையே யாவும் தரிப்பட்டிருக்கும். அவன் முன்னரேயே செய்தவை முன்பே உள்ளவை என்றோ, பின்பு செய்தவை பின்பு உண்டானவை என்றோ கூறிவிட முடியாது. உனக்கு ஏதாவது சங்கடம் உண்டாக்க அல்லாஹ் நாடுவானேயாயின் அவனைத் தவிர வேறு யாராலும் அதைத்தடுக்க முடியாது. அவன் நன்மை செய்ய நாடுவானாலும் அதையும் யாராலும் தடுத்து நிறுத்தமுடியாது.

நீ வசதியுடனும் கொஞ்சம் சௌகரியமாகவும் இருந்து கொண்டு, இவற்றில் இன்னும் அதிக வசதியும் சௌகரியமும் பெறவேண்டும் என்ற அவாவில்–உனக்குத் தரப்பட்டுள்ள வசதி சௌகரியங்களின் தன்மையைப் பற்றிக் கண்ணை மூடிக்கொண்டு முறை இட்டால், அல்லாஹ் உன்னிடம் கோபம் அடைவான்; உன்னிடமுள்ள வசதியையும் சௌகரியத்தையும் பறித்து விடுவான்; உன் முறையீட்டிலள்ள நிலையை அல்லாஹ் உண்மையாக்குவதோடு உன் தொல்லைகளை அதிகமாக்கித் தன் தண்டனையையும், உன் மீதுள்ள வெறுப்பையும், கோபத்தையும்

அதிகரிக்கச் செய்வான்; அவன் பார்வையை விட்டும் கீழே விழும்படியும் செய்வான்.

எனவே, உன் உடல் சதை கத்தியால் துண்டங்களாக்கப்படினும், உன்னால் முடிந்தவரை குறை கூறாது எச்சரிக்கையாய் இருந்துகொள்! உன்னைக் காப்பாற்றிக் கொள்! அல்லாஹ்வுக்கு அஞ்சு! அல்லாஹ்வுக்கு அஞ்சு! அல்லாஹ்வுக்கு அஞ்சி நட! நீ தப்பிக்கொள்! தப்பிக் கொள்! உஷார்! உஷார்!

ஆதமின் மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளில் மிகப் பல அவர்கள் இறைவனைப் பற்றிக் குறைகூறுவதால் வருவனவேயாகும். யாராயினும் அவன்மீது குறை கூறுவது என்ன நியாயம்? அவன் கருணையாளர் களுக்கெல்லாம் கருணையாளன்; நீதிபதிகளுக்கும் உன்னதமான நீதிபதி. பொறுமையின் பொக்கிஷம். அருள் சொரிபவன்; தன் அடியானிடம் அன்பாய் இருப்பவன்; தன் அடியானுக்குப் பாசமான உறவினனாயும் பொறுமையும், அன்புப்பரிவும் மிகுந்த வைத்தியனாயும் விளங்குகிறான். பாசமிக்க அன்பு இதயம் கொண்ட ஒரு தந்தையிடமோ தாயிடமோ நீ குறை காண முடியுமா?

நம் பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒரு தாய் தன் மகனிடம் காட்டுவதைவிட அதிகமாக அல்லாஹ் தன் அடியா னிடம் கருணை காட்டுபவனாய் இருக்கிறான்" என்று ஹே ஏழையே, உயர்ந்த பட்ச நல்லொழுக்கமுடையவனாய் இரு! துயரம் நேர்கையில் உன் பொறுமையெல்லாம் எல்லை கடந்துவிடினும் பொறுமையுடன் இரு! உன் மகிழ்ச்சியுடன் அல்லாஹ்வுக்கு அடிபணிவதன் மூலம் பொறுமையைப் பற்றிப் பிடித்தவனாய் இரு! அவனிடம் காட்டும் இசைவையும், மனப்பூர்வமான பணிவையும் பற்றிப் பிடித்தவனாய் இரு! இன்னும் அதிகத் திருப்தியும் சமாதானமும் அடைந்தவனாகு!

நீ இன்னும் வாழ்க்கையிலிருக்கக் கண்டால் அதைவிட்டும் மறைந்துபோ! இவ்விதம் நீ மறைந்து விட்டால், ஹே தேடற்கரிய மாணிக்கமே, நீ எங்கே கிடைப்பாய்? எங்கே உன்னைத் தேடுவது? நீ அல்லாஹ்வின் இவ்வார்த்தைகளைக் கேள்விப்பட்டது இல்லையா? யுத்தம்

புரிலது நீங்கள் வெறுக்கும் காரியமாய் இருந்தும். உங்கள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது. ஒரு விஷயம் நன்மையானதாய் இருந்தும் நீங்கள் அதை வெறுக்கலாம்; ஒரு விஷயம் உங்களுக்குத் தீமையானதாய் இருந்தும் அதை நீங்கள் விரும்பலாம். அது (பற்றிய நன்மை தீமை) அல்லாஹ்வுக்குத் தெரியும்; உங்களுக்குத் தெரியாது." (2 : 216)

வஸ்துக்களின் உண்மைளான நிலை உனக்குத் தெரியாததாகச் சுருட்டப்பட்டிருக்கிறது; அதிலிருந்து உன் பார்வை திரையிடப் பட்டுள்ளது. எனவே அதை விரும்புவதிலோ வெறுப்பதிலோ முறை தவறி நடந்து கொள்ளவேண்டாம். 'ஸாலிக்' என்ற முதல் படியை நீ அடைந்து விட்டவனாய் இருப்பின் சன்மார்க்க நெறி முறைப்படி ஒழுகிவா. 'விலாயத்' நிலையில் அவன் உத்தரவுகளுக்கு அடிபணிந்து நட. இந்த இரண்டாவது நிலையில் ஆசையின் வாழ்க்கையிலிருந்துத மரணித்தவனாய் இரு. இந்நிலைக்கு மேலே செல்ல வேண்டாம். அல்லாஹ்வின் செயல் கண்டு திருப்தி அடை. அதை மனப்பூர்வமாக ஏற்றுக்கொள். அப்போது கடைசி நிலைகளான அப்தால், கௌது, ஸித்தீக் ஆகியவற்றுள் மறைந்துபோவாய், விதி வசத்தின் பாதையில் தடை போடாதே; குறுக்கிடாதே, குறை கூறுவதிலிருந்து உன் கீழான மனத்தையும், உன் இச்சையையும் அப்பாலாக்கு; உன் நாவை அவ்விதம் செய்யவிடாது அடக்கிக்கொள்.

இதை நீ செய்த பின்னர், விதிவசம் நல்லதாய் இருப்பின், உன் இறைவன் அதிகமான நன்மையை அருளுவான்: மகிழ்ச்சிகரமான சந்தோஷ வாழ்க்கையைத் தருவான். அது கெட்டதாய் இருப்பின், அதன் இடையில் அவன் என்னைப் பாதுகாப்பான்; நீ அவனுக்குப் பணிந்து நடப்பதன் மூலம் அவன் எந்தக் குறைபாட்டுக்கும் உன் மீது இடமில்லாது செய்வான். அந்த விதிவசமும் முதிர்ந்த நேரமும் உன்னை விட்டு அகலும் வரை அதிலேயே உன்னை வைத்திருப்பான். இரவு விடிந்து பகலாவது போல பனிக்காலத்தின் குளிர் மறைந்து வசந்தம் வருவதுபோல உன்னை மகிழ்ச்சிகரமான நிலைக்கு இட்டுச் செல்வான். இதில் உனக்கு ஓர் உதாரணமுள்ளது; இதிலிருந்து நீ ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும், மனிதனின் அகத்தில் பல வகைப்பட்ட பாவங்களும் குற்றங்குறைகளும் நிறைந்திருப்பதால் அல்லாஹ்வின் தோழமைக்கு

அவன் லாயக்கற்றவனாய் இருக்கிறான். இப்பாவங்களின் அசுத் தத்தை அவன் முற்றும் கழுவிக்கொண்டாலன்றி அவன் அல்லாஹ்வின் நட்பைப் பெற இயலாது. ஒரு சாதாரண அரசனோடு நெருங்கிப் பழகவே ஒருவன் துர்நாற்றத்தையும், அழுக்கையும், மாசுகளையும் அகற்றியவனாக வரவேண்டியதிருக்கும்போது, தான் எனும் அகந்தையிலிருந்து தன்னைப் பரிசுத்தம் செய்பவன் மட்டுமே அல்லாஹ்வின் சந்நிதானத்தை முத்தமிட முடிவதில் வியப்பில்லை அல்லவா! இவ்விதம் கஷ்டங்கள் உன்னைப் பரிசுத்தம் ஆக்கு பவையாகவும், பாவ நிவர்த்தியடையச் செய்பவையாகவும் இருக்கின் றன. நபி பெருமானார்(ஸல்) அவர்கள் சொன்னார்கள்: "ஒருவருஷம் செய்த பாவத்துக்கு ஒரு நாள் ஜுரம் பாவ நிவர்த்தி அருளுவதாய் இருக்கிறது" என்று

உபதேசம் பத்தொன்பது

நீ நம்பிக்கைத் திடம் குறைந்தவனாய் இருக்கும்போது உனக்கு அளிக்கப்படும் வாக்குறுதி நிறைவேற்றப்படுகிறது; உன் நம்பிக்கை தகராமலும், உன் உறுதி குலையாமலும் இருப்பதற்காக இவ்விதம் நிறைவேற்றப்படுகிறது. ஆனால் இந்த நம்பிக்கையும் உறுதியும் பலப்பட்டு, உன் இதயத்தில் வேரூன்றியதும் அவன் வார்த்தைகளால், "நிச்சயமாக, இன்று நம் சந்நிதானத்தில் நீர் கண்ணியமும், நம்பிக்கை விஸ்வாசமும் பெற்றுவிட்டீர்" (12 : 54) என்று விளிக்கப்படுவாய்.

இவ்விதம் பன்முறை நீ விளிக்கப்படுவாய்; அதன் பின் நீ தேர்ந் தெடுக்கப்பட்டவர்களுள்ளும் தேர்ந்தெடுக்கப்பட்டவனாய் ஆவாய். உன் சித்தம் என்று ஒன்றும், உன் நோக்கம் என்று ஒன்றும், நீ விரும்பும் உன் செயல் என்று ஒன்றும் இல்லாமலும், நீ காணும் சமீபத்துவம் என்று ஒன்றும், நீ கேட்கும் ஸ்தானம் என்று ஒன்றும் இல்லாமலும் உள்ள நிலையை அடைந்து விடுவாய்.

பின்னர் எத்திரவமும் தங்காத ஓர் ஒட்டைப் பாண்டம் போல் ஆகிவிடுகிறாய்; அதனால் எந்நோக்கமும், பழக்கமும் இம்மை அல்லது மறுமை பற்றிய எந்த முடிவும் உன்னில் தங்காதபடியும், அல்லாஹு ஸுப்ஹானஹு அல்லாத சகலவற்றில் இருந்தும் பரிசுத்தமானவனாகவும்,

அல்லாஹ்வைக் கொண்டு திருப்தியுற்றவனாகவும், அல்லாஹ்வின் திருவுளப் பொருத்தம் வாக்களிக்கப்பட்டவனாகவும், அல்லாஹ்வின் சகல செயல்களாலும் பாக்கியமும் இன்பமும் அடைபவனாகவும் நீ இருப்பாய்.

அப்போது உனக்கு ஒரு வாக்களிக்கப்படும்; நீ அதனால் திருப்தி அடைகையில், சித்தத்தின் எந்த அடையாளமாவது உன்னிடம் காணப்படாவிட்டால், அதைவிட உயரிய மற்றொரு வாக்குறுதி உனக்குத் தரப்படும். அது அதிகக் கண்ணியமானதாகவும், மனத்திருப்தி அளிப்பதாகவும் இருக்கும்; ஞானத்தின் கதவுகள் உன் முன் திறக்கப்படும்; தெய்வீக விவகாரங்களிலும், ஞானத்தின் உண்மையிலும், முந்திய வாக்குறுதியைப் பின்வந்த வாக்குறுதியாக மாற்றியதன் ஆழ்ந்த நோக்கத்திலும் நீ தெளிவு பெறுவாய். உன் புதிய அந்தஸ்த்தில் உன் 'ஹால்' எனும் ஆத்ம நிலையைப் பாதுகாத்தல் அதிகரிப்பதையும் உணர்வாய்.

மேலும், மர்மங்களைப் பேணும் பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஆத்மீக அந்தஸ்தை அடையப் பெறுவாய்; உன் இதயம் விரிவுபடுவதையும், உன் உள்ளம் அதிக வெளிச்சம் பெறுவதையும், உன் நாவன்மை அதிகரிப்பதையும், 'அதிகமான ஞானமும் அன்பும் உன்னில் நிலை நிறுத்தப்படுவதையும் உணர்வாய். இதன் மூலம் ஜனங்கள் உன்னை நேசிப்பார்கள்; ஜின்னுகளும் மனிதர்களும், இம்மை மறுமையிலுள்ள சகலரும் உன்னிடம் அன்பு பாராட்டுவார்கள். நீ அல்லாஹ்வின் அன்பனானதும், அல்லாஹ்வுக்கு உட்பட்ட மக்கள் யாவரும் அவன் உன்னிடம் கொள்ளும் அன்பைத் தாங்களும் உன்னிடம் காட்டுவார்கள்; அவன் காட்டும் வெறுப்பையும் அவர்களும் காட்டுவார்கள்.

எந்த விஷயத்திலும் ஆசையற்ற இந்த அந்தஸ்தை நீ அடையும் படி செய்யப்படுவாய். அதன் பின் நீ எதையாவது விரும்பும்படி செய்யப்பட்டு, அந்த ஆசையை விட்டும் அப்பாலாக்கப்படுவாய்; அதை விட்டும் தூரமாக்கப்படுவாய்; மறுமையில் அதைவிட மேலானதும் அல்லாஹ்வுக்கு மிகவும் அருகிலாக்குவதுமான ஒன்று அதற்குப் பகரமாகத் தரப்படும். அது சொர்க்கத்தில் உன் கண்களைக் குளிரச் செய்வதாய் இருக்கும்:

இந்த நிலையற்ற துன்பம் நிறைந்த உலகில் நீ அதைக் கேட்கவோ, இச்சிக்கவோ, நாடவோ செய்யாது படைத்து வெளிப்படுத்தும், தரும், தராது நிறுத்தும், இப்பூமியின்மீது அருட்கொடைகளைப் பரப்பிய, வானை உயரமாக ஆக்கிய ரட்சகளின் பக்கமே கவனம் செலுத்தியவனாய் இருப்பின், அதற்கு இணையான ஒன்று உனக்கு அளிக்கப்படும். அல்லது அதைவிடக் கீழான ஒன்று உனக்கு அளிக்கப்படும். முதலில் நீ அதை விட்டு அப்பாலாக்கப்பட்டு, அதற்குப் பகரமானது மறுமையில் ஸ்திரமாக்கப்பட்டபின், நான் முன்னர் விவரித்த நிலைமையில் இது தரப்படலாம்.

உபதேசம் இருபது

"ஆகுமானது, விலக்கப்பட்டது பற்றி உன் மனத்தில் எது ஐயமெழுப்பினாலும் சரி, அதை ஒதுக்கி விடு, உன் அகத்தே சந்தேகம் உண்டாக்காததைக் கைக்கொள்" என்று நபி பெருமானார்(ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

சந்தேகாஸ்பதமான விஷயம் ஒன்று சந்தேகத்துக்கே இடமில்லாத ஒன்றுடன் கலந்திருந்தால், கொஞ்சங்கூடச் சந்தேகத்துக்கு இடமில்லாத பாதையைப் பின்பற்று! ஐயம் உண்டாக்குவதை ஒதுக்கித் தள்ளி, தயக்கத்தோடு கூடிய சந்தேகாஸ்பதமான நிலைமையில், 'பாவம் இதயத்தில் பாவ முண்டாக்கும்' என்ற பெருமானார் திரு மொழிக்கு ஏற்ப கலக்கம் ஏற்படின் அந்தராத்மாவின் உத்தரவுக்காகக் காத்திரு. அதைக் கொள்ளும்படி உத்தரவு வந்தால் அதன்படி நட; நீ அதை விட்டு விலகும்படி உத்தரவு வந்தால், அவ்விதஞ் செய்; அவ்விஷயம் என்றுமே இல்லாத ஒன்றாக உனக்கு ஆகிவிடட்டும். அல்லாஹ்வின் வாயிலின் பக்கல் திரும்பி உனக்கான தேவையைக் கேள்!

உன் பொறுமையும் இணக்கமும் மனம் விட்டுச் சரணடைந்ததும் நாஸ்தியான நிலையும் எல்லை கடந்துவிடின், அல்லாஹுஸுப்ஹானஹுவத் தஆலா நினைவு படுத்தப்பட வேண்டிய தேவையற்றவன் என்பதை நினைவுகூர். உன்னையும் மற்றோரையும் அவன் மறந்து விடுவதில்லை. அந்த மகாவலுப்பமான கருணையாளன் நிராகரிப்பவர்களையும் நயவஞ்சகர்களையும், தனக்கு அடிபணி

வதிலிருந்து அப்பாலாகிக் கொண்டவர்களையும்கூட ஆதரித்து உணவு அளிக்கிறான். அப்படியிருக்க, அவனுடைய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை வைத்து, விடாப்பிடியாக அவனுக்குக் கீழ்ப்படிந்து அல்லும் பகலும் அவன் கட்டளைகளை நிறைவேற்றிவரும் உன்னை அவன் மறப்பதெப்படி?

"உன் மனத்தில் ஐயமுண்டாக்கும் விஷயங்களை ஒதுக்கி, ஐயமுண்டாக்காததைக் கைக்கொள்" என்ற நபி மொழியின் இன்னோர் அர்த்தம், ஜனங்கள் கையில் உள்ளதை நீ விட்டொதுக்கி, அதைக் தேடாமல், அதில் மனங் கொள்ளாமல், ஜனங்களிடமிருந்து எதையும் எதிர்பார்க்கவோ அவர்களுக்கு அஞ்சவோ செய்யாது, அல்லாஹ்வின்பாலிருந்து வருவதை ஏற்பது தான் உன் மனத்தில் ஐயமுண்டாக்காததை ஏற்பதாகும்.

எனவே, நீ கேட்பது ஒரே ஒருவனிடமாகவே, உனக்குத் தருபவன் ஒருவனாகவே, உன் லட்சியம் ஒருவனாகவே இருக்கட்டும். அவன் சர்வ சக்தனான அல்லாஹுத் தஆலாவாக இருக்கும். அவன் கையிலேயே மன்னர்களின் நெற்றிகளும், ஜனங்களின் உடல்களுக்கு அரசர்களான இதயங்களும், ஜனங்களின் உடல்களும், பணமும் யாவும் உரியவையாய்க் கிடக்கின்றன. ஜனங்களோ அவன் பிரதிநிதிகளாகவும், அமானிதக்காரர்களாகவும் இருக்கின்றனர். அவர்கள் உனக்கு ஏதாவது தருகையில் அவர்கள் கரம் அசைவதே அவன் அனுமதியும் உத்தரவும், அவன் அசைவும் கொண்டுதான் உனக்கு ஏதாவது நன்கொடைகிட்டாது போவதிலும் இதே விதம்தான் நடக்கிறது.

"அல்லாஹ்விடமிருந்து அவன் அருட்கொடையைக் கேளுங்கள்" என்று அல்லாஹுத்தஆலா சொல்கிறான். "நிச்சயமாக அல்லாஹ்வையன்றி நீங்கள் பணிவிடை செய்யும் பிறர் உங்களுக்கு உணவு தரப்படுவதில் கட்டுப்பாட்டுச் சக்தியற்றவர்களாவர். எனவே, அல்லாஹ்விடமிருந்து உணவுதேடுங்கள்; அவனுக்குப் பணிவிடை செய்யுங்கள்; அவனிடம் நன்றியுடையவர்களாய் இருங்கள்" என்றும் அவன் கூறியுள்ளான். "என் அடியார்கள் என்னைப்பற்றி உம்மிடம் கேட்பார்களேயாயின், நான் (அவர்களுக்கு) மிக அருகில் உள்ளேன் (என்று சொல்லும்). தொழுகையாளி என்னிடம் தொழுது

பிரார்த்திக்கும்போது, அத்தொழுகையையும் பிரார்த்தனையையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்" என்றும், "என்னை அழையுங்கள்; நான் உங்களுக்குப் பதிலிறுப்பேன்" என்றும், "சர்வ சக்திக்கும் அதிகாரத்துக்கும் உரிய அல்லாஹ்வே நிச்சயமாக உணவு தருப வனாய் இருக்கிறான்" என்றும், "தான் விரும்புவோருக்கு அளவிலா உணவை அல்லாஹ் அருளுகிறான்" என்றும் அல்லாஹ் அருளியுள்ளான்.

உபதேசம் இருபத்து ஒன்று

இது ஹிஜ்ரி 504 துல்ஹஜ்ஜு மாதம் பன்னிரெண்டு ஞாயிற்றுக் கிழமை இரவில் நடந்தது; இறைவனின் முனிவைப் பெற்ற இப்லீஸை நான் கனவில் கண்டேன். நான் பெரிய கும்பல் ஒன்றில் நின்று கொண்டிருந்தேன். நான் அவனைக் கொன்றுவிட நினைத்தேன். அப்போது இப்லீஸ் என்னை பார்த்துச் சொன்னான்: நீர் என்னைக் கொல்ல நினைக்கிறீர்? நான் செய்த பாவம்தான் என்ன? அல்லாஹ் வின் திருச்சித்தம் தீமையைச் சுழலவிட்டால் அதை மாற்றவோ தீமையானதாக்கவோ என்னால் இயலாது. என் கையில் என்ன இருக்கிறது" என்று. இவ்விதம் பேசிய இப்லீஸ் காயடிக்கப்பட்ட ஓர் அலி போலும், மென்மையான பேச்சு உள்ளவனாகவும் தாடையில் குச்சி குச்சியாக மயிர் உள்ளவனாகவும் நின்று விகாரமான பார்வையும் தரித்திரம் நிறைந்த தோற்றமும் உடையவனாகவும் நின்று கொண்டிருந்தான். அவன் பீதியோடும் அவமானத்தோடும் என்னை சற்றே நிமிர்ந்து பார்த்துப் புன்னகை செய்வது போல் தோன்றிற்று.

உபதேசம் இருபத்து இரண்டு

மெய்விஸ்வாசியான தன் அடியானின் மெய்யுறுதியின் அளவுக்கு ஏற்ப அவனை அதிகமாகவே சோதிப்பது அல்லாஹ்வின் வழக்கம். எனவே, ஒருவன் மிகவும் அதிகமான மெய்யுறுதி கொண்டிருப்பின், அவன் சோதனைக்குள்ளாவதும் அதிகம். இவ்விதம் ஒரு ரஸூல் சோதனை செய்யப்படுவது. ஒரு நபி சோதனை செய்யப்படுவதைவிட அதிகமாய் இருக்கிறது; ஒரு நபி உள்ளாகும் சோதனைகளோ ஓர் அப்தால் உட்படும் சோதனைகளைவிட அதிகமானது. ஓர் அப்தால் சோதனைக்கு உள்ளாவதோ ஓர் ஒலி உட்படும் சோதனைகளை விட அதிகமானதாகும்.

ஒவ்வொருவரும் அவரவர் மெய்விஸ்வாசத்துக்கும் நிச்சயத்துவத்துக்கும் ஏற்ற அளவு சோதனை செய்யப்படுகின்றனர். இதற்கு, "நிச்சயமாக ஜனங்கள் யாவரிலும் ரஸூல்மார்களாகிய நாங்களே அதிகமாகச் சோதிக்கப்படுகிறோம்" என்று நம் பெருமான்(ஸல்) அவர்கள் திருமொழி ஆதாரமாக உள்ளது.

எனவே, இம்மாபெரும் மகான்களின் தன்மைக்கேற்ப, அவர் களை அல்லாஹ் சோதனைக்கு ஆளாக்குவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் மூலம் அவர்கள் சதா அவன் சந்நிதானத்திலேயே இருக்குமாறும், தமது விழிப்பில் கொஞ்சமும் பின் தங்கி விடாமல் காக்குமாறும் செய்கிறான். உன்னதமான அவன் அவர்களிடம் அன்பு காட்டுகிறான். அவர்கள் அல்லாஹ்வின் அன்புக்கு உரியவர்கள். அன்பன் தன் அன்புக்குரியாரை விட்டு விலகி இருக்க எப்போதும் விரும்புவதே இல்லை. இவ்விதமாகச் சோதனைகள் அவர்கள் இதயங்களை நிலை நிறுத்துபவை; அவர்கள் வாழ்க்கையில் லட்சியமற்ற எதிலும் மனங்கொள்ளாது தடுப்பவை, தன் சிருஷ்டியாளனையன்றிப் போகத்திலோ வேறு எதன் பக்கமோ மனம் லயித்துவிடாதபடி செய்பவை. இதுவே நித்தியமான நிலையாகிவிடுவதால், அவர்கள் இச்சைகள் உருகிப்போகின்றன. அவர்கள் 'தான்' தன்மை உடைகிறது. அவர்கள் சத்தியம், அசத்தியத்திலிருந்து தெளிவானதாகிறது. அப்போது அவர்கள் திட்டங்களும், நோக்கங்களும், சித்தமும், இம்மை மறுமைக்குரிய சகல போக போக்கியங்களில் மனம் திரும்பலும் வாபஸாகி இதயத்தின் ஒரு மூலையில் அடங்கிக் கிடக்கின்றன' அல்லாஹ்வின் வாக்குறுதியில் அவர்கள் இதயங்களுக்கு ஆறுதல் கிடைக்கிறது. அவன் கட்டளையில் அவர்களுக்கு இன்பமும், அவன் அருட்கொடையில் திருப்தியும், அவன் சோதனையில் பொறுமையும் உண்டாகின்றன. சிருஷ்டியின் தீமையிலிருந்து அவர்கள் பாதுகாப்புப் பெற்றவர்களாகின்றனர்.

இவ்விதம் இதயத்தில் சக்தி பலப்படுத்தப்பட்டு அஃது உடலின் சகல அங்கங்களின்மீதும் ஆதிக்கம் பெறுகிறது. சோதனைகளும் துயரங்களும் இதயத்தையும் நிச்சயத் தன்மையையும் பலப்படுத்தி, மெய் விஸ்வாசத்தையும் பொறுமையையும் ஸ்தாபிதமாக்கித் 'தான்' எனும்

மிருகத் தன்மையையும் அதன் இச்சைகளையும் பலஹீன மாக்குகிறது. துயரம் நேர்கையில் மெய்விஸ்வாசி பொறுமையைக் கடைப்பிடித்து, அல்லாஹ்வின் செயலுக்குத் தன்னை அர்ப்பணித்த தவனாகி, அவனுக்கு நன்றி தெரிவிப்பவனாய் இருக்கும் நிலையைக் காணும் அல்லாஹ்வும் அவனிடம் திருப்தி கொண்டவனாகி, அவனுக்கு உதவியும், வளமும், பலமும் கிடைக்கச் செய்கிறான். அல்லாஹுஸுப்ஹான ஹுவத் தஆலா சொல்கிறான்: "நீங்கள் நன்றி விஸ்வாசமுள்ளவர்களாக இருப்பின், நிச்சயமாக நான் அதிகம் (நன்கொடைகள்) தருவேன்" என்று.

மனிதனிடமுள்ள கீழான மனம் இச்சைக்கும் போகத்துக்கும் உரிய எந்த ஒரு பொருளையும் தேடும்படி இதயத்தைத் தூண்டி, இதயமும் அதற்கு இணங்கி அல்லாஹ்வின் கட்டளையோ அனுமதியோ இன்றி அதில் ஈடுபடுமாயின், அதன் பயனாய் அல்லாஹ்வை மறப்பதும், இணைவைத்தலும், மற்றப் பாவங்களும் வந்து சேருகின்றன. இத்தகைய இதயத்துக்கு அவமானமும், துயரங்களும், ஜனங்களுக்கு அடிமைப்படும் தன்மையும், புண்படுத்தலும், ஆவலும், வேதனையும், நோயும் உண்டாகும்படி அல்லாஹ் செய்து விடுகிறான்.

இத்துயரங்களால் இதயம் பெரிதும் பாதிக்கப்பட்டதாகிறது. கீழான மனத்தில் தூண்டுதலுக்கு இதயம் இடம் தராத நிலையில், ஒளலியாக்கள் விஷயத்தில் (இல்ஹாம் எனும்) உதிப்பு மூலமும், ரஸூல்மார், நபிமார் விஷயத்தில் (வஹீ எனும்) தெய்வ அறிவிப்பு மூலமும் அல்லாஹ்விடமிருந்து அனுமதி வரும்வரை காத்திருந்து, அந்த இல்ஹாம் அல்லது வஹியின்படி வெகுமதியை ஏற்கவோ நிராகரிக்கவோ செய்ததும், அந்த இதயத்துக்கும் மனத்திற்கும் அல்லாஹ் கருணை பாக்கியம், சுகம், ஆறுதல், வெளிச்சம், ஞானம், தனக்கு அருகாகுதல், தேவைகளிலிருந்து விடுபடல், துயரங்களிலிரு ந்து பாதுகாவல் ஆகியவற்றை அருளி வந்திருக்கிறான். எனவே, இவற்றையெல்லாம் உணர்ந்து நினைவில் இருந்த கீழான மனத்தின் அழைப்புக்கும் அதன் தூண்டுதலுக்கும் அவசரப்பட்டு இணங்காதபடி மிகவும் முன் ஜாக்கிரதையாக இருந்து, சோதனைகளிலிருந்து உன்னைப் பாதுகாத்துக்கொள். அத்தகைய நிலைமையில் அந்த எஜமானனின் அனுமதிக்காகப் பொறுமையுடன்

காத்திரு. அதன் மூலமே இம்மையிலும் மறுமையிலும் நீ பாதுகாப்புப் பெற்றவனாய் இருக்க முடியும்.

உபதேசம் இருபத்து மூன்று

நீ ஓர் அரசனின் மாளிகையிலுள்ளாய், அவனுடைய அதிகாரம் வரம்பில்லாதது; அவன் சக்தி மகத்தானது; அவன் சைனியம் மகா பெரியது; அவன் சித்தம் முழுக்க முழுக்க அமல்பட்டுக் கொண்டி ருப்பது; அவன் கட்டளை தட்ட இயலாதது; அவன் ராஜ்ஜியம் என்றும் இருப்பது; அவன் ஆட்சி நிரந்தரமானது; அவன் ஞானம் சகலமும் அறிந்தது; அவன் அறிவு ஆழமானது; அவன் தீர்ப்பு முற்றும் நியாயமானது; இவ்வுலகிலோ, வானிலோ எங்குமோ ஓர் அணுவைக்கூட அவனிடமிருந்து மறைக்க முடியாது, அநியாயக்காரனின் எந்த அநீதியையும் அவனிடமிருந்து ஒளிக்க முடியாது. (இத்தகைய மன்னனின் மாளிகையில் நீ இருக்கிறாய்) நீயோ உன் மிருக இச்சைகளுக்கு இடம் கொடுத்து உன் கீழான மனதின் போக்கிலும் அல்லாஹ்வின் சிருஷ்டியிலும் ஈடுபட்டு, மறைமுகமாகவேனும் அல்லாஹ்வுக்கு இணை வைத்துவிட்டாய்; எனவே – நீ – அநீதியானவனாயும் பெருங்குற்றவாளியாயும் விளங்குகிறாய். அல்லாஹ் சொல்லியுள்ளான்; "இணை வைப்பவர்களை அல்லாஹ் மன்னிக்க மாட்டான்; அதுவன்றி வேறு எதற்கும் யாரையும் அவன் விரும்பினால் மன்னிப்பான்" (4 : 47) என்று.

உன் சக்திக்கு இயன்றவரை அல்லாஹ்வோடு எதையும் இணைவைப்பதிலிருந்தும் விலகிக்கொள். அந்தப் பாவத்தருகேயே நெருங்காதே! உன் நடவடிக்கை யாவற்றிலும், ஆஸ்வாச நிலையிலும், இரவிலும் பகலிலும், தனிமையிலும், பலமுடனிருக்கையிலும் இணை வைத்தல் உன்னை அணுகாதபடி காத்துக்கொள். உன் உடலின் சகல அங்கங்களிலும் உன் இதயத்திலும் பாவம் ஏற இடங்கொடாது எச்சரிக்கையுடன் இருந்துகொள். வெளிரங்கமான, மறைவான பாவம் எதுவுமே உன்னை நெருங்காதபடி பாதுகாத்துக்கொள். அல்லாஹ்வை விட்டும் ஓடாதே! அவன் உன்னை எட்டிப் பிடித்துவிடுவான். அவன் உத்தரவுகளில் அவனோடு வாதிக்காதே! அப்படி வாதித்தால் அவன் உன்னை நசுக்கிவிடுவான். அவன் உத்தரவுகளுக்காக அவன் மீது குறை

கூறாதே! அப்படிக் கூறினால் அவன் உன்னை இழிவுபடுத்தி விடுவான். அவனை மறந்தவனாய் இராதே! அப்படி மறந்திருந்தால் அவன் உன்னை மறப்பான்; உன்னைத் தொல்லைகளுக்கு உள்ளாக்குவான். அவன் வீட்டில் 'பித்அத்' ஆனவற்றை உண்டுபண்ணாதே! அப்படிச் செய்தால் அவன் உன்னை அழித்துவிடுவான். உன் கீழான இச்சைகளால் தூண்டப்பட்டு அவன் சன்மார்க்கம் பற்றி இழிவாக எதுவும் சொல்லிவிடாதே! அப்படிச் சொன்னால், நீ நசிந்து போகும்படி செய்துவிடுவான்; உன் இதயம் இருளடையும்படி ஆக்கிவிடுவான்; உன்னிடமிருந்து உன் மெய்விஸ்வாசத் தையும், ஆத்ம ஞானத்தையும் பறித்துவிடுவான்; உன் கீழான மனம், மிருக இச்சைகள், ஆசாபாசங்கள், உன் குடும்பத்தார் அயலகத்தார் உன் நண்பர்கள், உன் வீட்டில் உள்ள பாம்பு, தேள், ஜின்னுகள், மற்றும் விஷப் பிராணிகள் ஆகிய யாவையும் உன்மீது ஆதிக்கம் கொள்ளச் செய்துவிடுவான். இம்மையில் உன் வாழ்க்கையை இருளடையச் செய்து மறுமையிலும் உனக்குத் தரப்பட்ட தண்டனையை நீடிக்கச் செய்துவிடுவான்.

உபதேசம் இருபத்து நான்கு

பரிசுத்தனான அல்லாஹ்வுக்கு அடிபணியாமல் இருப்பதி லிருந்து அப்பாலாவதில் உன் முயற்சி முழுமையையும் செலவிடு. சத்தியத்துடன் அவன் வாயிலைப் பற்றிப்பிடி. அவனுக்கு அடிபணி வதில் உன் திறமை முழுவதையும், சக்தி முழுவதையும் ஈடுபடுத்து; மிகுந்த பணிவுடனும், தாழ்மையுடனும், மௌனமாயும், தலை தாழ்த்தியும் வேண்டுதல் விடுத்து, பாவ மீட்சி தேடி அவனுக்கு அடிபணி; உன் மிருக இச்சைக்கு இடமளியாது இம்மை மறுமைக்கான சன்மானம் எதையும் கேளாது, உயர்ந்த அந்தஸ்து எதையும் கேட்காது அவனுக்கு அடிபணி. நீ அவன் அடியான்; அடியானும் அவனுடைய சகலமும் எஜமானனுக்கே உரியவை. அவனுக்கு எதிராக எந்த அடியானும் எதையும் விரும்பமுடியாது என்பதை நிச்சயமாக உணர்; நல்லொழுக்கம் பயின்று உன் எஜமானனைக் குறை சொல்லாமல் இருந்துவா! அவன் சகலவற்றையும் ஒரு நிர்ணயத்தில் வைத்துள் ளான். அவன் முன்னால் வைப்பதை யாரும் பின்னால் தள்ள ஒண் ணாது; அவன் பின்னால் வைத்திருப்பதை யாரும் முன்னால்

தள்ளவும் முடியாது. உன் விவகாரங்களில் அல்லாஹ் இவ்விதமே நடந்து கொள்கிறான். மறுமையில் உனக்குச் சாஸ்வதமான இருக்கையை அவன் தந்துள்ளான்; உன்னை அவன் எஜமானனாக்கியுள்ளான்: மறுமையில் அவன் உனக்குத் தரப்போகிற நன்கொடைகளோ, எந்தக் கண்ணும் காணாததும், எந்தச் செவியும் கேளாததும், எந்த இதயமும் உணராததுமான தன்மை உடையவை ஆகும். அல்லாஹ் சொல்கிறான்: 'கண்களைக் குளிர வைப்பவற்றில் அவர்கள் செய்வதற்குச் சம்மானமாக வைக்கப்பட்டுள்ளதை எந்த ஆத்மாவும் அறிந்து கொள்ள முடியாது." (32 : 17) அதாவது, இம்மையில் கட்டளைகளை நிறைவேற்றுவதில் முற்ற முயன்று, விலக்கல்களை ஒதுக்குவதில் அபாரமான சகிப்புத் தன்மை காட்டி, அவனால் கட்டளை இடப்பட்டுள் ளவைகளில் தம்மை முற்றும் அவனிடமே ஒப்படைத்து, அவன் செயல்கள்யாவிலும் மனப்பொருத்தம் காட்டுவோர்க்கு இத்தகைய நன்கொடைகள் காத்திருக்கின்றன.

ஆனால் உலகச் செல்வங்கள் அளிக்கப்பட்டு, அவற்றுக்கு எஜமானன் ஆக்கப்பட்டு, அவனால், ஆசீர்வதிக்கப்படுவர்கள் நிலையோ, தண்ணீர் தங்காத, மரம் புல்பூண்டு வளராத எதுவுமே முளைக்காத வறண்ட நிலம் போன்றதாகும். இந்நிலத்தில் அல்லாஹ் பலவகை உரங்களை இட்டுப் பயிர்பச்சைகள் செழித்து வளரச் செய்துள்ளான். அதன் மூலம் இம்மையின் சுகபோகங்கள் உண்டாகி உள்ளன. ஆனால், இந்நிலத்தில் மெய்விஸ்வாசம் என்ற மரமும் நற்செயல்கள் என்னும் செடிகளும் வளர வேண்டும். அப்படி வளராவிடின், அப்பூமி காய்ந்து அதிலுள்ள சகலமும் கருகிவிட இருக்கின்றன. அல்லாஹ் ஸுப்ஹான ஹுவத் தஆலா அது நன்கு செழித்து செழித்து நல்ல முறையில் வளர்வதை விரும்புகிறான்.

செல்வனிடம் மெய்விஸ்வாசம் எனும் விருட்சம் இவ்விதம் பலமான வேர் பிடிக்காததாயும், பலஹீனமானதாயும் இருக்கும். தர் வேஷின் மெய்விஸ்வாசத்தைப்போல் அது பலமானதன்று. ஆனால், நான் முன்பே குறிப்பிட்ட பலமான மெய் விஸ்வாசம் உள்ள அடியானுக்கோ தேவையானது வேறு எதுவுமில்லை, அல்லாஹ் நேசிப்பதை அடையவும், அவன் அன்பால் திருப்தியுறவும் அவன் உனக்கும் நமக்கும் சக்தியைத்

தந்தருள்வானாக! இவ்வுலகச் செல்வம் பெற்றிருப்பவனின் வசதிகள் பறிக்கப்படுகையில் அவன் மெய் விஸ்வாசம் வறண்டு அவன் நிராகரிப்பவனாகி, நயவஞ்சகர்கள், நிராகரிப்பவர்கள், இணை வைப்பவர்களின் கூட்டத்தில் சேர்ந்தவனாகி விடுவான். இச்செல்வனுக்கு அல்லாஹ் அளவற்ற பொறுமை யையும் சகிப்புத் தன்மையையும், நிச்சயத்துவத்தையும், ஞானத்தையும் பலவகையான ஆத்மீக ஒளியையும் அளித்து அவன் மெய்விஸ் வாசத்தைப் பலப்படுத்தினால்தான் அந்தச் செல்வன் கடைத்தேறுவான். அப்போது அவன் தன்செல்வம் முழுவதும் மறையினும் அது பற்றிக் கொஞ்சமும் வருந்தமாட்டான்.

உபதேசம் இருபத்து ஐந்து

ஹே, கால் காசும் கையிலில்லாதவனே, உன்னைக் கண்டு இவ்வுலகமும் இதிலுள்ள மக்களும் முகத்தைத் திருப்பிக் கொண்டிருக் கலாம்; உனக்குப் பேரோ புகழோ ஏற்படாதிருக்கலாம்; நீ பசியும் தாகமுமாய் தவிக்கலாம்; உனக்கு உடுக்கத் துணியின்றி நிர்வாணமாய் இருக்கலாம்; உன் ஈரல் கருகி இருக்கலாம்; உலகின் சந்து பொந்து களிலெல்லாம், மஸ்ஜிதுகளில் எல்லாம், பாழடைந்த மண்டபங் களிலெல்லாம் நீ அலைந்து உழன்றிருக்கலாம். ஒவ்வொரு வாசலிலும் இருந்து நீ விரட்டப்பட்டு, எதுவுமற்றவனாகி மனமும் உடைந்து, எல்லா ஆசைகளிலும், இதய இச்சைகளிலும் ஏமாற்றமே கண்டு மனம் விண்டவனாகவும் இருக்கலாம். எனினும், "என்னை அல்லாஹ் ஏழை ஆக்கிவிட்டான். பச்சையாகப் படைத்து, இவ்வுலகையே என்னிடமிருந்து அகற்றிக் கொண்டான். என்னை வீழ்ச்சியடையச் செய்துவிட்டான். என் எதிரி ஆகிவிட்டான், நான் நஷ்டம் அடையும்படி செய்து விட்டான். எனக்கு மனநிம்மதியே தரவில்லை, என்னை இகழ்ந்து விட்டான், இவ்வுலகில் எனக்குப் போதுமானதை அவன் தரவில்லை. என்னை இருண்ட நிலைக்கு ஆளாகச் செய்து விட்டான். மக்களிடை நான் மதிப்பு மிக்கவனாய் இருக்கச் செய்யவில்லை. மற்றவர்க்கோ தன் பாக்கியங்களை அள்ளிக் கொடுத்துள்ளான்; அவர்கள் அல்லும் பகலும் அதில் திளைக்கிறார்கள்; அவர்களை என்னைவிட உயர்ந்தவர்களாக்கி விட்டான்; ஆனால் நாங்கள் யாவருமே முஸ்லீம்கள் தாம்; மெய்விஸ்வாசம் கொண்டவர்கள் தாம்;

ஆதத்தையும் ஹவ்வாவையும் ஆதி பிதாவாகவும் மாதாவாகவும் கொண்டவர்கள் தாம்" என்றெல்லாம் குறைகூறாதே!

உன் இயற்கை அப்பழுக்கற்றதாய் இருப்பதாலேயே அல்லாஹ் இப்படிச் செய்துள்ளான். அல்லாஹ்வின் கருணையின் ஈரம் இடையறாது உனக்குக் கிடைக்க இருக்கிறது. அது சகிப்புத்தன்மையாகவும் மனமுவந்து பணிவதாகவும், நிச்சயத்துவமாகவும் உண்மையை உணர்வதாகவும், ஞானமாகவும் வரும். மெய்விஸ்வாசத்தினதும், ஏகத்துவத்தினதும் ஒளி உன்மீது சொரியப்படவிருக்கிறது. அப்போது உன் மெய் விஸ்வாச விருட்சமும், அதன் வேர்களும், வித்தும் பலமடைபவையாகும். அவ்விருட்சம் உறுதியடையும்; செழித்திருக்கும்; நிறையக்கனிகள் தரும்; நெடுகிலும் கிளைகள் விட்டு வளரும்; நிழல் தந்து, தளிர்விட்டு வளரும். இவ்விதம் தினேதினே அது அதிகரித்து வளரும்; தன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் எந்த உரத்தையும் எதிர்பாராது, நீ விரும்பினாலும், வெறுத்தாலுங்கூட அல்லாஹ் உனக்காக ஒதுக்கியவை உன்னை வந்தடைந்தே தீரும், எனவே, சீக்கிரம் உனக்குக் கிடைக்க விருப்பதைப் பற்றிப் பேராசை கொள்ளாதே! அதுபற்றி ஆவலும் அடையாதே! உனக்கு அன்றி இன் னொருவனுக்காக உள்ளவற்றுக்காக வருத்தப்படாதே!

உன் வசமில்லாதது இவ்விரண்டில் ஒரு வகை ஆனதாய் இருக்கலாம். அதாவது: (1) உனக்குக் கிடைப்பதற்குரியதாய் இருக்கலாம். அல்லது (2) இன்னொருவனுக்குக் கிடைப்பதாய் இருக்கலாம். உனக்குக் கிடைப்பதற்கு அஃது இருப்பின், நீ அதன் பக்கல் ஈர்க் கப்படுவாய்; அஃது உன் பக்கல் வரும்; அதுவும் நீயும் விரைவிலேயே சந்திக்க நேரும். உனக்குரிய தல்லாததிடமிருந்து நீ அப்பாலாக் கப்படுவாய்; அதுவும் உன்னிடமிருந்து அப்பாலாகும், எனவே, உனக்கும் அதற்கும் இடையில் சந்திப்பே நிகழாது, எனவே, உன் ரட்சகனுக்குக் கீழ்ப்படிவதில் உன் முன்னுள்ள நேரத்தை மிகவும் நல்லமுறையில் பயன்படுத்தி வா! உன் தலையை நிமிர்த்தாதே! அவனையன்றி மற்றவைகளின் விஷயத்தில் கவனம் கொள்ளாதே! அல்லாஹ் சொல்கிறான்: "(ஜனங்களில்) பல வகுப்பினருக்கும் நாம் அளித்துள்ளவற்றின் பக்கம், இவ்வுலக

வாழ்க்கையின் பகட்டின் பக்கம், உமது பார்வையை நீளவிட வேண்டாம். (அவை) அவற்றின் மூலம் அவர்களைச் சோதிக்க ஏற்பட்டவையே. உமது ரட்சகனால் (உமக்கு) அளிக்கப்பட்டுள்ள உணவு சிறந்தது; நிரந்தரமானதுமாகும்." (20 : 131)

இதனால் உன்னை வைத்துள்ளதிலன்றி, உனக்குரிய கீழ்ப்படிதலின் பங்கையன்றி, வேறு எதிலும் உன் கவனத்தைத் திருப்புவதிலிருந்தும் அல்லாஹ் உன்னை நிச்சயமாகத் தடுத்துள்ளான். அவன் ஒதுக்கியுள்ளதிலிருந்தும், ஏற்படுத்தியுள்ளதிலிருந்தும், உனக்கு உரியதை அவன் தந்திருக்கிறான். அதையன்றி, மற்றயாவும் ஒரு சோதனையே என்றும், அவற்றைக் கொண்டு அவர்களை (மற்றோரை)ச் சோதிப்ப தாகவும் அவன் அறிவிக்கிறான். உனக்கு அளிக்கப்பட்ட உன் பங்கை மனப்பூர்வமாக நீ ஏற்றுக் கொள்வது நல்லது, அதிகமும் சுத்தமானது, விரும்பத்தக்கது என்று அவன் எச்சரித்துள்ளான். எனவே இதுவே உன் மார்க்கமாகவும், புகலிடமாகவும், உன் தாமதிப்பாகவும், உன்புற, அகத்தன்மைகளாகவும், லட்சியமாகவும் உன் ஆசையாகவும், ஆவலாகவும் இருக்கட்டும். இதன்மூலம் சகல பொருள்களையும் எய்தலாம்; சகல ஸ்தானங்களையும், சகல நன்மைகளையும், பாக்கியங்களையும் மகிழ்வையும், நல்லவை அனைத்தையும் அடையலாம். அல்லாஹ் சொல்கிறான் : "தாங்கள் செய்ததற்குரிய வெகுமதியாக, கண்களுக்கு விருந்தாக உள்ளவை களிலிருந்து தங்களுக்கு எவை ஒதுக்கி வைக்கப்பட்டு உள்ளன என்பதை எந்த ஆத்மாவும் அறிந்து கொள்ளமாட்டா." (32 : 17)

எனவே, ஐந்து கடமைகளையும் செய்வதற்கும் பாவங்கள் செய்யாது ஒதுங்குவதற்கும் அதிகம் எதுவும் தேவையில்லை. நாம் இதுவரை பிரஸ்தாபித்தவைகளைப் போல் மகத்தானவையும், அதிகக் கண்ணியமானவையும் அல்லாஹ்வுக்கு மிகவும் பிரியமானவையும் வேறு எவையுமில்லை. அல்லாஹ் விரும்பியதை, அவனுக்கு இஷ்டமானதை அவன் தயவால் உனக்கும் நமக்கும் தந்தருள்வானாக!

உபதேசம் இருபத்து ஆறு

முதலில் நீ சிருஷ்டிகளை விட்டு வெளியாக வேண்டும்; வாழ்க்கையின் சகலவித நிலைகளிலும் உன் இதயம் அவற்றின் பக்கல்

திரும்பாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும்; அதன் மூலம் உன் ஆசைகள் மறைய வேண்டும்; அதன்பின் உன் நோக்கமும் அதன்பின் உன் தாபமும் மறையவேண்டும்; அப்போது நீயே இம்மை மறுமையினுடைய ஜீவிதத்திலிருந்து மறைந்து விடுவாய்; நீ ஒட்டைப் பாண்டமாகி, உன் ரட்சகனின் நோக்கமன்றி வேறு எந்நோக்கமும் தங்காததாக ஆகிவிடுவாய்; உன் ரட்சகனின் ஒளி உன்னை நிறைக்கும். உன் ரட்சகனுக்கன்றி வேறு எதற்கும் உன் இதயத்தில் இடமிருக்காது. நீ உன் இதயத்தின் வாயில்காப்போன் ஆகிவிடுவாய். அப்போது உன் கையில் ஏகத்துவம் எனும் வாளும், மகத்துவமும் சக்தியும் உண்டாகியிருக்கும். இந்த நிலையை நீ எய்தினாலன்றி உன் கீழான மனத்தின் மீதுள்ள திரையும், மறைப்பும் அப்பால் அகற்றப்படமாட்டா. அதன்பின் உன் உள்ளத்தின் சூழ்நிலையில் இருந்து உன் இதயத்தை நோக்கி எது வரினும், வாயில் காப்போனான நீ உன் வாளால் அதன் தலையை உடலிலிருந்து துண்டித்து எறிய முடியும், அதன் மூலம் உன்கீழான மனதுக்கும், ஆசைக்கும், நோக்கத்துக்கும் இவ்வுலக மறு உலகப் பேற்றுக்கான தாபத்துக்கும் எதுவும் தலை தூக்காது செய்வாய். ரட்சகனின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதையும், அவனைப் பற்றி நிற்றலையும், அவன் கட்டளையை மனமுவந்து ஏற்றலையும், அவன் சித்தத்தில் சம்பூரணமாக மூழ்குதலையும் தவிர வேறு எந்த வார்த்தைக்கும் செவிசாய்க்கவோ அபிப்பிராயம் கூறவோ இடம் வைக்கமாட்டாய். இவ்விதம் நீ ஜனங்களுடையவும் அவர்கள் அபிப்பிராயங்கள் உடையவும் அடியானாகாது அல்லாஹ்வின் அடியானாகி விடுவாய்.

இஃது உன் வாழ்க்கையிலே நிரந்தரமான அம்சம் ஆன பின் உன் இதயத்தைச் சுற்றிச் சுய மரியாதை எனும் திரைகள் தொங்க விடப்படும்; அதைச் சுற்றிக் கண்ணியமெனும் அகழிகள் வெட்டப்படும்; மகத்துவத்தின் சக்தி அதைக்காத்து நிற்கும்; சத்தியத்தினுடையவும் ஏகத்துவத்தினுடையவும் சைனியங்கள் உன் இதயத்தைப் பாதுகாக்கும்; அதன் அருகேயும் சத்தியக் காவலாளிகள் வைக்கப்படுவர். இதனால் ஷைத்தான் மூலமோ, கீழான மனத்தின் மூலமோ, புலனுணர்வின் மூலமோ, நோக்கத்தின் மூலமோ, வீணாசை மூலமோ, ஆசையால் உண்டாகும் தவறிய வழிகாட்டல் மூலமோ, ஜனங்கள் அதை நெருங்க முடியாது போய்விடும்.

தொடர்படியாக ஜனங்கள் உன்னிடம் வருவார்கள்; உன் பெருமையைப் பற்றி அவர்கள் யாவரும் ஏகோபித்த அபிப்பிராயம் சொல்லுவார்கள்; கண் கூசும் பிரகாசத்தையும் தெளிவான அறிகுறிகளையும் ஆழ்ந்த ஞானத்தையும் பெறவும், வெளிப்படையான அற்புதங்களையும் இயற்கைக்கு அப்பாற்பட்ட சம்பவங்களையும் உன் வாழ்க்கையின் நித்தியப்படியான காரியங்களாகக் காணவும் அவர்கள் விரும்புவார்கள்; இவற்றினால் அவர்கள் அல்லாஹ்வின் அருகிலாகும் தமது முயற்சியை அதிகரிப்பார்கள்; அவனுக்கு அதிகமும் கீழ்ப்படிவார்கள்; இவையாவும் நடக்கும்போதே தம் ரட்சகனின் சேவைக்கான முயற்சியை அதிகரித்துக் கொள்வார்கள். அவர்கள் யாவரிடமிருந்தும் ஆசையின் பக்கல் உன் மனித உணர்வு சாயாதபடியும், உன்னையே நீ பாராட்டிக் கொள்ளாதபடியும், ஜம்ப உணர்வு உண்டாகாதபடியும், ஜனங்கள் கூட்டம் கூட்டமாக உன்னிடம் வந்து, நீ சொல்வதைக் கவனமாகக் கேட்கிறார்களே என்ற கர்வம் உண்டாகாதபடியும் நீ பாதுகாக்கப்படுவாய்.

இது போலவே கொடுத்து வைத்திருப்பின், அழகும் கண்ணியமும் மிக்க மனைவி ஒருத்தியை நீ அடைவாய். அவள் தன் சம்ரட்சனைக்குத் தானே பொறுப்பாளியாய் இருப்பாள். அவளுடைய தீமையிலிருந்தும் நீ பாதுகாக்கப்பட்டவன் ஆவாய், அவளுடையவும், அவள் உற்றார் உறவினருடையவும் சுமையைச் சுமப்பதில் இருந்தும் பாதுகாக்கப்படுவாய். அவள் நீ இல்லாதபோது, உனக்கு அல்லாஹ் தந்த, போதுமான, பாக்கியமான, இனிய, உண்மை உள்ளவளாகவும் தீமையும் ஏமாற்றமும், துவேஷமும், நம்பிக்கைத் துரோகமுமற்ற மனமுடையவளாகவும் விளங்குவாள். இவ்விதமாக அவள் உன் கைக்குள் இருப்பாள். இவ்விதம் அவள் உற்றார் உறவினரும் அவளைச் சம்ரட்சிக்கும் சுமையிலிருந்து உன்னை விடுவித்துவிடுவர். அவளால் உனக்கு உண்டாகும் எந்தத் தொல்லையையும் போக்கிவிடுவர். விதி வசத்தில் இருப்பின், அவள் உனக்காகப் பெறும் எந்தக் குழந்தையும் நேர்மையும், பரிசுத்தமுமான வாரிஸாக இருந்து உன் கண்களை குளிரவைக்கும். அல்லாஹ் சொல்கிறான்: "மேலும், அவர் மனைவியை அவருக்குப் பொருத்தமானவளாக ஆக்கினோம்" (21 : 90) என்று, மேலும் "எங்கள்

இறைவனே, எங்கள் மனைவியரிலும், சந்ததி யினரிலும் எங்கள் கண்களின் குளுமையைத் தந்தருள்; தீமைக்கு எதிராக (தம்மை)ப் பேணிக் கொண்டோர்க்கு வழிகாட்டியாகவும் எம்மைச் செய்தருள்!"(25 : 74) என்றும் "என் இறைவனே, உனக்கு மிகவும் பிடித்தமானவர்களில் அவனை ஒருவனாக ஆக்கியருள்!" (19 : 6) .என்றும் திரு குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது.

இந்தத் திருவசனங்களில் கண்ட பிரார்த்தனைகள் எல்லாம் செயலில் ஆகிவிடும். உன் விஷயத்தில் அவை ஏற்றுக் கொள்ளப்பட்ட வையாகும். நீ அவற்றை அல்லாஹ்விடம் கூறினாலும் கூறாவிடினும் சரி. அவை அவற்றுக்குத் தகுதி உடையவர்களுக்காகவே வைக்கப்பட் டுள்ளன; அந்த நிலைக்குத் தகுதியுடையவர்களான அவர்களுக்கே இப்பாக்கியங்கள் வழங்கப்பட்டு, அந்த நிலையில் அவர்கள் நிலைநாட்டப் பட்டவர்கள் ஆவார்கள். அல்லாஹ்வின் அனுக்கிர ஹமும், சமீபத்துவமும் அவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

இது போன்றே, இவ்வுலகின் ஒரு பொருள் உனக்குக் கிட்டு வதாயின், உனக்கு எந்தத் தீங்கும் செய்யாத முறையில் வந்தடையும், அதில் உனக்குரிய பங்கு அல்லாஹ்வின் செயலாலும் சித்தத்தாலும் பரிசுத்தப்படுத்தப்பட்டு அது உன்னை அடையவேண்டிய ஆக்ஞை யுடன் உன்னிடம் வந்தணையும். எனவே, அது உன்னிடம் வருகையில் அவன் உத்தரவுக்கு அடிபணிந்தவனாக நீ அதைப் பெற்றால் அதுவும் சம்மானமாக உன்னை வந்தடையும். இது, நீ உன் கடமையாகிய தொழுகைகளையும், கடமையாகிய நோன்பையும் நிறைவேற்றுவதற்கு வரும் வெகுமதியைப்போல உன்னை வந்தடையும். உன்பங்குக்குரியது அல்லாததை உன் நண்பர்களிலும் அயலகத்தார்களிலும், ஏழைகளில் தகுதியுடையவர்களிலும், சந்தர்ப்பத்தின் தேவைக்கு ஏற்ப ஜக்காத் பெறுபவர்களிலும் உள்ள தகுதி வாய்ந்தவர்களுக்கு நீ செலவிட்டுவிட வேண்டுமென்று பணிக்கப்படுவாய். உண்மையான நிலை கண்களுக் குக் காட்டப்பட்டு யார் தகுதியுடையவர், யார் தகுதியற்றவர் என்று கண்டு கொள்வாய். அதன்பின் உன் விவகாரங்களில் பரித்தமானவ னாகவும் தெளிவானவனாகவும் ஆகிவிடுவாய்; அவற்றில் தெளிவின்மையோ,

குழப்பமோ, ஐயமோ, விளங்கிக்கொள்ளாமையோ உண்டாகா.

எனவே, பொறுமையைக் கைக்கொள், மனப்பூர்வமாக அடிபணியப் பழகிக்கொள்; இப்போதுள்ள நிலைக்கு மதிப்பளியாரும் அறியாத நிலைமை அடை; அமைதியாய் இரு; மௌனமாய் இரு. எச்சரிக்கை! தப்பித்துக்கொள்வதில் எச்சரிக்கை! சீக்கிரம்! அல்லாஹ்வுக்கு அஞ்சு! மீண்டும் அல்லாஹ்வுக்கு அஞ்சு! உன் பார்வையைக் கீழ் நோக்கிச் செய்! உன் கண்களைத் திருப்பு! நாணத்துடன் நடந்து கொள்! விதிவசம் தனக்குரிய நேரத்தை அடையும்வரை, உன்கையைப் பிடித்து உன்னை முன்னணிக்கு இழுத்துக் கொண்டு வரும்வரை இவ்வித நிலையிலேயே இரு!

அதன்பின், நீ பாரமாகக் கருதியவை யாவும் உன்னைவிட்டு அகற்றப்படும்; அருள்மாரி, கருணை, பரிவு என்ற கடலிலே நீ மூழ்கடிக் கப்படுவாய். மெய்ஞ் ஞானத்தாலும் தெய்வ ரகசியங்களாலும், ஒளியாலும் நீ சூழப்பட்டவனாவாய். அப்போது நீ அருகில் உள்ளவனாகவும், வசனிக்கப்படுபவனாகவும், நன்கொடைகள் பெறுபவனாகவும், தேவைகளற்றவனாகவும், திடமும் உன்னதப் பதவியும் பெற்றவனாகவும், வார்த்தைகளால் விளிக்கப்படுபவனாகவும் ஆகிவிடுவாய்.

"நிச்சயமாக நீர் இன்றிலிருந்து நமது சமூகத்தில் கண்ணியமும், பெரும் மதிப்பும் பெற்றுவிட்டீர் (12 : 54) என்று பிர்அவ்ன் வமிசத்தானும், மிஸ்ர் நாட்டுத் தலைவனும், அரசனுமானவனின் நாவின் மூலம் மேற்கண்டவாறு சத்திய நபியான யூசுபு அவர்களிடம் அவன் பேசிய சமயம் அவர்கள் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பார்! வெளிரங்கத்தில் பேசுவது, இதை வெளியிட்டது அரசனின் நாவுதான். எனினும், உண்மையில் இதைக் கூறியவன் அல்லாஹ்வேயாகும். ஞானத்தின் நாவின் மூலம் அவன் இதை வெளியாக்கினான். யூசுபு நபிக்கு லௌகீக ராஜ்ஜியமான எகிப்தின் ஆட்சியும், ஆத்மீக ராஜ்ஜியமான ஞான, அறிவு ஆதிக்கமும் அல்லாஹ்வின் சமீபத்துவமும். அவன் முன் உயர் பதவியும் தரப்பட்டன. "மேலும் இவ்விதம் யூசுபுக்கு நாம் அந்நாட்டில் அதிகாரத்தைத் தந்தோம். அதனால் அவர் விரும்பிய இடத்தில் அதை அமலாக்க அவரிடம் ஆதிக்கத் திறம் உண்டாயிற்று" என்றும் அல்லாஹ்

கூறியுள்ளான்(12 : 36). ஆத்மீக ராஜ்யம் பற்றி அல்லாஹ் சொல்கிறான்: "தீமையும் மானக் கேடான செயலும் அவரை அணுகாதபடி செய்வதற்காக நாம் எச்சரிக்கை செய்தோம். நிச்சயமாக, அவர் நம் உண்மையுள்ள அடியார்களில் ஒருவராய் இருந்தார்."(12 : 24) என்று. ஞான சாம்ராஜ்ஜியத்தைப் பற்றி அவர்கள் சொல்வதாவது: "இது என் இறைவன் எனக்கு கற்றுத் தந்தது; அல்லாஹ்வின் மீது நம்பிக்கை விஸ்வாசம் கொள்ளாது, மறுமையையும் நம்பாது நிராகரிக்கும் ஒரு கூட்டத்தினரின் மார்க்கத்தை நான் நிச்சயமாக உதறிவிட்டேன்"

ஹே, உண்மையுள்ளவனே, நீயும் இவ்விதம் விளிக்கப்படும் போது, உனக்கும் ஞானத்தின் போதிய பங்கு தரப்படும்; பலமும் நன்மையும்; சக்தியும், ஞானித் தன்மையும், ஆத்மீக, ஆத்மீகமல்லாத சகலவற்றையும், பாதிக்கச் செய்யும் உத்தரவு அருளப்படும். மறுமை வருமுன்பே, அல்லாஹ்வின் அனுமதி கொண்டு பொருள்களை சிருஷ்டிக்கும் சக்தியும் தரப்படும். மறுமையிலோ உயர்ந்த சொர்க்கத்திலும் சாந்தியின் நிலையத்திலும் நீ இருந்து வருவாய். அல்லாஹ்வின் திருச்சந்நிதானத் தரிசனம் இத்துடன் ஓர் அதிகப் படியான அருட்கொடையாகவும் எல்லையும் முடிவுமிலா லட்சியமாகவும் உனக்குத் தரப்படும்.

உபதேசம் இருபத்து ஏழு

நன்மையும் தீமையும் ஒரே மரத்தின் இரு வேறு கிளைகளிலிருந்து கிடைக்கும் இரண்டு கனிகள் தாம். இக் கிளைகளில் ஒன்று இனிய கனி தருகிறது; மற்றது கசந்த கனி தருகிறது. பிந்திய மரத்திலிருந்து பறிக்கப்பட்டும் பழங்கள் அனுப்பப்படும் இடங்களிலிருந்தும். அவற்றை வைத்திருப்போரிடமிருந்தும் விலகி அப்பால் இருப்பதற்காக நீ நாடு நகரங்களையும், நகர்ப்புறங்களையும் விட்டு ஒதுங்குகிறாய். நேரடியாக இம்மரத்தையே சென்றடைந்து விடுகிறாய். அதன் காவலாளியாகவும், அதைக் கவனித்துச்சேவை செய்பவனாகவும் ஆகிவிடுகிறாய். இவ்விரு கிளைகளின் தன்மையையும், இவ்விரு வகைப்பழங்களையும் அவற்றின் சுற்றுப் புறத்தையும் பற்றிய ஞானத்தை நேரடியாக அடைகிறாய். அதன் பின் இனிய கனி தரும் கிளையருகிலாகி அக்கனியையே உன் உணவா

கவும் பலமளிப்பதாகவும் உட்கொள்கிறாய். அடுத்த கிளையின் அருகில் நெருங்காமலும், அதன் கசந்த கனியைத் தின்று மரணம் ஏற்படாமலும் எச்சரிக்கையாய் இருந்து கொள்கிறாய். இவ்வித நிலையில் நீ நீடிக்கவே, உனக்கு வசதியும், சகல தொல்லைகளிலிருந்து பாதுகாப்பும் ஏற்படுகின்றன. (ஏனெனில், அக்கசப்பான கனியால் தான் சகல தொல்லைகளும், துயரங்களும் உண்டாகின் றன.) அப்படியின்றி நீ நாடு நகர்களில் சுற்றிக் கொண்டிருந்தால், இக்கனிகள் அங்கு வருகையில் எது இனிப்பு உள்ளது, எது புளிப்புள்ளது என்று நீ அறிய முடியாதபடி கலந்து போய் விடுகின்றன. ஆகவே, இவை உன் முன் வந்ததும் உன் கையில் ஒன்றை எடுத்து உண்ணத் தொடங்குகிறாய். உன் கையில் கசப்பான கனியே வருகிறது. அதன் ஒரு பகுதியை நீ சுவைத்ததும், அதன் கசப்பு உன் குடலையே புரட்டிவிடுகிறது. உன் தொண்டையும், நாசியும், மூளையும் பாதிக்கப்பட்டு, அதன் வேகம் உன் இரத்தக் குழாய்களிலும் சகல அங்கங்களிலும் பரவி நீ மரணிக்கிறாய். அக்கனியில் நீ தின்றது போக பாக்கியை அப்பால் எறிவதாலும் உன் வாயைக் கழுவிவிடுவதாலும் உன் உடலில் பரவிவிட்ட விஷ வேகம் போகாது. அதனால் பயனேற்படாது.

நீ தித்திப்பான கனியையே உண்கிறாய் என்று வைத்துக் கொண்டாலும், அதன் இனிமை உன் அங்கங்களெல்லாம் பரவி, உனக்கு நன்மையுண்டாகி நீ மகிழ்ச்சியடைகிறாய். அந்நிலையில் நீ அது போன்ற மதுரமான இன்னொரு கனியைப் புசிக்க எண்ணி வேறொரு கனியை எடுத்துக் கடிக்கிறாய். அது கசப்பாய் இருக்காது என்று உனக்கு நிச்சயமாகத் தெரியாது அல்லவா? ஆகையால் மேலே கூறிய நிலைமை அப்போதும் உனக்கும் உண்டாகலாம் தானே.

எனவே அந்த விருட்சத்தை விட்டு அப்பாலாகி அதன் கனியின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்ளாதிருப்பது நல்லதன்று. அதன் அருகிலேயே நின்று கொண்டிருப்பது தான் பாதுகாப்பானதாகும். இது போன்று நன்மையும் தீமையும் அல்லாஹு ஸுப்ஹான ஹுவத் தஆலாவின் செயல்கள் தாம் "அல்லாஹ் உங்களைப் (படைத்தது) போலவே; நீங்கள் செய்பவைகளையும் படைத்துள்ளான்" (37 : 96)' "அறுக்கும் மனிதனையும்

அறுக்கப்படும் பிராணியையும் அல்லாஹ்வே சிருஷ்டித்துள்ளான்" என்று நம் பெருமான் (ஸல்) அவர்களும் சொல்லியுள்ளார்கள். அல்லாஹ்வின் அடியானின் நடைமுறையாவது அவன் சிருஷ்டியாய் இருப்பதுடன், தன் உழைப்பின் பயனை அடைவதுமாம். அல்லாஹுத் தஆலா சொல்கிறான்: நீங்கள் செய்து கொண்டிருந்த (நற்செயல்களான) வைகளின் பொருட்டுச் சொர்க்கத் தோட்டத்தில் நுழையுங்கள்" (16 : 32) என்று.

எத்தனை பெரிய தயாளம்! எத்தனை பெரிய கருணை! சகல புகழும் அவனுக்கேயுரியன! அவர்களுக்கான நடைமுறைகளையும் காட்டி, அச்செயல் முறைகளின்படி நடந்தால் சொர்க்கமுண்டு என்பதையும் அவன் சுட்டிக் காட்டியுள்ளான். அச்செயல்முறையோ அவன் உதவியாலும் கருணையாலுமே அமல் நடத்தப்படக்கூடியது, "தன் சொந்தச் செயல்களால் யாரும் சொர்க்கம் புகுவதில்லை" என்று நம் பெருமான் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளினார்கள். "அல்லாஹ்வின் ரஸூலே நீங்களுமா அப்படி?" என்று அவர்களிடம் வினவப்பட்டபோது, "ஆமாம், நானும் கூடத்தான்; அல்லாஹ் தன் கருணையால் என்னைப் பொதிந்தாலன்றி (நானுந்தான் சொர்க்கத்தில புக முடியாது)" என்று அவர்கள் தங்கள் திருக்கரத்தைத் தங்கள் சிரத்தின் மீது வைத்தவாறு கூறினார்கள்; இது ஆயிஷா நாயகி (ரலி) அவர்கள் அறிவித்துள்ள ஹதீஸ்களில் ஒன்றாகும்.

எனவே, அல்லாஹ்வின் ஏவல்களை நிறைவேற்றி, விலக்கல் களை விட்டு, ஒதுங்கி; அவனுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவனாக நடந்து கொள்ளும்போது, அவன் குறித்துள்ளவற்றில் உன்னை இழந்தவனாய் இருக்கும்போது, அவன் தீமையிலிருந்தும் உன்னைப் பாதுகாப்பான்; உனக்குத் தன் நன்மைகளை அதிகரிக்கச் செய்வான். ஆத்மீக லௌகீகத் தீமைகளிலிருந்து பாதுகாப்பு நல்குவான் லௌகீக விவகாரங்களைப் பற்றி அல்லாஹ்வின் வார்த்தையுண்டு. அதாவது; "தீமையும் மானக்கேடான செயலும் அவரை அணுகாதபடி செய்வதற் காக நாம் எச்சரிக்கை செய்தோம்; நிச்சயமாக அவர் உண்மையுள்ள அடியார்களில் ஒருவராய் இருந்தார்." (12 : 24) ஆத்மீக விவகாரங்கள் பற்றி அவன் சொல்வதாவது;

"நீங்கள் அல்லாஹ்விடம் நன்றி விஸ் வாசம் உடையவர்களாயும் மெய்யுறுதி கொண்டவர்களாயும் இருப்பின் அல்லாஹ் ஏன் உங்களைத் தண்டிக்கப் போகிறான்?" (4 : 147)

மெய்யுறுதியும் நன்றி விஸ்வாசமும் உள்ளவர்களை எந்தத் துயர் தான் என்ன செய்ய முடியும்? அவன் தான் துயரத்தை விடப் பாதுகாப்புச் சமீபமானவனாகவும் தன் நன்றி விஸ்வாசத்தில் வளமிக்க வனாகவும் இருக்கிறானே! அல்லாஹ் சொல்கிறான்: "நீங்கள் நன்றி விஸ்வாசம் உடையவர்களாய் இருப்பின் (நம் அருள்களை) நாம் பன் மடங்காக்கித் தருவோம்" என்று.

எனவே, உன் மெய்விஸ்வாசம் மறுமையில் ஒவ்வொரு பாவாத் மாவுக்கும் தண்டனையாக உள்ள நரக நெருப்பை அணைத்துவிடும். அப்படியிருக்க இம்மையிலுள்ள துயர நெருப்பை மட்டும் அவிக்காது இருக்குமா? ஸுப்ஹானல்லாஹ்! ஆத்மீகப் பரமானந்த நிலைமை அடைந்த, தெய்வ நேயத்தைப் பெறப் பொறுக்கி எடுக்கப்பட்ட அல் லாஹ்வின் அடியானின் நிலை இது. இத்தகைய நிலையில் துயரங்கள் ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாதது. ஆனால், மனோ விகாரங்களால் ஏற்படும் அருவருப்பில் இருந்தும் கீழான இயல்புகளின் பக்கம் சரிவதில் இருந்தும்–அவனை விடுதலை பெற்றவனாக்க இத் துயரங்கள் அவசியமானவையாய் இருக்கின்றன. தேக இச்சைகளிலும், அதன் போக போக்கியங்களிலும், ஜனங்களிடையில் திருப்தியாகி இருப்பதிலும் அவர்கள் அருகில் இருப்பதில் இன்பமடைவதிலும் அவர்களோடு மனமகிழ்வாய் இருப்பதிலும் நம்பிக்கை கொண்டு அவற்றிலேயே ஆழ்ந்து விடாமலும் இத்துயரங்கள் பாதுகாக்கின்றன. இவை யாவற்றையும் இதயத்தைவிட்டு முற்றும் அகற்றி, அவனும் அவன் இதயமும் பரிசுத்தமாக்கப்பட்டு, அவன் இதயத்தில் ஏகத் துவமும் சத்தியத்தின் ஞானமும் மட்டுமே நிறையும் வரை அவன் சோதனைகளுக்கு உள்ளாக்கப்படுவான். பின்னரே அவன் இதயம் மறைவான தலத் திலிருந்து வரும் பலவித ரகசியங்கள் இறங்கும் இடமாக ஆகிவிடும்; அதில் ஞானமும், சமீபத்துவ ஒளியும் படும். இப்படி இருக்கக் காரணம்.

இதயம் இருவர் இருக்க இடமற்ற ஒரு வீடாக விளங்குவதுதான். "எந்த மனிதனுக்கும் அல்லாஹ் இரண்டு இதயங்களைப் படைக்கவில்லை" (33 : 4) என்று சொல்லியுள்ளான்.

"ஒரு நகரைக் கைப்பற்றும் அரசர்கள், நிச்சயமாக அதை நிர்மூல மாக்கி, அதன் மக்களில் கௌரவமானவர்களையும் இழிந்தவர்க ளாக்கி விடுகின்றனர்" (27 : 34) என்றும் திருகுர்ஆனில் சொல்லப்பட் டுள்ளது போல, இந்த அரசர்கள் பெருங் கௌரவத்தில் இருந்தவர் களையெல்லாம், அவர்களுடைய நல்ல நிலையிலும் போக வாழ்விலு மிருந்து கீழே தள்ளி விடுகின்றனர். (முதலில்) இதயத்தின் ஆதிக்கம் ஆசைப்பேயிடமும் சுயநலத்திடமுமே இருக்கிறது. அவை சகல அங்கங்களையும், அவற்றின் சக்தியையும் பல்வேறு பாவங்களையும், பட்டோபங்களையும் செய்யுமாறே உத்தரவிடும். இப்போது அந்த ஆதிக்கம் ஒழிந்து அங்கங்கள் ஒய்வடைகின்றன; அரசனின் வீடும் முற்றமுமான இதயம் சுத்தமாகிறது; அதில் ஏகத்துவமும் ஞானமும் குடி புகுகின்றன; மறைவானதிலிருந்து அற்புதமான விஷயங்கள் வந்திறங்கும் தலமாக அஃது ஆகிவிடுகிறது. இவை யாவும் துயரங்களினுடையவும் சோதனைகளுடையவும் பயனாக உண்டான வைதாம். இதனால் தான், "ஜனங்களில் நபிமார்களான நாங்கள் மிகப் பல சோதனைகளுக்கும், அவற்றின் பின் மற்றும் பல சோதனைகளுக் கும் எமது அந்தஸ்துக்குத் தக்கபடி ஆளாக்கப்படுகிறோம்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். "உங்கள் யாவரையும் விட நான் அல்லாஹ்வை அதிகம் அறிவேன்; உங்களுக்குள் எவரையும்விட அவனுக்கு நான் அதிகம் அஞ்சுகிறேன்" என்றும் அவர்கள் மொழிந்து உள்ளார்கள்.

அரசனை நெருங்கியிருக்கும் எவனுக்கும் ஆபத்தும் விழிப்பு ணர்ச்சியும் மிகவும் அதிகரித்தே இருக்க வேண்டும். ஏனெனில், தன் நடவடிக்கையில் எதையும் மறைக்க முடியாத நிலையில் அவன் அரசன் சந்நிதானத்தில் இருக்கிறான். சகல சிருஷ்டிகளும் சேர்ந்தே அல் லாஹ்வின் பார்வையில் ஒரு மனிதனைப் போன்று தானே இருக்கின் றன.

அவை செய்யும் எதுவும் அவனிடமிருந்து மறைக்கப்பட்டில்லையே! அப்படியிருக்க அவனுக்கு நெருக்கமானவர்கள் விஷயத்தில் மட்டும் இப்படி இருக்கிறது என்று கூறுவது எப்படிப் பொருந்தும் என்று வினவலாம். ஒருவனுடைய அந்தஸ்து உயர்த்தப்பட்டு, அவன் மிகவும் கண்ணியமான ஒரு பதவியில் அமர்த்தப்பட்டதும் அவனுக்கு ஏற்படும் அபாயங்கள் அதிகரிக்கின்றன. அல்லாஹ் தனக்கு அளித்த பல்வேறு அருட்கொடைகளுக்கும் பாக்கியங்களுக்கும் நன்றி தெரிவிப்பதும் அவனுக்கு அவசியமானதாகிறது. எனவே, அல்லாஹ்வுக்குப் பணி செய்வதில் சற்றேனும் தயக்கம் ஏற்படின், அது நன்றிக் கடனில் வழுவியதாகும்; அவனுக்கு அடிபணிவதில் தவறியதாகும்.

"ஹே ரஸூலின் மனைவியரே, உங்களில் யாரேனும் மானக் கேடான நடத்தைக்கு ஆளாயின், அவளுக்குத் தண்டனை (சாதா ரணமாக மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவதை விட) இரு மடங்காக ஆக்கப்படும்" என்று (33 : 30) அல்லாஹ் சொல்லியுள்ளான். இப் பெருமாட்டிகளிடம் அல்லாஹ் இவ்விதம் சொல்லக் காரணம், அவர்களை நபி பெருமான் (ஸல்) அவர்களோடு சேர்த்து வைத்துத் தன் அருளைப் பூரணமாக அவர்கள் மீது சொரிந்ததுதான். எனவே, அல்லாஹ்வோடு ஒட்டியவனாக அவனுக்கு அருகில் உள்ள ஓர் அடியானின் நிலை எதுவாய் இருக்கும் என்பதை எண்ணிப் பாருங்கள்! அல்லாஹ் மிகவும் வலுப்பமானவன்; தன் சிருஷ்டிகளோடு எவ்வகையிலும் ஒப்புவமை கூறத் தகாதவன். "எதுவும் அவனுக்கு உவமை கூறத்தக்கதன்று; அவன் யாவையும் கேட்பவன்; யாவையும் பார்ப்பவன்" (42 : 11)

உபதேசம் இருபத்து எட்டு

நீ புடமிடும் குகையுள் இருக்கையிலே, உன் கீழானமனத்தைக் கொன்று கொண்டிருக்கையிலே, உன் இச்சைகளுடன் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கும்போதே, உன் நோக்கங்களை அகற்ற முயன்று கொண்டிருக்கும்போதே, இம்மை மறுமையில் பிரதி பயனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்போதே – இவை யாவற்றினதும் சின்னங்களும்

வெளிப்படையாக உன்னிடம் தெரியும் போதே, நீ சுகத்தையும், மகிழ்ச்சியையும், பாதுகாப்பையும், அமைதியையும், பாக்கியத்தையும் கவலையின்மையையும் கேட்கிறாய்! ஹே அவசரகாரனே சற்று நிதானி; மெதுவாக நட; ஹே எதிர்பார்ப்பவனே, உனது இந்நிலை நீடிக்கும்வரை கதவு மூடியேதான் இருக்கும் என்பதை உணர். ஓர் அடிமை தன்னை மீட்டுக் கொள்வதற்கான ஒப்பந்தம் அது; ஒரு காசு பாக்கியிருப்பினும் நீ விடுபட்டுவிட முடியாது. இம்மையின் ஓர் ஈச்சங்கனியையாவது சுகிக்கும் ஆசையோ, உன் மற்ற இச்சைகளோ, நோக்கமோ, தவிப்போ, இம்மை மறுமைக்குரிய எதையாவது காணும் வேட்கையோ இவற்றில் ஏதாவது ஒன்றேனும் உன்னிடம் இருக்கும்வரை நீ தன்னை நாஸ்தியாக்கும் வாயிலுக்கு வெளியில் நிற்பவன்தான் என்றாகிவிடும். நீ முற்றும் பூரணமாக நாஸ்தியாகி, நீ வைக்கப்பட்டுள்ள புடச் சிட்டியை விட்டு வெளியிலெடுக்கப்பட்டு முழுவதும் பக்குவப்பட்டவன் ஆனதும், உனக்கு ஆபரணங்களும் உயரிய ஆடைகளும் அணிவிக்கப்பட்டு மாபெரும் அரசனிடம் அழைத்துச் செல்லப்படுவாய். அங்கே, "நிச்சயமாக, நம் சந்நிதானத்தில் நீர் கண்ணியமும், நம்பிக்கை விஸ்வாசமும் பெற்று விட்டீர்" (12 : 54) என்று விளிக்கப்படுவாய்.

அதன்பின் சகல சுகபோகங்களும் உனக்குத் தரப்படும்; பரிவு காட்டப்படும்; அவன் அருட்கொடையால் உணவும் பானமும் ஊட்டப் படும்; நீ அருகிலாக்கப்பட்டு ரகசியங்கள் பற்றிய ஞானம் உனக்கு வழங்கப்படும். அந்த ரகசியங்கள் உன்னிடமிருந்து மறைவானவை யாய் இரா; இவற்றிலிருந்து உனக்குத் தரப்படுபவற்றால், எந்த வஸ்துவின் தேவையுமற்றவனாக ஆக்கப்படுவாய்.

பல தினுசுகளான பொன் நாணயங்கள் காலையில் இருந்து மாலைவரை, மருந்துக் கடைக்காரர் தொட்டு, காய்கறிக் கடைக் காரர்வரை, கசாப்புக் கடைக்காரர் தொட்டு செம்மான்வரை, பல சரக்குக் கடைக்காரர் தொட்டு தோட்டிவரை சகல தொழிலுடைய ஜனங்களிடமும் கைமாறிக் கொன்டே இருக்கின்றன. இவர்களில் சிலர் மிக உயர்ந்த

அந்தஸ்தினர்; சிலர் தாழ்வாகக் கருதப்படுவார்கள். பிறகு இந்தத் தங்க நாணயங்கள் ஒன்று சேர்க்கப்பட்டு, உருக்கப்பட்டு, கம்பி இழுக்கப்பட்டு, தகடாக்கப்பட்டு ஆபரணங்களாகச் சமைக்கப்படுகின்றன. அவை பளபளப்பாக்கப்பட்டுப் பரிமளமும் பூசப்படுகின்றன. பிறகு அவை உயரிய அந்தஸ்திலுள்ள இடங்களில் குடி புகுகின்றன. பொக்கிஷ அறையில் பூட்டப்படுகின்றன. அல்லது ஒரு மணப்பெண்ணை, அலங்கரிக்கின்றன. ஒருவேளை இந்த மணப்பெண். பெரிய அரசனின் மகளாகவும் இருக்கலாம். இவ்விதமாகத் தங்கம் செம்மானிடம் இருந்து–உருக்கி, நசுக்கப்பட்டபின்–அரசனின் சந்நிதிக்கே போய் விடுகிறது. ஹே மெய்விஸ்வாசியே, இது போலவே விதிவசத்தின் அழுலுக்கு உட்படுகையில் பொறுமை காட்டி, வாழ்க்கையின் சகலவித நிலைமைகளிலும் அவன் கட்டளைகளுக்கு உளப்பூர்வமாக உடன்பட்டு வந்தால் இம்மையிலேயே நீ உன் இறைவனுக்கு அருகிலாக்கப்பட்டு, அவனைப் பற்றிய ஞானம் அளிக்கப்பட்டவனாய், மற்றும் பல ஞானங்களையும், மர்மங்களையும் உணர்ந்தவனாய் மறுமையில் சாந்தி நிலையத்திலே நபிமார்கள், ஸித்தீகீன்கள் ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோருடன் வைக்கப்படுவாய், அவன் அருகே, அவன் வீட்டில் அவன் பரிவை உணர்பவனாய் இருப்பாய். எனவே பொறுமையுடனிரு; அவசரப்படாதே, விதி வசத்தின் போக்கின் படி நடந்து கொள் அவனுக்கு எதிராகப் புகார் கூறாதே! அவ்விதம் புகார் சொல்லாதிருப்பின் ஞானத்தின் இனிமையையும், பரிவையும். அருட்கொடையையும் நீ உணர முடியும்.

உபதேசம் இருபத்து ஒன்பது

"மிடிமை நிராகரிப்பில் கொண்டு சேர்க்கலாம்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். அதாவது, அல்லாஹ் வின் அடியான் அவனிடம் நம்பிக்கை கொண்டு, தன் விவகாரங்களை யெல்லாம் அவனிடம் ஒப்படைத்து விடுகிறான்; அவன் இலகுவில் தந்துவிடும் இரணத்தில் நம்பிக்கை கொண்டுள்ளான்; தனக்கு எது வரவிருக்கிறதோ அது வந்தே தீரும். எது வராதோ அது ஒருக்காலும் வரப்போவதில்லை என்று உறுதியான நம்பிக்கையுடையவனாய், "அல்லாஹ்விடம் கடப்பாடு

உடையவர்களாக அவனுக்குப் பயந்து நடப்பவர்களுக்கு அல்லாஹ் ஒரு வழிவிடுகிறான். அவர்கள் எதிர்பார்க்க இயலாத இடத்திலிருந்து அவர்களுக்கு இரணந்தருகிறான்; அல்லாஹ்விடம் நம்பிக்கை வைத்திருப் பவர்களுக்கு அவனே போதுமானவனாய் இருக்கிறான்" (65 : 2, 3) என்ற திடமான நம்பிக்கையுடன் இருக்கிறான்.

இப்படிச் சொல்பவன் சுகமான–வசதியான நிலையில் இருக்கை யில் இவ்விதம் பேசுகிறான்; துயரத்தாலும் வறுமையாலும் அல்லாஹ் தன்னைச் சோதிக்கையில் அல்லாஹ்விடம் பணிந்து மீண்டும் மீண்டும் முறையிடுகிறான்; ஆனால், அல்லாஹ் அவற்றை அகற்றுவதில்லை. எனவே, நபி பெருமான் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் மொழிந்துள்ளபடி மிடிமை நிராகரிப்பில் கொண்டு சேர்க்கலாம்" என்ற நிலையை எய்திவிடுகிறான். அல்லாஹ்வால் பரிவுடன் நடத்தப்படு பவன் விஷயத்தில் அவனுடைய துயரத்துக்குக் காரணமாய் இருப்பது எதுவோ அது அகற்றப்பட்டு, அவனுக்குச் சுகமும் வளமும் நல்கப்படு கின்றன. அவன் அல்லாஹ்வைப் புகழ்ந்து நன்றி செலுத்தும் சக்தியும் அருளப் படுகிறது. அம்மனிதன் தன்னை வந்தடையும் வரை இந்த வசதியை அல்லாஹ் அவனுக்கு அளித்தே வருகிறான். அல்லாஹ் அந்த அடியானைச் சோதனை செய்ய நினைக்கும்போது அவனுடைய துயரங்களையும் மிடிமையையும் அகற்றாது விட்டு வைக்கிறான்; மெய்விஸ்வாசத்தின் உதவியையும் நிறுத்திவிடுகிறான்; இவ்வித நிலையில் அவன் அல்லாஹ்வின் மீது குறை காண்கிறான்; அவன் தன் வாக்கைக் காப்பாற்றவில்லை என்று பழித்துரைக்கிறான். எனவே, அல்லாஹ்விடம் நம்பிக்கையற்ற நிராகரிப்பவனாக–அவன் அறிகுறி களை ஒதுக்கியவனாக, தன் இறைவனிடம் கோபம் கொண்டவனாக அவன் மரணிக்கிறான். இத்தகையவனைப் பற்றியே நபிபெரு மானார்(ஸல்) அவர்கள், "நிச்சயமாக நீதித் தீர்ப்பு நாளில் யாவரிலும் கடுமையாகத் தண்டிக்கப்படுபவன் யார் எனின், இம்மையில் மிடிமை யையும் மறுமையில் தண்டனையையும் பெறுபவன் தான். இத்தகைய நிலைமையிலிருந்து அல்லாஹ் நம்மைக் காப்பாற்றுவனாக!" என்று கூறியுள்ளார்கள்.

இந்த ஹதீஸில் குறிப்பிடப்பட்டுள்ள மிடிமை அல்லாஹ்வை மறக்கும்படி செய்யும் மிடிமையாகும். இதிலிருந்தே அவர்கள் அல்லாஹ்வின் பாதுகாப்பைத் தேடியுள்ளார்கள். அல்லாஹ் குறிப்பிட்டுத் தேர்ந்தெடுப்பவனுக்கு அவன் தன் அன்பர்களுள், நேயர்களுள் ஒருவனாக, நபிமார்களின் வாரிஸ்களில் உள்ளவனாக, தன் நேயர்களின் தலைவனாக, தன் அடியார்களில் அறிவாளிகளுள், அவர்களின் மத்தியஸ்தர்களுள் தம் எஜமானனிடம் செல்லும் வழியைக் காட்டுவோருள் ஒருவனாக உள்ளவனுக்கு, அல்லாஹ் மலையளவு பொறுமையைத் தருகிறான்; மகிழ்வுடன் அடிபணிவதில் கடலளவு உணர்ச்சியைத் தருகிறான்; அல்லாஹ்வின் செயலில் பூரணமாய் இணைந்து நிற்க வைக்கிறான். அதன்பின் அவன் மீது தன் நன்கொடைகளை ஏராளமாக அருளுகிறான்; அல்லும் பகலும், ஏகாந்தத்திலும், பலரிடை இருக்கும்போதும், சில சமயங்களில் மறைவாக, சில சமயங்களில் பகிரங்கமாகத் தயாளமான கவனத் துடன் அவனை ஊட்டி வளர்க்கிறான். பலவகையான அன்புமாரிகளை அவன்மீது சொரிகிறான்; அவன் மரணிக்கும் வரை இது நீடிக்கிறது.

உபதேசம் முப்பது

"(என் நோக்கம் நிறைவேற) நான் என்ன செய்வது, எவ்வழியைப் பின்பற்றுவது?" என்று எத்தனை தடவை தான் நீ வினவுவாய்? எனவே, நீ உள்ள இடத்திலேயே உன்னை இருக்கும்படி செய்த இறைவனிடமிருந்து ஒரு வழி காட்டப்படும்வரை, நீ இருக்கும் இடத்தி லேயே இரு. வரம்பு மீறாதே என்று உனக்குக் கூறப்படுகிறது. "மெய் விஸ்வாசிகளே, பொறுமையுடனிருங்கள்; சகிப்பதில் (பிறரைவிட) அளவு மீறியவர்களாய் இருங்கள்; உறுதியுடனிருங்கள்; அல்லாஹ் வுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையில் விழிப்புடனிருங்கள்" (3 : 200) என்று அல்லாஹ் கூறியுள்ளான்.

ஹே மெய்விஸ்வாசியே, பொறுமையுடன் இருக்கும்படியும், பொறுமையுடன் இருப்பதில் ஒருவருடன் ஒருவர்போட்டியிடும்படியும், உறுதியுடனும், எச்சரிக்கையாகவும் இருக்கும்படியும் அவன் உத்தரவிட்டுள்ளான். இதைக் கடமையாகக் கொள்ள வேண்டாமா?

பொறுமையைக் கைவிடக் கூடாது என்பதற்காகவே, "அல்லாஹ்வுக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமையில் விழிப்புடனிருங்கள்" என்று மேலும் அவன் எச்சரிக்கிறான். இவ்விதம் பொறுமையாலேயே நலமும் பாதுகாப்பும் உண்டாகுபவையாய் இருக்கின்றன. "உடலுக்குத் தலை எத்தனை இன்றியமையாததோ, மெய்விஸ்வாசத்துக்குப் பொறுமை அத்தனை இன்றியமையாததாகும்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். ஒவ்வொன்றுக்கும் ஓர் அளவுப்படி வெகுமதியுண்டு; ஆனால், பொறுமைக்கான வெகுமானமோ அளவிட முடியாதது என்றும் சொல்லப்பட்டுள்ளது. "நிச்சயமாகப் பொறுமையுடையவர்கள் அளவின்றித் தங்கள் வெகுமதியைப் பெறுவார்கள்" (39 : 10) என்று திருக்குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளது.

எனவே, பொறுமை விஷயத்தில் உன் கடமையில் விழிப்புடனி ருந்து அல்லாஹ் ஏற்படுத்தியுள்ள வரம்பில் முழுக்கவனமும் உள்ளவனாய் இருந்தால், அவன் என்ன தருவான் என்பதைத் தன் திருமறையில் வாக்களித்துள்ளான். அதாவது: "அல்லாஹ்வுக்குத் தான் செய்ய வேண்டிய கடமையில் விழிப்புடனிருப்பவனுக்கு அல்லாஹ் ஒரு வழியை ஏற்படுத்தித் தருவான். மேலும், அவன் நினையாத புறத்திலிருந்து அவனுக்கு உணவு அளித்தருள்வான்" (65: 2,3) அல்லாஹ்விடம் பரஞ்சாட்டியவர்களுடன் சேர்ந்து, ஒரு வழியுண் டாகும்வரை பொறுமையுடனிரு. "அல்லாஹ்விடம் பரஞ்சாட்டுபவர்க ளுக்கு அவன் போதுமானவனாய் இருக்கிறான்" (65 : 3) என்று அல்லாஹ்வே வாக்களித்துள்ளானன்றோ!

பிறருக்கு நன்மை செய்வோரின் கூட்டத்தில் சேர்ந்து, பொறுமையுடனும், அல்லாஹ்விடம் நம்பிக்கையுடனும் இருந்துவா! ஏனெனில், "நிச்சயமாகப் பிறருக்கு நன்மை செய்வோருக்கு நாம் வெகுமதியளிக்கிறோம்" என்று அல்லாஹ் கூறியுள்ளதுபோல, அவன் அதற்கும் நன்கொடை அருளுவான். பிறருக்கு நன்மை செய்வோரை, நிச்சயமாகத் தான் நேசிப்பதாக அல்லாஹ்வே சொல்லியுள்ளானா தலால், இந்நற்பண்புகளுக்காக அவன் உன்னை நேசிப்பான்.

இவ்விதமாகப் பொறுமையே சகல சற்குணங்களுக்கும் மூலஸ்தானமாய் இருக்கிறது; இம்மை மறுமைக்கான சகல பாதுகாப் புக்கும் அதுவே மூலஸ்தானமாய் இருக்கிறது; அதன் மூலம் மெய் விஸ்வாசி அல்லாஹ்வின் சித்தத்துக்குத் தன்னை அர்ப்பணித்து அதை மனப் பொருத்தஞ் செய்துகொண்டு, அல்லாஹ்வின் செயலுடன் ஐக்கியப்பட்ட நிலையை எய்திவிடுகிறான். (இந்நிலையே 'பதாலியத்' அல்லது 'கைபத்' எனப்படும்) எனவே, அதை இழந்து விடாது எச்சரிக் கையாய் இரு. இம்மை மறுமையிலும் ஈடேற்றமடையவும், இவ்விரண் டின் வளமும் நிலைக்கவும் இது அவசியம் ஆகும்.

உபதேசம் முப்பத்து ஒன்று

ஒருவன் மீது உனக்கு அன்போ, துவேஷமோ உண்டானால், அவன் நடத்தையைத் திருக்குர்ஆன், நபி பெருமான்(ஸல்) அவர் களின் முன்மாதிரி ஆகிய இரண்டையும் முன்னிறுத்திப் பரிசோதனை செய்! இவற்றின் முன் நீ வெறுக்கும் அவனுடைய நடத்தை வெறுக்கக் கூடியதாய் இருப்பின், அல்லாஹ்வுடையவும் அவன் தூதருடையவும் அபிப்பிரா யத்துடன் நீ இணங்கியவனாய் இருப்பதுபற்றி மகிழ்ச்சியடை, அப்படியின்றி அவற்றின்முன் அவன் நடத்தை சரியானதாய் இருப்பின்– அந்நிலையில் நீ அவனிடம் பகைமை பாராட்டின்–உன் கீழான ஆசைகளுக்கு நீ அடிமைப்பட்டவனாய் இருக்கிறாய் என்பதை உணர். உன் கீழான ஆசைகள் காரணமாய் நீ அவனை வெறுக்கிறாய். அந்த வெறுப்பால் அவனுக்கு அநீதி இழைக்கிறாய், அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்குமே இதில் மாறு செய்கிறாய். எனவே, அல்லாஹ்வின் பக்கல் திரும்பு; உன் துவேஷத்துக்காக வருத்தப்படு; அம்மனிதனிடமும், மற்றும் அல்லாஹ்வின் நேயர்கள், அவனால் தேர்ந் தெடுக்கப்பட்டோர், அவன் அடியார்களுள் பக்திமான்கள் ஆகியோரிடமும் நீ அன்பு கொள்ளச் செய்யுமாறு அல்லாஹ்விடம் வேண்டுதல் செய்; அம்மனிதனிடம் அன்பு செலுத்துவதில் அல்லாஹ்வுக்கு இணங்கியவனாய் நடந்துகொள்.

நீ அன்பாய் இருப்பவன் விஷயத்திலும் இதே விதம்தான் நீ நடந்து கொள்ளவேண்டும். அதாவது, அவனுடைய நடத்தையைத் திரு குர்ஆன், ஹதீஸ் ஆகிய இரண்டையும் முன்னிறுத்திச் சோதனை செய்து பார்!

இவற்றின் முன் அவன் நல்லவனாயின் நீ அவனிடம் அன்பு கொள்வது சரியே; ஆனால், அவன் இவற்றின் முன் சரியற்ற வனாயின், நீ அவனிடம் அன்பு காட்டக்கூடாது; உன் கீழான இச்சை மூலம் நீ அவனிடம் அன்பு கொள்ளக் கூடாது. அதுபோல கீழான ஆசை மூலம் நீ யாரையும் வெறுக்கக்கூடாது. உன் கீழான இச்சையை எதிர்க்கும்படி நீ வன்மையாக உத்தரவிடப்பட்டுள்ளாய். அல்லாஹ் சொல்கிறான்: "கீழான இச்சையின் வழி நிற்காதீர்; அப்படி நிற்பின் அது உம்மை அல்லாஹ்வின் பாதையைவிட்டு வழிதவறும்படி செய்துவிடும்; அதற்கு இடங்கொடுக்க வேண்டாம்; (38 : 26) என்று.

உபதேசம் முப்பத்து இரண்டு

"நான் யார் மீது அன்பு கொண்டிருந்தாலும் அது நீடிப்பதில்லை, விலகுவதாலோ, மரணத்தாலோ, பகைமையாலோ, பாழாவதாலோ பண நஷ்டத்தாலோ, பிரிவு எங்களிடையே புகுந்து விடுகிறது" என்று எத்தனையோ தடவை நீ கூறி வந்துள்ளாய் அல்லவா! ஹே அல் லாஹ்வின் மீது மெய்விஸ்வாசம் கொண்டவனே, உன் மீது நன் கொடைகளைச் சொரிந்துள்ள, உன் விஷயத்தில் அக்கறை காட்டி யுள்ள, உன்மீது அதிகமான கவனங் காட்டியுள்ள அல்லாஹ்வும் பொறாமை உடையவன்தான் என்பதை நீ அறிவாயா? இதை நீ கேள்விப்பட்டதில்லையா? அவன் உன்னைத் தனக்காகவே படைத் துள்ளான்; நீயோ அவனையன்றி வேறு யாருக்கோ உரித்தானவனாக விரும்புகிறாய். அவன் வசனங்களை நீ செவி மடுத்ததில்லையா?

"அவன் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பான். அவர்களும் அவனிட ம் அன்பு கொள்வார்கள்" (5: 54) என்றும், "எனக்கு பணிபுரிவதற்கன்றி (வேறு எதற்காகவும்) நான் ஜின்னுகளையும் மனுவையும் படைக்கவில்லை"(51: 56) என்றும் அவன் கூறியுள்ளான் அல்லவா!

"அல்லாஹ் ஓர் அடியானிடம் அன்பு கொள்ளும்போது அவனைச் சோதனைக்கு உள்ளாக்குகிறான். அப்போது அவன் சகிப்புத் தன்மை காட்டினால், அவனை அல்லாஹ் கவனித்து கொள்கிறான்" என்று நம்

பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதையும் நீ கேள்விப்பட்டது இல்லையா? "அல்லாஹ்வின் தூதரே, அவன் கவனித்துக் கொள்வது எதை?" என்று நபி பெருமான் (ஸல்) அவர்களிடம் வினவப்பட்டது. அவர்கள் சொன்னார்கள்: "அவனுக்கு அல்லாஹ் எந்தச் செல்வத்தையும் குழந்தைகளையும் விட்டு வைப்பது இல்லை" என்று.

ஏனெனில், அந்த அடியானுக்குப் பணமோ, அவன் அன்பு கொண்டுள்ள குழந்தை குட்டிகளோ இருப்பின் அவன் தன் இறைவனிடம் கொள்ளும் அன்பு பிரிவு பட்டதாகிவிடுகிறது. பிறகு அது குறைந்து சிதறிவிடுகிறது. பிறகு அல்லாஹ்வுக்கும் மற்றோர்க்கும் இடையே அது வினியோகமாகிவிடுகிறது. அல்லாஹ்வோ தனக்கு எந்தப் பங்காளியும் ஏற்பட விடுவதில்லை. அவன் அதில் பொறாமையுள்ளவன். சகல வஸ்துக்களின் மீதும் ஆதிக்கம் உள்ளவன். யாவற்றின் ஆட்சியும் அவன் வசமே. ஆகவே, அவன் தன் கூட்டாளியாக வரக்கூடியதை அழித்து பூண்டறுத்துவிட்டுத் தன் அடியானின் இதயம் முழுவதையும் பூரணமாகத் தனக்கே உரியதாக்கிக் கொள்கிறான். அப்போதுதான், "அவன் அவர்களிடம் அன்பு கொண்டிருப்பான். அவர்களும் அவனிடம் அன்பு கொள் வார்கள்" என்ற திருமறை வாக்கியத்தின் உண்மை தெளிவுபடும்.

அல்லாஹ்வின் பங்காளிகளை விட்டும் மனைவி, மக்கள், சொத்து, சுகம், ஆட்சி அதிகார வேட்கை, அதிசயங்கள் நிகழ்த்தும் ஆத்மீக நிலைகளை அடையும் ஆசை தெய்வப் பூங்காவை அடைதல், அவனுக்கு அருகிலாதல் எனும் அவாக்களாகி உருவங்களை விட்டும் உள்ளத்தைச் சுத்தப்படுத்த வேண்டும். எந்த நோக்கமும் எந்த ஆசையும் உள்ளத்தில் இருக்கக்கூடாது. அப்போது இதயம் எந்த திரவமும் தங்காத ஓட்டைப் பாண்டம் போலாகிவிடும். ஏனெனில் அல்லாஹ்வின் செயலால் அஃது இப்போது உடைந்ததாகி விடும். அங்கே எந்நோக்கமாவது வளர்ந்தால் அல்லாஹ்வின் செயலும் பொறாமையும் அதை உடைத்து விடுகின்றன. அதன் பின் கண்ணியம், திறம், மரியாதை எனும் திரைகள் அதைச் சுற்றித் தொங்க விடப்படுகின்றன; அத்துடன் மகத்துவம் பலம் எனும் அகழ்களும் தோண்டப்படுகின்றன.

இவ்விதமாக எதைப்பற்றிய எந்த ஆசையும் இதயத்தை நெருங்க முடியாது. சொத்து, குழந்தைகள், மனைவி, நண்பர்கள், அற்புதங்கள், அதிகாரம், எதையும் விளக்கும் ஆற்றல் முதலியவை பற்றிய ஆசைகள் எதுவும் இந்நிலையில் இதயத்துக்கு எத்தீங்கும் செய்ய முடியாது. இவை இதயத்துக்கும் புறம்பிலிருக்குமாதலால், இவற்றால் அல்லாஹ்வின் பொறாமை உண்டாவதும் இல்லாது போகிறது. அதற்குப் பகரமாய் இவை யாவும் அல்லாஹ்வால் தன் அடியானுக்கு அருள்களாகவும், அவன் அன்பின் ஆசியின் அறிகுறியாகவும், அவனை அடைபவர்களுக்கு அவன் தரும் நலமாகவும் ஆகிவிடும்; இவ்விதம் இத்தகைய அடியார்கள் கண்ணியப்படுத்தப்பட்டு, கருணை மாரிக்கு ஆளாக்கப்பட்டு, அல்லாஹ் அருளும் இக்கண்ணியம் எனும் மூலதனத்தால் பாதுகாப்புப் பெற்றவர்களாகின்றனர். அல்லாஹ் இம்மையிலும் மறுமையிலும் அவர்களின் பாதுகாவலனாய் கண்காணிப்பாளனாய், புகலிடமாய், ஆறுதல் நல்குபவனாய் இருக்கிறான்.

உபதேசம் முப்பத்து மூன்று

மனிதர்களில் நான்கு வகையானவர்கள் உண்டு. இவர்களில் முதலாம் வகையினனுக்கு நாவும் இதயமும் கிடையாது. மிகவும் சாதாரணமான அந்தஸ்தும், மந்த மதியும், கீழ்த்தரமான போக்கும் உடைய இவன் அல்லாஹ்வின் முன் எந்த இடமும் பெறாதவனாய், தன்னில் நன்மையானதும் எதுவும் இல்லாதவனாய் இருந்து வருகிறான். இத்தகையவனை அல்லாஹ் தன் கருணையால் பொதிந்து தன்னிடத்தில் மெய்யுறுதி கொள்ளுமாறு வழிகாட்டி, இவன் உடலின் அங்கங்களைத் தனக்கு கீழ்ப்படிவதில் அசையச் செய்தாலன்றி இவன் வெறும் மனிதப் பதராகவே இருப்பான். இவனுடன் பழகாதபடியும், இவனைக் கவனிக்காதபடியும் எச்சரிக் கையாய் இருந்துகொள். இவனை யொத்தவர்கள் அல்லாஹ்வின் கோபாக்கினிக்கும் தண்டனைக்கும் ஆளாகுபவர்களாவர். இவர்கள் நரக நெருப்பில் வாசஞ் செய்பவர்களாவர். இவர்களிடமிருந்து, நாம் அல்லாஹ்விடம் பாதுகாவல் தேடுவோமாக! நீயோ தெய்வீக ஞானம் உடையவனாகி, நன்மையானவற்றை போதிப்பவனாய் மார்க்க வழிகாட்டியாய் அதன் தலைவர்களுள்,

அழைப்பாளர்களுள் ஒருவனாய்த் திகழவேண்டும். எனவே, எச்சரிக்கையுடன் அவர்களை அணுகி, அல்லாஹ்வுக்கு அடிபணியுமாறும் அல்லாஹ்வுக்கு மாறாகப் பாவம் செய்வதனால் வரும் கேடுகளை விளக்கியும் உத்தேசிக்கக் கடவாய். இதன் மூலம் அல்லாஹ்வின் பாதையில் நீ போராடுபவனாகி, நபிமார்களுக்கும், ரஸூல்மார்களுக்கும் உரிய சம்மானங்களுக்கு உரியவனாக முடியும். ஹஜ்ரத் அலி(ரலி) அவர்களிடம் நபி பெருமான்(ஸல்) அவர்கள் மொழிந்ததாவது: "உமது வழிகாட்டுதல் மூலம் அல்லாஹ் ஒருவனுக்கு வழிகாட்டியருளினால், அது உமக்குச் சூரியன் உதிப்பதால் வரும் நன்மையை அளிப்பதாய் இருக்கிறது" என்று.

இரண்டாம் வகையான மனிதனுக்கு நாவு உண்டு; ஆனால், இதயம் இல்லை, இவன் பிறரை அல்லாஹ்வின் பாதைக்கு அழைக்கிறான்; ஆனால், இவன் அதை விட்டு ஓடுகிறான். பிறரிடமுள்ள குறைகளைக் கண்டிக்கிறான்; ஆனால், இவன் அதுபோன்ற ஒரு குறையைத் தன்னகத்தேயே வைத்துக் கொண்டிருக்கிறான். பிறரிடம் தான் பக்திமான் என்று காட்டிக் கொள் கிறான்: ஆனால், பெரும் பாவங்களைச் செய்து அல்லாஹ்வைப் பழிக் கிறான். இவன் தனியாய் இருக்கும்போது, உடையுடுத்திய ஓநாய் ஆகவே இருக்கிறான். இவனைப் பற்றித்தான் நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஏச்சரித்துள்ளார்கள். "மிகவும் அதிகம் அச்சப்பட வேண்டியதும், என் கூட்டத்தினரில் நான் மிகவும் கவலைப்படுவதும் தீய கல்விமானைப் பற்றித்தான்" என்று அவர்கள் மொழிந்துள் ளார்கள். இத்தகைய அறிவாளியிடமிருந்து நாம் அல்லாஹ்விடம் அடைக்கலம் தேடுவோமாக! இவனை விட்டும் நீ விலகிக் கொள்வதுடன், இவன் சொல் இனிமையால் கவரப்பட்டு இவன் வசமாகிவிடாதபடி இருப்பதற்காக இவனைக் கண்டாலே அப்பால் ஓடிவிடு! அப்போதுதான் இவன் பாவ நெருப்பு உன்னைச் சுடாது; இவனுடைய அந்தரங்கத்தின் துர்நாற்றம் உன்னைக் கொல்லாது விடும்.

மூன்றாம் வகையான மனிதனுக்கு இதயம் உண்டு. நாவில்லை. அவன் ஒரு மெய்விஸ்வாசி, தன் சிருஷ்டிகளை விட்டும் அல்லாஹ் அவனை மறைத்துள்ளான். அவனைச் சுற்றியும் தன் திரைகளைத்

தொங்கவிட்டுள்ளான்; அவன் ஆத்மாவின் கோளாறு எது என்று அவனே காணும் திறமையையும் அவனுக்குக் கொடுத்துள்ளான்; அவன் இதயத்தில் வெளிச்சமுண்டாக்கி, ஜனங்களுடன் கலப்பதால் விளையக்கூடிய விஷமங்களையும், பேசிக்கொண்டே இருப்பதால் வரக்கூடிய தீங்குகளையும் அவன் அறியும்படி செய்துள்ளான். மௌனமாக மூலையில் ஒதுங்கி இருப்பதே பாதுகாப்பு என்பதை அவன் உணர்கிறான். "மௌனமாக இருப்பவன் நித்தியப் பதவியை அடைகிறான்" என்று நபி பெருமான் (ஸல்) அவர்களும் மொழிந்துள் ளார்கள். மேலும், அல்லாஹ்வுக்குச் சேவை செய்வது பத்து பகுதிகள் என்றால் நிச்சயமாக அவற்றில் ஒன்பது பகுதிகள் மௌனமாய் இருப்பதாகவே இருக்கின்றன' என்றும் அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

இவ்விதம் அல்லாஹ்வின் அந்தரங்கத்தில் இவன் அவன் தோழனாகவும், பாதுகாவல் பெற்றவனாயும், அளவிலா ஞானமுடை யவனாயும், கருணையாளனான ரஹ்மானின் அருள் பெற்றவனாயும், சகல நலன்களையும் அடைந்தவனாயும் இருப்பான்; எனவே, நீ இத்தகையவனுடன் நட்புப் பூணவேண்டும்; அவனோடு கலந்து உறவாடவேண்டும்; அவனுக்குச் சேவை செய்ய வேண்டும்; அவனுக்கு உண்டாகும் தேவைகளை உடனுக்குடன் கவனித்து, அவனுக்கு வசதி தருபவற்றைத் தந்து, அவன் அன்பைப் பெறவேண்டும். இவற்றை நீ செய்தால் அல்லாஹ் உன்னிடம் அன்பு கொள்வான். தன் தோழர்கள், பக்திமான்கள் கூட்டத்தில் உன்னையும் சேர்த்துக்கொள்வான். அவன் திருவுளச் சித்த முண்டாயின் அவன் ஆசிகளையும் உன் மீது சொரிவான்.

நான்காம் வகை மனிதன் கண்ணியமெனும் உடை அணியப் பட்டு, மறைவான உலகுக்கு அழைக்கப்படுபவன் ஆவான். "கல்வி கற்று, அதன்படி ஒழுகி, அக் கல்வியைப் பிறருக்குப் போதிப்பவன் மறைவான உலகுக்கு அழைக்கப்பட்டு மகத்துவம் உடையவனாக்கப் படுகிறான்" என்று ஹதீஸ் குதுஸியில் கூறப்பட்டு இருப்பதுபோல இவன் மறைவான உலகுக்கு அழைக்கப்படுகிறான்.

இவன் அல்லாஹ்வின் ஞானத்தையும் அடையாளங்களையும் பெற்றவனாயும், இவனுடைய இதயம் அல்லாஹ்வின் ஞானத்திலுள்ள

அரிய விஷயங்களைப் பெறுவதாயும், பிறருக்கு அறிவிக்கப்படாத விஷயங்கள் அல்லாஹ்வால் தனக்கு அறிவிக்கப் பெற்றவனாயும் இருப்பான். அல்லாஹ் இவனைத் தேர்ந்தெடுத்து, தன் பக்கம் இழுத்துக்கொண்டு, இவனுக்கு வழிகாட்டி தன்னை நோக்கி இவனை உயர்த்தி, இந்த ரகசியங்களை ஏற்குமளவுக்கு அவன் இதயத்தை விரிவாக்கித் தன் நோக்கிற்காக இவனைப் பாடுபடுபவனாக ஆக்கு வான். அல்லாஹ்வின் அடியார்களை நேர்மையின் பாதையில் அழைத்து, தீய செயல்களால் வரும் தண்டனையைப் பற்றி, எச்சரித்து, அவர்களிடையில் அல்லாஹ்வுக்காக வாதாடி, வழிகாட்டியாகவும், நேர்மையான வழிகாட்டப்பட்டவனாயும், மத்தியஸ்தம் ஏற்கப்படும் மத்தியஸ்தனாகவும், சத்தியவானாகவும், பிறரின் உண்மைகளை ஆராய்ந்து பார்ப்பவனாகவும், அல்லாஹ்வின் அருள் பெற்ற நபிமார்கள், ரஸூல்மார்களின் பிரதிநிதியாகவும் இவன் விளங்குவான்.

எனவே, இவன்தான் மானிட வர்க்கம் அடையக்கூடிய உச்ச மான, முடிவான, ஸ்தானத்தை அடைந்தவன் ஆவான். இதற்குமேல் நபித்துவமன்றி, வேறு ஸ்தானம் கிடையாது. அத்தகையவனை எதிர்க்காதபடியும் அவன் வெறுப்புக்கு ஆளாகாதபடியும், அவனை விட்டு விலகாதபடியும், அவனிடம் பகைமை பாராட்டாதபடியும், அவனை ஏற்காது ஒதுக்காதபடியும் அவன் சொல்வதையும், எச்சரிப்பதையும் கவனிக்கும் படியும் உன்னை நீ தயார் செய்துகொள். இத்தகையவன் சொல்வதற்குச் செவிமடுப்பதிலும் அவன் நட்பைப் பெறுவதிலுமே பாதுகாப்பு உண்டு. அவனை விலக்குவதால்–அல்லாஹ் சக்தியையும் உதவியையும் அருளினால் அன்றி–வழி தவறவும் அழிந்து படவும் இடம் உண்டாகும்.

உனக்காக நான் மானிடரை (நான்கு வகையினராக)ப் பிரித்துக் காட்டியுள்ளேன். கவனிக்கும் மனம் இருப்பின் நீயே உன்னுள் நோக்கு! உன் ஆத்மாவைக் காக்கும் எண்ணமிருப்பின், அவனிடம் பற்றுதல் இருப்பின் இங்குச் சொல்லப்பட்டுள்ளபடி நடக்கப் பழகிக்கொள். அல்லாஹ் நேசிப்பதன் பக்கல் அவனுக்குத் திருப்தி அளிப்பதன் பக்கல் இம்மையிலும் மறுமையிலும், நாமும் நீயும் சென்றடையுமாறு அல்லாஹ் அருள் புரிவானாக!

உபதேசம் முப்பத்து நான்கு

உன் இறைவனிடம் நீ கோபம் கொள்வதும், அவன் மீது குறை கூறுவதும், அவனை நிந்திப்பதும், அவன் நீதியோடு நடக்கவில்லை, உணவு அளிப்பதிலும் துயர்களை நீக்குவதிலும் தாமதம் செய்கிறான் என்று பழிப்பதும் விசித்திரமாய் இல்லையா! ஒவ்வொரு சம்பவத்துக்கும் உரிய நேசம் ஒன்று உண்டு. ஒவ்வொரு துயரத்துக்கும் படவேண்டிய கால அவகாசம் ஒன்று உண்டு என்று நீ அறிவாயா! இவற்றை முந்தவோ பிந்தவோ முடியாது. துயரம் அனுபவிக்க வேண்டிய காலம் சுகம் அனுபவிப்பதற்கு உரியதாகவும் கஷ்டமான நேரம் வசதியானதாகவும் ஆகாது. உயர்ந்த ஒழுக்கத்தைக் கடைப்பிடி. மௌனமாவும் பொறுமையாகவும், மனப்பூர்வமான–பணிவோடும் உன் இறைவனின் போக்கை அறிந்த தன்மையோடும் இருந்துவா! அல்லாஹ்விடம் கோபம் கொண்டதற்காகவும் அவன் செயல் குறித்து அவன் மீது குறை கூறியதற்காகவும் பாவமீட்சி தேடிக்கொள்!

அல்லாஹ்வின் சந்நிதியில் ஒருவருக்குச் சேர வேண்டியதைப் பூரணமாக கோருவதற்கோ, இயற்கையின் உந்துதலால் அவன் அடியார்களிடையில் பரஸ்பரம் ஏற்படுவது போன்ற தொடர்புகளில் பாவம் செய்யாது பதில் அடி கொடுப்பதற்கோ இடமே கிடையாது. இவனாகிய சர்வ சக்தியும் நிறைந்திருந்திய ஏகன் ஆதியும் அந்தமும் இல்லாதவன், பொருள்களையும் அவற்றின் நன்மை தீமைகளையும் அவனே படைத்துள்ளான். எனவே, அவற்றின் தொடக்கத்தையும் முடிவையும் நோக்கத்தையும் பலாபலன்களையும் அவனே அறிவான். அவன் தன் செயல்களில் மகா விவேகமுடனும் வஸ்துக்களை அமைப்பதில் உறுதியுடனும் இருப்பதால் அவன் செயல்களில் எந்த முரணையும் காணமுடியவில்லை. அவன் எந்தக் காரியத்தையும் ஓர் அர்த்தமின்றிச் செய்யமாட்டான். எந்தப் பொருளையும் ஒரு நோக்கமின்றி விளையாட்டுக்காகப் படைக்கமாட்டான். அவன் செயல்களில் குற்றம் குறை காண்பது சரியன்று. அவன் சித்தத்துக்கு இணங்கி நடப்பதில் நீ தளர்ச்சி அடைந்து இருப்பதால், உதவி வருவதற்காகக் காத்திருப்பதும், மனமுவந்து பணிவதும், அவன் சித்தத்தில் மூழ்கிவிடுவதும் நலம். தெய்வ

விதிப்பின் உரிய நேரம் வந்து காலத்தின் போக்கால் சோதனைகள் நேர் எதிர்மாற்றமாகி–அதாவது, குளிர் காலம் கடந்ததும் வேனிற்காலம் வருவது போலும், இரவு நகர்ந்ததும் பகல் வருவது போலும்–நல்ல நிலைமை வரும்வரை மேலே சொன்னபடி பொறுமையாய் இரு.

இருள் அதிகரித்து வரும் மாலை வேளையில் பகலின் வெளிச் சத்தைக் கேட்டால் கிடைக்குமா? அதற்குப் பகரமாய் இரவின் இருள் அதிகரித்துக் கொண்டே வந்து, சூரிய உதயத்துக்குரிய நேரம் வந்ததும் நீ கேட்டாலும் பகலின் வெளிச்சம் உண்டாகி விடுகிறதல்லவா? எனவே அந்த சூரிய உதய நேரத்தில் இரவு திரும்ப வேண்டும் என்று நீ பிரார்த்தித்தால் அது நிறைவேறுமா? எனினும், அகாலமான ஒன்றை நீ கேட்கிறாய். இதனால் நீ வருந்திப் புலம்பித் தலைகுனியவே நேரும். எனவே இவ்வாறான போக்கை விடுத்து, உன் இறைவனிடத்தில் நம்பிக்கை வைத்துப் பொறுமையைக் கைக் கொண்டு அவன் சித்தத்துக்கு இணங்கி நடந்துவா. உனக்குரியது உன்னிடமிருந்து பறிக்கப் படமாட்டாது; உனக்குரியதல்லாதது உன் னிடம் தரப்படவும் மாட்டாது. என் நம்பிக்கையின்படி இது இப்படித் தான் எனினும், அல்லாஹ்விடம் நீ கேட்டு, இரந்து, அவனிடம் மன் றாடி, அவனுக்குக் கீழ்ப்படிந்து அவன் கட்டளைகளை நிறைவேற்றி வந்தால் "என்னை அழையுங்கள்; நான் பிரார்த்தனைகளை ஏற்பேன் (40:60) என்றும், "அல்லாஹ்வின் உதவியைப் பெற அவனை நாடுங்கள்" (4 : 32) என்றும் அல்லாஹ் கூறியுள்ளபடியும் மற்றும் இது போன்ற திருகுர்ஆன் வசனங்கள், நபி பெருமான் (ஸல்) அவர்களின் வாக்கியங்களின்படியும் உரிய நேரத்தில் உன் பிரார்த்தனை ஏற்கப்பட்டு, உரிய நேரத்தில் அவன் நாடும் போதும் நீ கேட்பது கிடைக்கலாம்.

உன் பிரார்த்தனை ஏற்கப்படுவது தாமதமாவது குறித்து அவன் மீது குறை கூறாதே! நீ பிரார்த்தனை செய்வதில் தளர்ச்சி அடையாதே! இதனால் உனக்கு லாபம் இல்லாவிட்டாலுங்கூட நஷ்டமில்லை. உன் பிரார்த்தனையை அல்லாஹ் உடனடியாக இம்மையில் ஏற்காவிட் டாலும், மறுமையில் அதற்குரிய வெகுமதியை உனக்குத் தரவே செய்வான். கியாம நாளிலே தன் கையிலிருக்கும் விதிவசப் பட்டோலையில் தான் இனம்

காண முடியாத சில நற்செயல்கள் குறிக்கப்பட்டிருப்பதை ஒரு நல்லடியான் பார்ப்பானென்றும் அவை அவன் உலகில் இருந்த போது செய்த பிரார்த் தனைக்கு பகரமாக தாமதித்து அளிக்கப்பட்ட நன்கொடை என அப்போது அவனிடம் கூறப்படு மென்றும் ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, அவனிடம் எதையும் பிரார்த்திக்கும்போது அவனுடைய ஏகத்துவத்தில் கண்டிப்பான மெய்யுறுதி கொண்டு அவனை நினைவு கூர்வதும் மற்றும் யாரிடத்திலிருந்து எதையும் கேட்காதிருப்பதும் உன் தேவையை அவனையன்றிப் பிறரிடம் சொல்லாதிருப்பதும் உன் ஆத்மீக நிலையின் அரிச்சவடியாக இருக்கட்டும்! சகல சந்தர்ப்பங்களிலும் அல்லும் பகலும், ஆரோக்கியத்திலும், பிணியிலும், தொல்லையிலும், போகத்திலும், கஷ்டத்திலும், சுகத்திலும் கீழே கண்ட இரண்டு நிலைமைகளில் ஏதாவது ஒன்றில் நீ இருப்பாய்:

(1) குளிப்பாட்டுபவர் கையில் கிடக்கும் மையித்தைப் போலும், பாலூட்டும் தாதியிடம் கிடக்கும் குழந்தையைப் போலும், குதிரைமீது வரும் விளையாட்டுக் காரனால் அடிக்கப்படுவதற்காகக் கிடக்கும் போலோ பந்தைப் போலும், நீ ஏதும் கேளாது, மனத்திருப்தியும், பொருத்தமும் கொண்டவனாய் அவனிடம் சரணடைந்து இருப்பாய். தெய்வ விதிப்பு தன் விருப்பப்படி உன்னைத் திருப்பும். அது பாக்கியமானதாய் இருப்பின், நீ நன்றியும், புகழும் தெரிவிப்பாய். அதற்காக அல்லாஹ்விடமிருந்து அதிகமான பாக்கியம் உண்டாகும். "நிச்சயமாக நீங்கள் நன்றியுடனிருப்பின், உங்களுக்கு நான் அதிகமாக அருளுவேன்" (14:7) என்று அல்லாஹ்வே கூறியுள்ளான். தெய்வவிதிப்பு தருவது பாக்கியமானதாய் இன்றி கஷ்டமானதாய் இருப்பின், அதை ஏற்று அல்லாஹ் தரும் பலத்தின் உதவியால் பொறுமையுடன் இருந்து வருவாய், "நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான்" (2:153) என்று அல்லாஹ்வே கூறியுள்ளது போல, உன் பொறுமை காரணமாக உனக்கு கருணையையும் பாக்கியத்தையும் அருளுவான். அதாவது, அவன் பொறுமையுடையவர்களுக்குத் தன் உதவியையும் பலத்தையும் அனுப்புவான் நீங்கள் அல்லாஹ்வுக்கு உதவினால் அவன் உங்களுக்கு உதவுவான்; உங்கள் பாதங்களை ஸ்திரப்படுத்தி வைப்பான்".(47:7)

உன் கீழான உணர்ச்சிகளை எதிர்த்துச் சாடி, அவனைப் பற்றிக் குறை கூறுவதைக் கைவிட்டு, உன் விஷயத்தில் அவன் செய்வது பற்றி அதிருப்தி அடையலாம், அல்லாஹ்வுக்காக உன் கீழான மனதுக்கே நீ பகைவனாகி, அது தெய்வ நிந்தனை செய்யவோ, இணைவைக் கவோ தலை தூக்குகையில் உன் வாளால் அதை வெட்ட ஆயத்தமாயி ருந்து, உன் பொறுமையாலும், மனப் பொருத்தத்தாலும் அதன் தலையைத் துண்டித்து அவன் செயலிலும், வாக்குறுதியிலும் பூரணத் திருப்தி கொண்டவனாய் இருந்து வந்தால் அல்லாஹ் உன் உதவியாளனாவான். உனக்குக் கிடைக்கக் கூடிய கருணைக்கும் பாக்கியத்துக்கும் இதோ அவன் வார்த்தைகள் விவரந் தருகின்றன: "பொறுமையுடன் இருப்போருக்கு நன்மாராயங் கூறும்; தங்களுக்கு ஒரு துயர் உண்டானால் "நாங்கள் நிச்சயமாக அல்லாஹ்வுக்குரி யவர்கள், நிச்சயமாக அவனிடமே மீளவேண்டியவர்கள்" என்று இந்த பொறுமையாளர்கள் கூறுவார்கள். இவர்கள்மீதுதான் இவர்கள் இறைவனின் நல்லருள்களும் கருணையும் இறக்கப்படுகின்றன; இவர்களே நேரான வழியைப் பின்பற்றுவோராவர்."(2:155, 156,157)

(2) அப்படியின்றேல், அல்லாஹ்வின் முன் தொழுதிருந்து பணி; அவன் கட்டளைகளுக்குப் பணிந்து நட. அல்லாஹ்வை அழை. அதுவே ஒரு காரியத்தை உரிய முறையில் செய்வதாகும். ஏனெனில், அவனே அவனிடம் கேட்கும்படி சொல்கிறான். அவன் பக்கம் திரும்பு; அவனிடம் வேண்டுதல் விடுப்பதையே உன் மனம் ஆறுதல் பெற மார்க்கமாக்கிக் கொள்; அதையே அவனிடமிருந்து உன்னிடம் வரும் தூதனாக்கிக் கொள்; அதையே அவனோடு தொடர்புகொள்ளும் ஒரு மார்க்கமாகக் கொள். ஆனால், உன் பிரார்த்தனை ஏற்கப்படுவதற்கு உரிய காலம் வரும்வரை அது ஏற்கப்படாமல் இருப்பதற்காக அவன் மீது குறை கூறவோ, கோபம் கொள்ளவோ கூடாது. இரு நிலை களின்–வேண்டுதல் விடுப்பதன், குறை கூறுவதன்–வித்தியாசங் களை நன்கு உணர். எனவே, வரம்பு மீறுவோர் கூட்டத்தில் சேர்ந்து விடாதபடி விழிப்புடனிரு. அப்படி வரம்பு மீறினால் அவன் உன்னை ஹதம் செய்துவிடுவான்; அது பற்றி அவன் கவலை கொள்ளமாட்டான். இதற்கு முன்பு மக்கள் கூட்டத்தினர் பலரை,

இம்மையில் அவர்கள் துயர்களை அதிகரித்துக் கடைசியில் அழித்தான்; மறுமையிலும் தண்டனையை விதித்தான். அதை மறவாதே. அல்லாஹ்" அக்பர்! ஹே என் நிலையை உணர்ந்தவனே, உன்னையே பூரணமாக நம்பியுள்ளேன்.

உபதேசம் முப்பத்து ஐந்து

விலக்கப்பட்டவற்றை ஒதுக்க வேண்டுவது உன்னுடைய கடமையாகும். இன்றேல் அழிவுக் கயிறு உன்னைச் சுற்றிக் கொள்ளும். அல்லாஹ்த் தஆலா கருணை கூர்ந்தாலன்றி நீ அதிலிருந்து விடுபட முடியாது. விலக்கப்பட்டவற்றை விட்டும் அப்பாலாவது சன்மார்க் கத்தின் அடிப்படையாகும் என்றும், பேராசை சன்மார்க்கத்தின் அடிப்படையை தகர்த்துவிடும் என்றும் , பாதுகாக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் ஒன்றைக் காணும் யாரும், வளமான வயலின் பக்கம் செல்லும் ஆடு மாடுகள் தம் வாயை நீட்டி அவற்றைக் கடிக்க முயல்வதுபோல, அதில் மேயத் தொடங்கிவிடக் கூடும் என்றும் ஒரு ஹதீஸில் சொல்லப்பட்டுள்ளது. இந்த மேய்ச்சல் நிலம் இத்தகையவனிடமிருந் தும் பாதுகாப்பானதாக இருப்பது இயலாது. "விலக்கப்பட்டவற்றில் கைப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஆகுமானவற்றிலும் பத்தில் ஒன்பது பங்கை நாங்கள் விலக்கிக் கொள்வதுண்டு" என்ற ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள். "பாவத்தில் அகப்பட்டுக் கொள்ளாது தவிர்த்துக் கொள்வதற்காக அனுமதிக்கப் பட்டவற்றின் எழுபது வாயில்களை நாங்கள் மிதிக்காது ஒதுங்கிக் கொள்வது உண்டு" என்று ஹஜ்ரத் அபூபக்கர் ஸித்தீக் (ரலி) அவர்கள் மொழிந்துள்ளார்கள்.

விலக்கப்பட்டவற்றை நெருங்கவே கூடாது என்று தான் இப் பெரியவர்கள் இப்படிச் செய்துள்ளார்கள். இப்படிச் செய்ததிலும், "எச்சரிக்கை, ஒவ்வோர் அரசனுக்கும் பாதுகாக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் உண்டு. அல்லாஹ்வின் பாதுகாக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் அவன் விலக்கியுள்ள விஷயங்கள்தாம்" என்ற நபி பெருமான் (ஸல்) அவர்கள் ஹதீஸ்படியே நடந்துள்ளார்கள்.

எனவே, மேய்ச்சல் நிலத்தை நெருங்குவோர் அதனுள் புகுந்து விடுவர், ஆனால், அரசனின் மாளிகையுள் நுழைந்து அதன் முதலாம்,

இரண்டாம் வாயில்களைக் கடந்து மூன்றாம் வாயில் முன் நிற்பவன், வெளிப்புறம் திறந்த வெளியே ஒட்டியுள்ள முதல் வாயிலி லேயே நின்று கொண்டிருப்பவனை விடச்சிறந்த நிலையில் இருப்பவ னல்லவா! அவன் முன் உள்ள மூன்றாம் வாயிலின் கதவு அடைபட்டுவிடினும், அவனுக்கு ஆபத்து எதுவுமில்லை. அவனுக்குப் பின்தான் இரண்டு வாயில்கள் உள்ளனவே! அவனுக்கு அருகில் அரசனின் பொக்கிஷ அறைகளும் பட்டாளங்களும் இருக்கின்றனவே! ஆனால், முதல் வாயிலுக்கும் வெளியில் நிற்பவனே, அவ்வாயில் அடைபட்டதும் திறந்த வெளியில் தனிமையில் நிற்பான். ஓநாய்களும் பகைவர்களும் அவனைக் கொன்றழித்துவிடலாம். இது போலவே, அல்லாஹ்வினால் விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்பவன், தனக்கு தரப்பட்ட உதவி களும் சலுகைகளும் தன்னிடமிருந்து அகற்றப்படினும் மனங்கலங்க மாட்டான். சட்டத்துக்கு வெளியிலானவனாய் இருக்க மாட்டான். எனவே, அவனுக்கு மரணம் வந்துற்றால், அவன் பணிவும் சேவையும் உடையவனாகக் கணிக்கப்பட்டு அவன் நற்செயல்கள் அதற்குச் சாட்சி தரும்.

தன் கடமையான காரியங்களையும் செய்யாது ஆரம்பத்திலேயே ஒய்வடைந்தவனாய் இருப்பவனோ, அவனுக்குத் தரப்பட்ட பாக்கியங்கள் பறிக்கப்பட்டதும், அல்லாஹ்வின் உதவியிலிருந்தும் துண்டிக்கப் பட்டவனாவான். கீழான ஆசைகளும் மிருக இச்சைகளும் அவனை ஆட்கொள்ளும்; சன்மார்க்க நெறிமுறைக்கு முரணாக நடப்பான்; அல்லாஹ்வின் பகைவர்களான ஷைத்தான்கள் கூட்டத்தில் சேருவான். நேர்மையான பாதையை விட்டு வெகு தூரம் விலகிப் போவான். இந்த நிலையில் பச்சாதாபப்பட்டுத் திருந்துமுன் அவன் இறந்தால் அல்லாஹ் தன் கருணையால் அவனை மறைத்தாலன்றி, அவன் அழிந்துபட்டவர்கள் கூட்டத்தில் சேர்ந்தவனேயாவான். எனவே, ஒய்வாக இருப்பதால்தான் சகல ஆபத்துக்களும் உண்டாகின்றன; கடமையான காரியங்களைச் செய்வதில்தான் பாதுகாப்பு உண்டு என்பதை உணர்ந்துகொள்.

உபதேசம் முப்பத்து ஆறு

உன் மரணத்துக்குப் பின்னுள்ள வாழ்வை முதலீடாகவும், இவ்வுலக வாழ்வை அதன் லாபமாகவும் கருது. முதலில் மரணத்துக்கு பின்னுள்ள

வாழ்வுக்கு ஆனதைத் தேடிக்கொள். அதன்பின், நேரமிருப்பின் இவ்வுலகுக்கான தேவைகளை, உன் ஜீவனோபாயங்களைத் தேடு, இவ்வுலக வாழ்வை முதலீடாகவும், மறு உலக வாழ்வை லாபமாகவும் கருதாதே! மறுஉலக வாழ்வுக்காகப் பின்னர் நேரம் கிடைத்தால் பார்த்துக் கொள்ளலாம். அப்போது உன் ஐங்கால தொழுகையைத் தொழுது கொள்ளலாம் என்று இருந்து விடாதே! உனக்கோ களைப்பு உண்டாகித் தூக்கம் வந்தால் யாவையும் போட்டுவிட்டுப் பிரேதம்போல் இரவில் தூங்கிப்போகிறாய்; பகலிலோ உன் ஆசாபாசங்களுக்கும், மிருக இச்சைக்கும், ஷைத்தானுக்கும் பணிந்து, மறுமையை இம்மைக்காக விற்று உன் கீழான மனத்துக்கு அடிமையாகி, அது உன்மீது சவாரி செய்யும் மிருகமாகிப் பொழுதை போக்கிவிடுகிறாய். நீயோ உன் கீழான மனத்தை அடக்கி, அதன்மீது சவாரி செய்து அதை வசமாக்கி, பாதுகாப்பான பாதையில் அதை இட்டுச்சென்று, அதன் இறைவனுக்கு அதை அடிபணிந்ததாக, நிரந்தரமான வாழ்க்கைக்கு நடத்தாட்டிச் செல்ல வேண்டியவனாவாய். ஆனால், அதன் தூண்டுதலுக்குப் பலியாகி நீ அநியாயமாக நடந்து கொள்கிறாய்; அதன் கடிவாளத்தை அதனிடமே ஒப்படைத்துவிட்டாய்; அதன் கீழான ஆசைகளிலும் அனுபோகங்களிலும் அதை பின் தொடர்ந்தாய்; அதன் ஷைத்தானுடனும், விகாரத்துடனும் நீ கூட்டுச் சேர்ந்து கொண்டுள்ளாய் அதனால் இம்மையிலும் மறுமையிலுமுள்ள சிறந்தவற்றை நீ இழந்தவனாகிவிட்டாய். இவை இரண்டிலுமே நீ நஷ்டவான் தான். இதனால் இறுதித் தீர்ப்பு நாளிலே நீ மானிடரில் பரமதரித்திரனாகவும், மார்க்கத்தில் மகத்தான நஷ்டவாளியாகவும்–அதைப் பின்பற்றாததால், இவ்வுலகில் உனக்கு உரியதை இழந்த வனாகவும்–காணப்படுவாய். ஆனால் அதனுடன் நீ மறுமையின் பாதையில் நடந்திருப்பாயானால், அதை உன் முதலீடாக வைத்துப் பயன்படுத்தியிருப்பாயானால் இம்மையிலும் மறுமையிலும் லாபமடைந்தவனாய் இருந்திருப்பாய்; இவ்வுலகில் உனக்கு விதிக்கப்பட்ட நல்லவையாவும் மரியாதையோடு உன்னை வந்து அடைந்திருக்கும்; மதிப்புக்கும் பாதுகாப்புக்கும் உரியவனாய் காத்திருப்பாய். "மறுமை பற்றிய நாட்டத்தால் இம்மையில் அல்லாஹ் மகிழ்ச்சி அடைகிறான்; ஆனால், இவ்வுலக வாழ்வு பற்றிய நாட்டத்தால் மறுமையில் மகிழ்ச்சி

அளிக்கப்படுவதில்லை" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். இது வேறு எப்படித்தான் இருக்க முடியும்? மறுமை பற்றிய நாட்டம் என்பது அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதாகும். ஏனெனில், நாட்டம்(நிய்யத்) தான் சேவையின் ஆத்மாவும் ஜீவனுமாகும். எனவே, இவ்வுலக வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கி, மறுமையின் ஸ்தானத்தைத் தேடுபவனாகி அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படிந்தால், அல்லாஹ்வால் தேர்ந்து எடுக்கப்பட்டோரில் ஒருவனாவாய்; மறுமைக்குரிய சொர்க்கமும் அல்லாஹ்வுக்கு அருகிலாதலும் கிட்டும். உலகம் உன் சேவைக்காகக் காத்து நிற்கும்; அதில் உனக்காக ஒதுக்கப்பட்டது பூரணமாக உனக்குக் கிடைக்கும். ஏனெனில் யாவுமே ரப்புல் ஆலமீனான அல்லாஹ்வுக்குக் கட்டுப்பட்டவைதாம். இம்மையின் வாழ்வில் மூழ்கியவனாக, மறுமையைப் பற்றிய ஆவல் அற்று இருந்தால் இறைவன் உன் மீது கோபம் அடைவான். மறுமையின் நல்வாழ்வை நீ இழப்பாய்; இவ்வுலகம் உனக்கு பணியாது; உனக்குரிய பங்கு கிடைப்பதிலும் தொல்லைகளும், தடைகளும் உண்டாகும்; ஏனெனில் மறுமையும் இம்மையில் உனக்கு ஒதுக்கப்பட்ட பங்குமே அல்லாஹ்வுக்கு உரியவைதாம். அவனுக்கு உன் மீது கோபம் வந்தால் அவன் இவற்றையும் சரியாகக் கிடைக்கவிட மாட்டான். அவனுக்குப் பணியாத யாரையும் அவன் இவ்விதமே செய்கிறான்.

"இம்மையும் மறுமையும் இரு மனைவியரைப் போல; ஒருத்தியை நீ மகிழ்விக்க எண்ணினால் மற்றவள் உன்னிடம் கோபமாகிறாள்" என்று நபி பெருமானார் அருளிய ஹதீஸ் ஒன்று உண்டு. "நிச்சயமாக உங்களில் இவ்வுலக வாழ்வை விரும்புபவர்களும் உண்டு; மறுமையை விரும்பும் மற்றோரும் உண்டு" என்று திருக்குர்ஆனில் கூறப்பட்டி ருக்கிறது. இவர்கள் முறையே இவ்வுலகின் குழந்தைகள் என்றும், மறுஉலகின் குழந்தைகள் என்றும் அழைக்கப்படுகின்றனர். இவ்வுலகிலிருக்கும்போது, இவ்விரு கூட்டத்துக் குழந்தைகளிலும் நீ எந்தக் கூட்டத்துக் குழந்தைகளைச் சேர்ந்தவனாய் இருக்கப் போகிறாய்? நீ மறுமையை அடைகையிலோ அங்கே ஒரு கூட்டம் சொர்க்கத்திலும், ஒரு கூட்டம் நரகிலும் இருப்பதைக் காண்பாய். அப்போது ஒரு பகுதி மக்கள்,

அல்லாஹ்வின் வார்த்தைகளில் சொல்லுவதுபோலப் பதினையாயிரம் ஆண்டுகள் எனத் தகும் அத்தனை நீண்ட நேரம், நிறுத்தப்பட்டவர்களாய்க் கேள்வி கணக்கு களுக்கு உள்ளாவார்கள். அதே சமயத்தில் இன்னொரு பகுதி மக்கள் உணவு உண்ணுமிடத்தில் கூடியிருப்பார்கள். அவர்கள் முன் நல்ல உணவும் பழங்களும் பனிக்கட்டியைவிட வெண்மையான தேனும் வைக்கப்பட்டிருக்கும். "அவர்கள் சொர்க்கத்திலுள்ள தமது வாசஸ்தலங்களை நோக்கிக் கொண்டே இருப்பார்கள். தாங்கள் கொடுக்க வேண்டிய கணக்குகளிலிருந்து விடுபட்டதும் அவர்கள் சொர்க்கத்துள் நுழைவார்கள். இவ்வுலகில் ஒரு மனிதன் எப்படி வெகு சகஜமாகத் தன் வீட்டை நோக்கிப் போவானோ, அப்படியே அவர்களும் வெகு சாதாரணமாக அவர்களுடைய வாசஸ்தலங்களை நோக்கிச் செல்வார்கள்" என்று ஹதீஸில் கூறப்பட்டுள்ளது. இவர்கள் இம்மையை உதறித் தள்ளி, மறுமையையும் தன் எஜமானனையும் அடையும் முயற்சியிலேயே தம்மை ஈடுபடுத்தியவர்களாய் இருந்தபடியாலேதான் இவர்களுக்கு இந்த அந்தஸ்து அளிக்கப்பட் டுள்ளது. மற்றக் கூட்டத்தினரோ இம்மையையும் அதனோடுள்ள ஆசாபாசங்களையும் பற்றிப் பிடித்துக் கொண்டு, மறுமையைப் பற்றி அலட்சியமாகி, அதுபற்றிக் கவனமே செலுத்தாது, நீதித் தீர்ப்பு நாள் பற்றிய சிந்தனையே அற்று, வரப்போகிற நாட்களில் தங்கள் போன்றார்க்கு என்னென்ன நேர இருக்கின்றன என்ற திருகுர்ஆன், ஹதீஸ் எச்சரிக்கைகளையும் கவனியாது இருப்பதால் பலவிதமான தொல்லைகளுக்கும் சங்கடங்களுக்கும் ஆளாக்கப்படுகின்றனர். எனவே, உன் ஆத்மாவை அன்போடும் கருணையோடும் நோக்கு; இவ் விரு கூட்டத்தினருடைய நிலையிலும் சிறந்ததை உன் ஆத்மாவுக்குப் பெற்றளி; தீய நண்பர்களிடமிருந்தும், ஜின்களிலும் மனிதரிலும் அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியாதவர்களிடமிருந்தும் அதை அப்பாலாக்கு. அல்லாஹ்வின் திருமறையையும், நபியின் முன்மாதிரியையும் உன் வழிகாட்டியாகக் கொள்; இவ்விரண்டையும் கவனமாகக் கற்று, சிந்தித்து இவற்றின்படி நட, பேராசையாலும் வெறும் பேச்சாலும் ஏமாற்றத்துக்கு ஆளாகாதே! "திருத்தூதர் கொண்டு வந்துள்ளதை மனமுவந்து ஏற்றுக் கொள்ளுங்கள்;

அவர்கள் விலக்கியதை நீங்களும் ஒதுக்கி விடுங்கள்; அல்லாஹ்வுக்கு நீங்களும் செய்ய வேண்டிய கடமையில் விழிப்போடு இருங்கள்!' (59 : 7) என்று அல்லாஹ் சொல்லி உள்ளான். அவர்கள் கொணர்ந்ததன்படி நடப்பதில் தவறிவிடாமலி ருக்கும் பொருட்டு, அவர்கள் நடந்ததற்கு எதிரிடையாக நடவாதே! செயல்களிலும் சேவையிலும் உன் கீழான மனத்தின் இஷ்டப்படியான அல்லாஹ்வுக்கு மாறான காரியங்களைச் செய்யாதே! நேரிய பாதையை விட்டு விலகிய ஒரு கூட்டத்தினரைப் பற்றி அல்லாஹ் குறிப்பிடுகையில், "மடாலயத் துறவை நாம் அவர்கள் மீது கடமையாக விதிக்கவில்லை; எனினும், அல்லாஹ்வைத் திருப்தி செய்வதாக நினைத்துக்கொண்டு அவர்கள் அதை உண்டுபண்ணிக் கொண்டார் கள்" (57 : 27) என்று கூறுவதைக் கவனித்துப்பார்! எனவே, அவன் தன் தூதரைப் பரிசுத்தப்படுத்தி அவர்களைப் பொய்மையின் பக்கமிருந்து அப்பாலாக்கி வைத்தான். "அவர் தன் இஷ்டப்படி எதை யும் பேசவில்லை; அவருக்கு அருளப்பட்ட தெய்வ வெளிப்பாடுகளே யன்றி இவை வேறல்ல" (52: 3,4) என்று அல்லாஹ் கூறியுள்ளான். அதாவது: அவர் கொண்டுவந்த யாவும் என்னிடமிருந்து வந்தவைதாம். அவை அவர் உள்ளத்திலிருந்தோ, அவர் இஷ்டத்தாலோ உண்டானவையல்ல; ஆகவே அவற்றைப் பின்பற்றுங்கள்" என்று பொருள்படும்படி இந்த வசனத்தில் பேசியுள்ளான், "நீங்கள் அல்லாஹ்வை நேசிக்கிறீர்களா? அப்படியாயின் என்னைப் பின்பற்றுங்கள்; (அப்போது) அல்லாஹ் உங்களை நேசிப்பான் என்று கூறும்" (3 : 31) எனவும் அவன் கூறி உள்ளான். இதனால் சொல்லிலும் செயலிலும் அவர்களைப் பின்பற்றுவதுதான் அன்புப்பாதையில் நடப்பது என்பது தெளிவாகிறது.

"தாபமடையவது என் பாதை; அல்லாஹ்விடம் நம்பிக்கை கொண்டிருப்பது என் நிலை" என்று நம் பெருமான்(ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள். எனவே, நீ அவர்கள் அனுஷ்டானத்துக்கும், நிலைக்கும் இடையிலுள்ளாய். உன் மெய்விஸ்வாசம் பலஹீனமாய் இருப்பின், அவர்கள் அனுஷ்டானமான தாபமடைவதைப் பின்பற்று; உன் மெய்விஸ்வாசம் பலம் உடையவதாய் இருந்தால், அல்லாஹ்விடம் நம்பிக்கை கொண்டிருப்பதான உன் நிலையை நீ அடை. "அல்லாஹ்விடமே

நீ பரஞ்சாட்டுதல் வைக்க வேண்டும்" என்று அல்லாஹு ஸுப் ஹானஹுவ தஆலா கூறியுள்ளான். "அல்லாஹ்வை நம்புபவர்களுக்கு அல்லாஹ் போதுமானவனாய் இருக்கிறான்" (65 : 3) என்றும், "நிச்சயமாகத் தன்னிடம் நம்பிக்கை வைப்போரை அல்லாஹ் நேசிக்கிறான்" (3 : 159) என்றும் அவன் கூறியுள்ளான் எனவே தன்னிடம் நம்பிக்கை வைக்கும்படி அவன் உத்தரவிடுகிறான். நபிபெருமான் (ஸல்) அவர்களை அதைப் பற்றிப் பிடிக்கும்படி அவன் உத்தரவிட்டதுபோல, நீயும் அதைப் பற்றிப் பிடித்தவனாய் இருக்க வேண்டும் என்று அவன் வற்புறுத்துகிறான். "நம் அனுமதி இல்லாத எந்த ஒரு காரியத்தையும் எவனொருவன் செய்யினும் அவன் ஒதுக்கப் படுவான்" என்று ஹதீஸில் வந்துள்ளது. இது ஜீவனம், செயல்கள், வார்த்தைகள் யாவுக்குமே பொருந்தும். நமக்கு அவர்களைத் தவிர நாம் பின்பற்றத் தக்க வேறு தூதர் இல்லை. திருகுர்ஆனையன்றி நாம் ஒழுகுவதற்கு வழி காட்டியாகக் கொள்ளக்கூடிய வேதம் வேறு இல்லை. எனவே, இவை இரண்டையும் மீறாதே! அப்படி மீறினால் நீ அழிவதுடன் உன் இச்சைகளும், ஷைத்தானும் உன்னை வழி தவறச் செய்துவிடும். "அல்லாஹ்வின் பாதையிலிருந்து உம்மை வழிகெடுத்து விடாமலிருக்கும் பொருட்டு இச்சைகளின் போக்கில் நடவாதிரும்" (38:26) என்கிறது திருகுர்ஆன். எனவே, அல்லாஹ்வின் வேதத்திலும், அவன் தூதரின் அனுஷ்டானத்திலும்தான் பாதுகாத்தல் உண்டு. மற்ற யாவும் அழிவையே உண்டாக்குவன இவ்விரண்டின் உதவிகொண்டு தான் அல்லாஹ்வின் அடியான் விலாயத், பதாலியத் கௌதிய்யத் ஆகிய நிலைகளுக்கு உயர்கிறான்.

உபதேசம் முப்பத்து ஏழு

மெய்விஸ்வாசியே, உன் அண்டை வீட்டான் உண்பதையும், குடிப்பதையும், மணப்பதையும், வசிப்பதையும், செல்வத்தில் திளைப் பதையும், தன் எஜமானன் அளித்ததை அனுபவிப்பதையும் கண்டு நீ ஏன் பொறாமை கொள்கிறாய்? அதனால் உன் மெய்விஸ்வாசம் பலஹீனப்படுவதை நீ அறிவாயா? எஜமானின் பார்வையில் நீ மதிப்புக் குறைந்தவனாகி அவன் வெறுப்புக்கு ஆளாவதை நீ உணர வேண்டாமா? "பொறாமைக்காரன் நம் பாக்கியத்தின் பகைவன்" என்ற அல்லாஹ்வின்

வாக்கை நபி பெருமான் (ஸல்) அவர்கள் வெளியிட்டுள்ளதை நீ கேள்விப்பட்டதில்லையா? "நெருப்பு விறகை உண்பது போல, நிச்சயமாகப் பொறாமை நற்பண்புகளை உண்டு விடுகிறது" என்று நபி பெருமான் (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை நீ அறிவாயா?

அப்படியிருக்க, வறியவனே, எதற்காகப் பொறாமை கொள்கிறாய்? உனக்குக் கிடைக்காதது அடுத்தவனுக்குக் கிடைத்தற்காகவா? அவனுக்கு அல்லாஹ் ஒதுக்கிய பங்குக்காக அதன்மீது பொறாமை கொள்கிறாய் என்றால், "அவர்களிடையில் இம்மை வாழ்க்கைக்குரிய வசதிகளை நாம் பகிர்ந்தளிக்கிறோம்" (43: 32) என்ற அவன் வாக்கின்படியே உனக்கும் பகிர்ந்து தரப்படுகிறது என்பதை நீ உணரவேண்டும். அல்லாஹ் விசேஷமாக அளித்துள்ள, அவனுக்குரிய பங்காகப் பகிர்ந்து கொடுத்துள்ள செல்வத்தை அல்லாஹ்வின் நன்கொடையாகப் பெற்று அனுபவிக்கும் ஒருவன் மீது நீ பொறாமை கொள்வது நிச்சயமாக அநீதியானது தான். அந்தப் பங்கில் வேறு யாருக்கும் உரிமையில்லை என்பதை நீ உணரவேண்டாமா? இப்படிப் பொறாமைப் படும் உன்னை விடப் பெரிய மூடனும் தரித்திரனும் வேறு யாரும் இருக்க முடியுமா? உனக்குத் தரப்பட்ட பங்குக்காக நீ அவன்மீது பொறாமைப்படுகிறாய் என்றால் நீ முற்றும் அறியாமை குடிகொண்டவன் என்பதையே அதன் மூலம் காட்டிக் கொள்கிறாய். ஏனெனில், உனக்குரிய பங்கு மற்றொருவருக்கு மாற்றப்பட்டோ, தரப்படவோ மாட்டாது அல்லவா! அல்லாஹ் அத்தகைய அநீதியைச் செய்வதே இல்லை. "என்னுடைய கட்டளை என்னிடம் மாற்றப்படுவதில்லை. என் அடியார்களிடம் நான் அநீதியாய் நடந்து கொள்வதில்லை" (50:29) என்று அல்லாஹ் கூறுகிறான். உனக்கு விதித்ததை உன்னை விட்டு அகற்றி வேறு யாருக்கும் கொடுத்துவிடும் அளவுக்கு நிச்சயமாக அல்லாஹ் அநீதிக்கார னல்லன். அப்படி எண்ணுவது உன் அறியாமையைக் காட்டுவதுடன்; உன் சகோதரனுக்கும் நீ அநீதியிழைப்பதாகும்: அவன் மீது நீ பொறாமை கொள்வதைவிட இப்பூமியைக் கண்டே நீ பொறாமைப் படலாமே. ஏனெனில், இதில் பல்வகையான தங்கம், வெள்ளி, ரத்தினம், வைரக் கற்கள், முந்திய நாளைய ஆத், ஸமூது போன்ற மன்னர்கள், சக்கரவர்த்திகளின் செல்வங்கள் யாவும் மறைந்து கிடக்கின்றன வல்லவா!

ஓர் அரசன் பெரும் படையுடனும், ராஜ்ஜியத்துடனும், தன் ராஜ் ஜியம் முழுவதிலுமுள்ளவர்களை அதிகாரஞ் செய்து, வரி வசூல் முதலியவை செய்து கொண்டும், தன் நன்மைக்காகப் பிரஜைகளைப் பயன்படுத்திக் கொண்டும் பலவகையான இன்பங்களுடன் வாழ்க்கை நடத்திக் கொண்டும் இருக்கிறான்! இத்தகைய மன்னனைக் கண்டு பொறாமைப்படாமல் இவனிடமுள்ள ஒரு நாயைக் கண்டு–அரசனின் ஒரு நாய்க்குக் கீழ் உள்ள ஒரு நாயைக் கண்டு–அந்த நாய்க்கே தொண்டு செய்து அது விட்டுச்செல்லும் எச்சிலை உண்டு வாழும் ஒரு நாயைக் கண்டு ஒருவன் பொறாமைப்படுகிறான்; அதனுடன் பகைமை பாராட்டுகிறான்; அது சாகவேண்டும், அது செத்தபின் அதன் ஸ்தானத்தில் தான் இருக்கவேண்டும் என்று விரும்புகிறான் என்றால் எப்படியிருக்கும். இத்தகைய பொறாமைக்காரனாகவே நீ இருந்து வருகிறாய். இத்தகையவனைவிட, இத்தனை காலத்திலும் ஒரு பெரும் மூடன்–அறிவிலி இருந்திருக்க முடியுமா?

வறியவனே, அல்லாஹ் தனக்கு அளித்துள்ளவற்றில் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடவாமல், அல்லாஹ்விக்குச் செய்ய வேண்டிய கடமையில் தவறினால் உன் அண்டை வீட்டானும், அவன் ஏவல் விலக்கல்களின்படி ஒழுகாததற்காக நீதித்தீர்ப்பு நாளில் நீளமான கணக்குச் சொல்ல வேண்டியதிருக்கும் என்பதை நீ அறிவாயா? அப்போது கிடைக்கும் தண்டனையால் அவன், இப்போது தனக்குத் தரப்பட்டுள்ள சுகபோகங்களில் ஒரு துளியேனும்கூடத் தனக்குத் தரப்படாமல் இருந்திருப்பின் நலமாய் இருந்திருக்குமே, எந்தச் சுகத்தையும் போகத்தையும் தான் அனுபவிக்காமல் இருந்திருக்க கூடாதா என்று வருந்துவான். ஹதீஸில் இதுபற்றிச் சொல்லப்பட்டுள்ளது என்ன என்று உனக்குத் தெரியாதா? "நீதித் தீர்ப்பு நாளில் சங்கடக்காரர்கள் அனுபவிக்கும் தண்டனைகளைக் காண்பவர்களில், தமது உடலில் இருந்து கத்தரியால் சதையை மட்டும் பிய்த்து எடுத்துவிட்டால்கூட நலமே என்று எண்ணும் கூட்டத்தாரும் நிச்சயமாக இருக்கவே செய்வார்கள்" என்கிறது ஹதீஸ். எனவே உன் அண்டை வீட்டான் நீதித் தீர்ப்பு நாளில் தனக்கு வருகிற தண்டனை யைக் காணும் போது தான் கொடுக்க வேண்டிய

நீண்ட கணக்கையும், தான் இம்மையில் அனுபவித்த சுகத்துக்குப் பகரமாய் அன்றையக் கொதிக்கும் வெயிலில் ஐம்பதினாயிரம் ஆண்டுகள் நின்று துடிக்கவேண்டியிருப்பதையும் பார்க்கும்போது அதே சமயம் நீ இவற்றையெல்லாம் விலகி அல்லாஹ்வின் இருக்கையின் நிழலில் ஒதுங்கி இருப்பதையும், நீ இம்மையின் காட்டிய சகிப்புத்தன்மைக்கும், பொறுமைக்கும் கஷ்டங்களிடையிலும் மனத்திருப்தியுடனிருந்த மைக்கும் பகரமாக உனக்கு அங்கே நல்ல பானங்களும், உணவு சுகமும், மகிழ்வும் இருப்பதையும் காணும்போது இம்மையிலும் தானும் உன் நிலையிலேயே இருந்திருக்ககூடாதா என்று (உன் அண்டை வீட்டான்) ஏங்குவான். எனவே துயரங்களை எதிர்நோக்குவதில் சகிப்புத் தன்மையும் பொறுமையும் காட்டி, அவன் பாக்கியங்களுக்காக நன்றி விசுவாசத்துடனிருந்து, சர்வலோக ரக்ஷகனிடம் தம் விவகாரங் களை ஒப்படைத்து முற்றும் சரணடைந்த அடியார்களின் கூட்டத்தில் நாமும் நீயும் சேருமாறு அல்லாஹ் அருள்புரிவானாக!

உபதேசம் முப்பத்து எட்டு

அல்லாஹ்வின் வேலையை உண்மையுடனும், உளப் பூர்வமாகவும் நிறைவேற்றுபவன், அவனல்லாதவை பற்றி அல்லும் பகலும் அஞ்சி ஒதுங்கியவனாகவே இருப்பான். ஏகத்துவத்தை பிரகடனப்படுத்தி, அவனுடன் எதையும் இணை வைக்காது உன்னைத் தாக்க வரும். ஆனால், கொல்லாது புண்படுத்தும்–தெய்வ விதிப்பின் அம்புகள் பூரணமாய் உன்னைத் தாக்க இடங்கொடுத்து வா! அல்லாஹ்வுக்காக அழிபவர்கள் அவனிடமிருந்து அதற்கான ஈட்டைப் பெறுவர்.

உபதேசம் முப்பத்து ஒன்பது

அல்லாஹ்வின் உத்தரவின்றி ஆசையால் தூண்டப்பட்டு எதை யும் எடுத்துக் கொள்வது கடமையை விட்டு வழுவுவதும், சத்தியத்தை எதிர்ப்பதுமாகும்; ஆசையால் தூண்டப்படாது எதையும் எடுப்பது உண்மையுடன் இணக்கமானதும் ஒத்ததும் ஆகும்; இதை ஒதுக்குதல் உண்மையற்ற நயவஞ்சக நிலையுமாகும்.